# பொருளடக்கம்


| வ. எண். | இயல் | |
|---|---|---|
| 1. | கிளவியாக்கம் | |
| 2. | வேற்றுமையியல் | |
| 3. | வேற்றுமை மயங்கியல் | |
| 4. | விளி மரபு | |
| 5. | பெயரியல் | |
| 6. | வினையியல் | |
| 7. | இடையியல் | |
| 8. | உரியியல் | |
| 9. | எச்சவியல் | |
| | வினாவங்கி | |
| | மாதிரி வினாத்தாள் | |

# தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் மூவகை இலக்கணங்களையும் தெளிவுபட விளக்குகிறது. எழுத்ததிகாரத்தில் எழுத்துக்களின் இலக்கணம் கூறிய பிறகு அவ்வெழுத்துக்களால் உருவாகும் சொற்களின் இலக்கணங்களைச் சொல்லதிகாரத்தில் விளக்குகிறார் தொல்காப்பியர். எழுத்துக்களால் ஆகிய சொற்கள் தொடராகும் நிலை, அதில் இடம்பெறும் சொற்களின் வகைப்பாடு ஆகியவற்றை விளக்கமுற எடுத்துரைப்பது சொல்லதிகாரம் ஆகும்.

தொல்காப்பியத்தின் இரண்டாவது அதிகாரம் சொல்லதிகாரம் ஆகும். இது ஒன்பது இயல்களைக் கொண்டது. அவை, ***1.கிளவியாக்கம் (61) 2. வேற்றுமையியல் (22) 3.வேற்றுமை மயங்கியல் (34) 4.விளிமரபு (37) 5. பெயரியல் (43) 6.வினையியல் (51) 7.இடையியல் (48) 8.உரியியல் (100) 9.எச்சவியல் (67)*** என்பன ஆகும். இதில் 463 நூற்பாக்கள் அடங்கியுள்ளன.

# *இயல் -1*

# கிளவியாக்கம்

## பெயர்க்காரணம்

கிளவி - சொல். மொழியின் பயன்பாட்டிற்கு ஏற்ப சொற்களை ஆக்கிக் கொள்வது கிளவி ஆக்கம். சொற்கள் பொருட்கள் மேல் ஆகிவரும் நிலைகளை உணர்த்துவதால் கிளவியாக்கம் எனப்பட்டது.

‘நொய்யும் (தவிடும்), நுறுங்கும் (குறுனை) நீக்கி அரிசி அமைத்தாரை அரிசி ஆக்கினார் என்பது போலக் குற்றம் களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் இது கிளவியாக்கம் ஆயிற்று என்பார் சேனாவரையர்.

“கிளவிகள் பொருள் மேல் ஆமாறு உணர்த்தியமையால் கிளவி ஆக்கம் என்னும் பெயர்த்து” என்பார் இளம்பூரணர்.

கிளவியாக்கம் என்பது சொல்லினது தொடர்ச்சி என்றவாறு என்பர் தெய்வச் சிலையார்.

கிளவி என்பது சொல். ஆக்கம் என்பது சொற்கள் பொருட்கள் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் எனப் பெயர் பெற்றது என்பர் கல்லாடர். கிளவி என்பதனுள் தனிமொழியும், தொடர்மொழியும் அடங்கும். இதை மொழிகள் பொருள்தரும் முறையில் ஆகின்றதை விளக்குவதே கிளவி ஆக்கம் ஆகும்.

சொற்களால் தொடர்கள் உருவாக்கப்படும் . அதுவே மொழியை முழுமையடையச் செய்யும். எல்லாச் சொற்களும் பொருள் தருவன என்றாலும், எல்லாம் குற்றமற்ற நிறைவான சொற்கள் அல்ல. மொழிப்பயன்பாட்டிற்கும் பொருந்தாத சொற்களும் உள்ளன. அவற்றைத் தெரிவு செய்து, பிழையற்ற சொற்களைக் கொண்டு, பிழையின்றித் தொடர்களை அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே தொடர்களின் இலக்கணத்தைக் கூறும் இக்கிளவியாக்கம் வழு (குற்றம்), வழாநிலை (குற்றமற்ற நிலை) வழுவமைதி (குற்றமாயினும் ஏற்றுக்கொள்ளுதல் ) ஆகிய மூன்றினையும் எடுத்துரைக்கிறது. சொற்களைப் பொருள் தரும் முறையில் அமைத்துக் கொள்வதை இரு வகையில் அடக்கலாம்.

1. குற்றம் நீக்கிச் சொற்களை ஆக்கிக் கொள்வது.

2. குற்றமாக இருந்தாலும் வழக்கத்தில் வந்துவிட்டதால் (வழுவமைதியாக) ஏற்றுக் கொள்ளுதல்.

இந்த இரு வகையிலும் சொற்களை ஆக்கிக் கொண்டதால் கிளவியாக்கம் என்பது சேனாவரையர் கருத்து.

## திணை

திணை என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள். இச்சொல் ஆகுபெயராய், அவ் ஒழுக்கத்தை உடைய மக்களைக் குறித்தது என்பது இளம்பூரணர் கருத்து. உலகில் உள்ள அனைத்துப் பொருட்களையும் இரு திணைக்குள் அடக்குகிறார் தொல்காப்பியர். சொல்லதிகாரத்தில் திணை குறித்துக் கூற வேண்டிய அவசியம் என்ன எனும் கேள்வி எல்லாருக்கும் எழும். அதாவது இரு திணைகளையும் அடிப்படையாகக் கொண்டே அனைத்துச் சொற்களும் தோன்றுகின்றன.

உயர்திணைச் சொல், அஃறிணைச் சொல் எனக் குறிக்கப்பட வேண்டியது குறியீடாக உயர்திணை, அஃறிணை எனப் பொருள் கருதி உரைக்கப்பட்டது என்பது சேனாவரையர் கருத்து.

## திணை வகைகள்

திணை இருவகைப்படும். 1. உயர்திணை 2. அ்.றிணை. மக்கள் அனைவரும் உயர்திணை. மக்கள் அல்லாத பிற பொருள்கள் அனைத்தும் அ்.றிணை. இந்த இரு திணைகளையும் அடிப்படையாகக் கொண்டு சொற்கள் பிறக்கும்.

**நூற்பா. 1**

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அ்.றிணை என்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே.**

## பால்

பால் என்பதற்குப் பகுப்பு அல்லது பிரிவு என்பது பொருள். இரு திணைகளும் ஐந்து பால்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

## உயர்திணைக்குரிய பால்கள்

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பன உயர்திணைக்குரிய மூன்று பால்களாகும்.

**(எ.கா)** ராமன் - ஆண்பால்
கோதை - பெண்பால்
பிள்ளைகள் - பலர்பால்
(ஆடூஉ – ஆண், மகடூஉ – பெண்)

**நூற்பா. 2**

**ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்**
**பல்லோர் அறியுங் சொல்லோடு சிவணி**
**அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.**

## அ்.றிணைக்குரிய பால்கள்

1. ஒன்றன்பால் 2. பலவின்பால் என அ்.றிணைக்குரிய பால் இருவகைப்படும்.


**(எ.கா)** மரம் - ஒன்றன்பால்
மரங்கள் - பலவின்பால்

(அ்.றிணையிலும் ஆண் பெண் பாகுபாடு உண்டு எனினும், அவை ஒன்று, பல என்று மட்டுமே பாகுபடுத்தப்பட்டுள்ளன.)

*நூற்பா. 3*

**ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று**

**ஆயிரு பாற்சொல் அ்ஃறிணை யவ்வே.**




## பேடியும் தெய்வமும்

ஆண்தன்மை குறைந்து பெண்தன்மை மிகுந்து விளங்கும் நிலையைக் குறிக்கும் (பெண்மையைச் சுட்டும்) சொல் (பேடி), தெய்வத்தைக் குறிக்கும் சொல் இவற்றைக் குறிப்பதற்குத் தனித்தனி ஈறுகள் (விகுதிகள்) இல்லை. அவை உயர்திணை முப்பாலுக்குரிய ஈறுகளைக் கொண்டே வழங்கப்படும். (பெண்தன்மை குறைந்து ஆண்தன்மை மிகுந்து விளங்கும் நிலையும் உண்டு. எனினும் பெண் தன்மை மிகுந்து வருதலே பெரும்பான்மை என்பார் சேனாவரையர்.)

**(எ.கா)** பேடி வந்தாள்
பேடியர் வந்தனர்
தேவன் வந்தான்.
தேவி வந்தாள்
தேவர் வந்தார்

*நூற்பா. 4*

**பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**

**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**

**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**

**இவ்வென அறியுமந் தந்தமக் கிலவே**

**உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும்.**

# திணை, பால் ஈறுகள்

பெயர்ச் சொற்களை வைத்து திணை, பால்களை எளிதில் அறிய முடிவதில்லை. ஆனால் வினைச்சொற்களின் ஈறுகளைக் (இறுதி எழுத்துக்கள்) கொண்டு திணை, பால்களைத் தெளிவாக அறியலாம்.

## ஆண்பால் ஈறு

னகர ஒற்றை ஈறாக உடைய சொல் ஆண்பாலைக் குறிக்கும்.

**(எ.கா)** அவன் வந்தான்

***நூற்பா. 5***

**ன.்.கான் ஒற்றே ஆடூஉ அறிசொல்**

## பெண்பால் ஈறு

ளகர ஒற்று ஈற்றில் வந்தால் பெண்பாலைக் குறிக்கும்

**(எ.கா)** அவள் வந்தாள்.

***நூற்பா. 6***

**ள.்.கான் ஒற்றே மகடூஉ அறிசொல்**

## பலர்பால் ஈறுகள்

ரகர ஒற்று (ர்), பகர ஈறு, மார் எனும் இடைச்சொல் இவை பலர்பால் ஈறுகள் ஆகும்.

**(எ.கா)** உண்டனர், வந்தார்
வருப, கூறுப
கொண்மார், சென்மார்.

***நூற்பா. 7***

**ர.்.கான் ஒற்றும் பகர இறுதியும்**
**மாரைக் கிளவி உளப்பட மூன்றும்**
**நேரத் தோன்றும் பலரறி சொல்லே.**

## ஒன்றன்பால் ஈறுகள்

து,று,டு எனும் குற்றியலுகர ஈறுகள் ஒன்றன் பாலைக் குறிக்கும்.

**(எ.கா)** நாய் வந்தது
கோழி கூவிற்று
குண்டு கட்டு
(குண்டு கட்டு- ஒழிந்த கண்ணையுடையது.)

***நூற்பா. 8***

***ஒன்றறி கிளவி த ற ட வூர்ந்த***

***குன்றிய லுகரத்து இறுதி யாகும்.***

## பலவின்பால் ஈறுகள்

*அ, ஆ, வ எனும் ஈறுகள் பலவின்பாலைக் குறிப்பன ஆகும்.*

***(எ.கா)*** *உண்டன*

*உண்ணா*

*உண்குவ*

***நூற்பா. 9***

***அ ஆ வ என வரூஉம் இறுதி***

***அப்பான் மூன்றே பலவறி சொல்லே.***

## வினை ஈறுகள்

*ன், ள், ர், வ, மார், து, று, டு, அ, ஆ, வ எனும் பதினொரு எழுத்துக்களும், திணை பால்களை உணர்த்தும் ஈறுகள் ஆகும்.*

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| **ன்** | **ள்** | **ர், ப, மார்** | **து, று, டு** | **அ, ஆ, வ** |
| *1* | *2* | *3 4 5* | *6 7 8* | *9 10 11* |

***நூற்பா. 10***

***இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய***

***ஈற்றில்நின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்***

***தோற்றம் தாமே வினையொடு வருமே.***

## வழு, வழுவமைதி

*சொற்கள் தொடராக வரும் போது எழுவாயும் பயனிலையும் மாறுபடாமல் இலக்கண முறைப்படி அமைதல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் மாறுபட்டு நிற்பது வழு ஆகும். வழு எனினும் முன்னோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை வழுவமைதியாகும். 1. திணை, 2. பால் 3. மரபு, 4.செப்பு (விடை). 5. வினா 6. இடம், 7. காலம் என ஏழு வகைகளில் வழு ஏற்படும்.*

*1. அவன் வந்தது -* ***திணைவழு.***

*(அவன்- உயர்திணை, வந்தது – அஃறிணை)*

2. அவள் வந்தான் - **பால்வழு**
(அவள் - பெண்பால், வந்தான் - ஆண்பால்)
3. சேவல் கத்தியது **- மரபு வழு**
(சேவல் கூவியது - மரபு)
4. வினா : பட்டுக்கோட்டைக்கு வழி யாது?
செப்பு : கொட்டைப்பாக்குக் கிலோ பத்து ரூபாய் } - **செப்புவழு**
5. ஒரு பொருளைக் காட்டி
இது சிறியதா? பெரியதா? என்பது } - **வினாவழு**
6. நான் வந்தான் - **இடவழு**
(நான் - தன்மை, வந்தாள் - படர்ககை)
7. நாளை உண்டேன் - **காலவழு**
(நாளை – எதிர்காலம், உண்டேன் - இறந்தகாலம்)

## பெயரும் வினையும் மயங்கல் கூடாது.

ஒரு தொடர் அமையும் போது வினைச் சொல்லில் பாலினை உணர்த்தும் ஈறும், பெயர்ச்சொல்லில் பாலினை உணர்த்தும் ஈறும் மாறி வருதல் கூடாது. பெயரிலும், வினையிலும் ஒரே ஈறு அமைதல் வேண்டும்.

**(எ.கா)** அவன் வந்தான், அவள் வந்தாள்
(னகர ஈறு) (ளகர ஈறு )
(அவன் - பெயர், வந்தான் - வினை )

***நூற்பா. 11***

**வினையில் தோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல் கூடா தம்மர பினவே.**

## பேடி எனும் சொல் அமையும் முறை

ஆண் தன்மையிலிருந்து திரிந்து பெண் தன்மை மிக்கவரைப் பேடி என அழைப்பர். இது ஆண்பாலுக்குரிய வினை ஈற்றைக் கொண்டு முடிவதில்லை. பெண்பாலாகக் கூறப்படும்.

**(எ.கா.)** பேடி வந்தாள் - பெண்பால்

***நூற்பா. 12***

**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**
**ஆண்மை அறிசொற்கு ஆகுஇடன் இன்றே.**

## வினாவும் செப்பும்

*1. வினாவும் விடையும் வழுவின்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.*

***நூற்பா. 13***

**செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்.**

*விடை இரு வகைப்படும். 1.* ***செவ்வன் இறை*** *- இது நேரடியாக விடை கூறுவதால் நேர்விடை எனப்படும். 2.* ***இறை பயப்பது*** *- இது விடையை நேரடியாகக் கூறாமல் குறிப்பால் பெறச் செய்வது.*

*சாத்தா உண்டாயா? எனும் வினாவிற்கு உண்டேன் என்பது செவ்வன் இறை.*

*வயிறு வலித்தது என்பது இறைபயப்பது.*

### வினா

***1. அறியான் வினா*** *- தான் அறியாததை அறிந்து கொள்ள வினவுவது.*

***(எ.கா)*** *கருவூர்க்கு வழி யாது?*

***2. ஐய வினா*** *- ஐயத்தைப் போக்குவதற்காய்க் கேட்பது.*

***(எ.கா)*** *அது மரமா? மனிதனா?*

*3.* ***அறிபொருள் வினா -*** *தான் அறிந்த ஒன்றை ஒரு பயன் நோக்கி வினவுவது.*

***(எ.கா)*** *ஆசிரியர் மாணவனிடம் இப்பாடலுக்குப் பொருள் யாது? எனல்.*

*இவ்வாறு வினாக்கள் மூன்று வகைப்படும் என்பார் சேனாவரையர். இளம்பூரணர் வினா ஐந்து வகைப்படும் என்பார். அவை,*

***1. அறியான் வினா***

***2. அறிவொப்புக் காண்டல் வினா****. (தனக்குத் தெரிந்த ஒன்று பிறருக்குத் தெரியுமா? என வினாவுதல்)*

***3. ஐயமறுத்தல்*** *(ஐயம் தீர்ப்பதற்காக வினவுதல்)*

***4. அவனறிவு தான் கோடல்*** *- (ஒன்றிற்கு வேறொருவன் எவ்வாறு பொருள் கொண்டுள்ளான் என்பதை அறியும் படி வினவுதல்)*

***5. மெய்யவற்குக் காட்டல்*** *- உண்மை நிலையை (மாறுபட உணர்ந்தவனுக்கு) உணர்த்துவதற்காக வினவுதல்.*

## விடை

விடை ஆறு வகைப்படும் என்பார் இளம்பூரணர்,

1. **வினா எதிர்வினாதல்.**
2. **ஏவுதல்**
3. **மறுத்தல்**
4. **உற்றது உரைத்தல்**
5. **உறுவது கூறல்**
6. **உடம்படுதல்**

வினாவிற்கு விடையாக விடை வெளிப்படும்படி ஒரு வினாவைக் கேட்பதும் விடையாகக் கொள்ளப்படும்.

**(எ.கா)**

உண்டாயோ? எனும் வினாவிற்கு

எனக்கு வயிறு இல்லையோ? என விடை கூறுவது. (உண்டேன் எனும் பொருள் தந்தது.

**நூற்பா.** *14*

**வினாவும் செப்பே வினாவெதிர் வரினே.**

## செப்பு வழுவமைதி

வினாவிற்கு நேரடியாக விடை கூறுவதே பொருத்தமானது. மறைமுகமாக விடை கூறினும் பொருத்தமான விடையைத் தருமானால் அதுவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

**(எ.கா)** சாத்தா உண்டியோ? எனும் வினாவிற்கு நேரமாயிற்று, வயிறு வலிக்கும், நீ உண் என்பன போல விடை கூறுவது.

வழு எனினும் ஏற்றுக் கொள்வதால் இது வழுவமைதி ஆயிற்று. விடை வழு மூன்று வகைப்படும் என்பார் இளம்பூரணார்.

அவை.*1.* **உற்றது உரைத்தல்** (நேரமாயிற்று என்பது)

*2.* **உறுவது கூறல்** (வயிறுவலிக்கும் என்பது)

*3.* **ஏவுதல்** ( நீ உண் என்பது)

**நூற்பா.** *15*

**செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே**

**அப்பொருள் புணர்ந்த கிளவியான**

## செப்பு, வினாக்களில் சினை முதற் கிளவிகள்

வினாவிலும், விடையிலும், ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமைப்படுத்தியோ, அல்லது வேறுபடுத்தியோ கூறும் போது சினைச் சொல்லுக்குச் சினைச் சொல்லும், முதற் சொல்லுக்கு முதற்சொல்லும் வருமாறு கூற வேண்டும்.

(சினை - உறுப்பு(விரல்), முதல் - முழுப்பொருள் (கை))

**(எ.கா)**

இவன் கண்ணைவிட இவன் கண் பெரியது
உம் அரசனை விட எம் அரசன் சிறந்தவன் } - மாறுபடக்கூறியது

இவள் கண்ணை ஒக்கும் இவள்கண்
எம் அரசனை ஒக்கும் உம் அரசன் } - ஒப்புமை

***நூற்பா. 16***

**செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு**
**அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே.**

## வழக்கு

இவ் உலகில் உள்ளோர் ஒன்றைப்பற்றி வழங்கி வரும் (கூறுகின்ற) முறையே வழக்கு எனப்படும். இது தகுதி வழக்கு, இயல்பு வழக்கு என இருவகைப்படும்.

## *1.* தகுதி வழக்கு

ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் சொல்வது தகுதி உடையதல்ல எனக் கருதி, தகுதி உடைய வேறொரு சொல்லால் வழங்குவது தகுதி வழக்கு எனப்படும். இது மூவகைப்படும். அவை,

1. மங்கலம் (செத்தாரைத் துஞ்சினார் என்பது)
2. இடக்கர் அடக்கல் (மலம் கழுவுதலைக் கால் கழுவுதல் என்பது)
3. குழூஉக்குறி (வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்பது)

## 2. இயல்பு வழக்கு

ஒரு பொருளுக்கு இயல்பாக அமைந்த சொல்லால் வழங்குவது இயல்பு வழக்கு. இது மூவகைப்படும். அவை,

1. இலக்கணமுடையது - ( நிலம், நீர்)

2. இலக்கணப் போலி - ( இல் முன் என்பதை முன்றில் என்பது)

3. மரூஉ - ( சோழ நாட்டைச் சோணாடு என்றல்)

இவ்வாறு தகுதி வழக்கிலும், இயல்பு வழக்கிலும் உரிய சொல்லை நீக்கி வேறொரு சொல் பயன்படுத்தப்பட்டாலும் அதனை நீக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**நூற்பா. *17***

***தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்***
***பகுதிக் கிளவி வரைநிலை இலவே.***

## இனமில்லாப் பொருள் அடைபெறுதல்

இனமில்லாப் பொருட்களின் பண்பை விளக்க அடைமொழி கொடுத்துச் சொல்லும் வழக்கம் செய்யுளுக்குரியதாகும். உலக வழக்கத்திற்கு உரியதல்ல.

(இனமில்லாத பொருட்களை வேறுபடுத்திக் காட்ட அடைமொழி தேவையில்லை என்பதால் இது உலக வழக்கல்ல).

**(எ.கா)** ‘செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும்’ (புறம் 38)

(உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இனமுள்ள பொருட்கள் அடை கொடுத்து வழங்கப்பட வேண்டும். (எ.கா) செந்தாமரை, வெண்தாமரை.)

## இயற்கைப் பொருளைக் கூறும் முறை

இயற்கைப் பொருளின் இயல்பினைக் கூறும் போது அதனை உள்ளபடியே கூற வேண்டும். ( மிகைப்படுத்தல் தேவையில்லை)

**(எ.கா)** நிலம் வலிது, நீர் தண்ணிது

**நூற்பா. *19***

***இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.***

## செயற்கைப் பொருளைக் கூறும் முறை

*1. ஏதேனும் ஒரு காரணத்தால் தன்னுடைய இயல்புத் தன்மையில் மாற்றம் பெற்ற பொருள் செயற்கை பொருளாகும். செயற்கைப் பொருளின் இயல்பினைக் கூறும் போது ஆக்கம் கொடுத்துச் சொல்லுதல் வேண்டும்.*

**(எ.கா.)** *பயிர் நல்ல ஆயின*

*நிலம் வலிதாயிற்று*

*(ஆயின, ஆயிற்று என்பன ஆக்கச் சொற்கள்)*

**நூற்பா. *20***

**செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.**

*2. செயற்கைப் பொருளை ஆக்கத்துடன் கூறும் போது அதற்கான காரணத்தை முதலில் கூற வேண்டும். பின்னர் ஆக்கத்தைக் கூற வேண்டும்.*

**(எ.கா)** *உரம் போட்டு நீர் ஊற்றியமையால் பயிர் நல்லவாயின.*

*நீர் கலத்தலால் நிலம் மெலிதாயிற்று*

**நூற்பா. *21***

**ஆக்கந் தானே காரணம் முதற்றே.**

*3. உலக வழக்கில் ஆக்கச் சொல் காரணத்தைக் கூறாமல் வழங்கப்படுவதும் உண்டு. இது குற்றமாகாது. ( காரணம் பெற்று வருதலே சிறப்பு)*

**(எ.கா)** *பயிர் நல்லவாயின*

**நூற்பா. *22***

**ஆக்கக் கிளவி காரண மின்றியும்**
**போக்குஇன் றென்ப வழக்கி னுள்ளே.**

## பால் ஐயத்தைச் சொல்லும் முறை

*1. இன்ன பால் எனத் தெளிவாக அறிய முடியாதவற்றைக் கூறும் போது, அத்திணைக்குரிய பன்மைச் சொல்லால் கூற வேண்டும்.*

**(எ.கா)** *ஆணோ, பெண்ணோ அதோ தோன்றுவார்.*

*ஒன்றோ, பலவோ தோட்டத்தில் மேய்ந்தன.*

*தோன்றுவார் - உயர்திணைக்குரிய பன்மைச்சொல்*

*மேய்ந்தன - அஃறிணைக்குரிய பன்மைச்சொல்*

*நூற்பா. 23*

**பால்மயக்கு உற்ற ஐயக் கிளவி**
**தான் அறி பொருள்வயின் பன்மை கூறல்**

*2. உயர்திணையா? அஃறிணையா? எனச் சந்தேகம் வருமிடத்து 'உரு' எனும் பொதுச்சொல்லாலும், அஃறிணையில் பால் ஐயம் ( ஒன்றா? பலவா? ) தோன்றும் போது அதற்குரிய பொதுச்சொல்லாலும் வழங்கல் வேண்டும். (உரு – உருவம்)*

**(எ.கா)** **குற்றியோ மகனோ அதோ தோன்றுகின்ற உரு?-திணை ஐயம்**

*ஒன்றோ பலவோ வயலில் புகுந்த மாடு? –அஃறிணை பால் ஐயம்.*

*(உரு, மாடு என்பன பொதுச்சொற்கள்)*

*நூற்பா 24*

**உருபுஎன மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்**
**இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை.**

*3. திணை பால்களில் ஐயம் நீங்கி இன்னது எனத் தெளிவடைந்த பின் தெளிவடையாத பொருள் மேல் இல்லை எனும் பொருள்படும் சொல்லை ஏற்றிக் கூற வேண்டும்.*

## திணை ஐயம்

**(எ.கா)** *குற்றியோ மகனோ எனும் ஐயம் ஏற்பட்டு மகன் எனத் தெளிந்த போது,*
***குற்றி அல்ல மகன்** என்று கூற வேண்டும். குற்றி எனில் **மகன் அல்லன் குற்றி** என்று கூற வேண்டும்.*

## பால் ஐயம்

**(எ.கா)** *பெண்மகள் அல்லள் ஆண்மகன்*
*ஆண்மகன் அல்லன் பெண்மகள்*

*(அல்ல, அல்லள், அல்லன் என்பன இல்லை எனும் பொருள்படும் சொற்கள்)*

*நூற்பா 25*

**தன்மை சுட்டலும் உரித்தென மொழிப**
**அன்மைக் கிளவி வேறிடத் தான.**

## வண்ணச் சினைச்சொல்

முதல் பொருளுக்கு அடைமொழியாகப் பண்புப் பெயரும், சினைப்பெயரும் கொடுத்துக் கூற வேண்டுமெனில், அடை (பண்பு), சினை, முதல் எனும் ஒழுங்கில் அமைதல் வேண்டும். இவை மூன்றும் முறை மாறி வருவது வழக்கில் இல்லை. இவ்வாறு அடை சினை முதல் என முறைமாறாமல் வருவது வண்ணச் சினைச்சொல் எனப்படும்.

**(எ.கா.)** செங்கால்நாரை

| | | | | |
|---|---|---|---|---|
| செம்மை | + | கால் | + | நாரை |
| \| | | \| | | \| |
| அடை(பண்பு) | | சினை | | முதல் |

முறை மாறி வருதல் செய்யுளுக்குப் பொருந்தும்.

**(எ.கா.)**

செவிசெஞ்சேவல், வாய்வன்காக்கை. (புறம். 238)

**நூற்பா 26.**

**அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை**
**நடைபெற்று இயலும் வண்ணச் சினைச்சொல்.**

## பால் வழுவமைதி

உயர்திணையில் ஒருவனையோ, ஒருத்தியையோ, அஃறிணையில் ஒன்றனையோ பன்மைச் சொல்லால் கூறுவது உயர்வுபடுத்திக் கூறும் வழக்காகும். இது இலக்கண முறையால் கூறப்படுவது அல்ல.

**(எ.கா)** (அவன் வந்தான் என்பதை) அவர் வந்தார் என்பது
நீயிர் வந்தீர் ( நீ வந்தாய்)
திருக்கோவையார்( நூல்) படித்தேன்.

**நூற்பா 27**

**ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி**
**இலக்கண மருங்கிற் சொல்லாறு அல்ல.**

## இடம் உணர்த்தும் சொற்கள்

*1.* செல், வா, தா, கொடு என்ற வினைகள் அடியாகத் தோன்றும் நான்கு (செலவு, வரவு, தரவு, கொடை) சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூன்று இடங்களுக்கும் உரியன.

2. அவற்றுள் தரவு, வரவு எனும் சொற்கள் தன்மை, முன்னிலை எனும் இரண்டு இடங்களுக்கும் உரியன.

**(எ.கா.)**

எனக்குத் தந்தான் (தரவு)
என்னிடம் வந்தான் (வரவு) } - தன்மை

உனக்குத் தந்தான் (தரவு)
உன்னிடம் வந்தான் (வரவு) } - முன்னிலை

3. செலவு, கொடை என்னும் இரு சொற்களும் படர்க்கை இடத்திற்கு உரியன.

**(எ.கா)**

அவனிடம் சென்றான் (செலவு)
அவனுக்குக் கொடுத்தான் (கொடை) } - படர்க்கை

**நூற்பா.** ***28.***

***செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்***
***நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்***
***தன்மை முன்னிலை படர்க்கை என்னும்***
***அம்மூ விடத்தும் உரிய என்ப.***

**நூற்பா.** ***29.***

***அவற்றுள்***
***தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்***
***தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.***

**நூற்பா.** ***30.***

***ஏனை இரண்டும் ஏனை இடத்த.***

## ‘யாது’ எவன் எனும் வினாச்சொற்கள்

*1. யாது? எவன்? என்பன தனக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கப்படும் வினாச் சொற்களாகும்.*

***(எ.கா)*** *இச் சொல்லிற்குப் பொருள் யாது?*
*இச் சொல்லிற்குப் பொருள் எவன்?*

*2. மேற்கூறப்பட்ட வினாச் சொற்களுள் ‘யாது’ என்பது, தனக்குத் தெரிந்த பொருள் குறித்த ஐயத்தை நீக்கித் தெளிவு பெறுவதற்காகவும் கேட்கப்படும்.*

***(எ.கா)*** *இம்மரங்களுள் தேக்கு யாது?*
*(மரம் - தெரிந்த பொருள். தேக்கு யாது – ஐயம்)*

***நூற்பா. 31.***

***யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்***
***அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.***

***நூற்பா. 32.***

***அவற்றுள்***
***யாதுஎன வரூஉம் வினாவின் கிளவி***
***அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்***
***தெரிந்த கிளிவி ஆதலும் உரித்தே***

## முதல், சினைச் சொற்கள் உம்மை பெறுதல்

*1. இவ்வளவு என்று அறியப்பட்ட சினைச் சொல் மற்றும் முதற் சொற்களைத் தொகுத்து, அவற்றை முடிக்கும் சொல்லாக வினைச் சொற்களைச் சேர்த்துக் கூறும் போது உம்மை கொடுத்துக் கூற வேண்டும்.*

***(எ.கா)*** *கண் இரண்டும் சிவந்தான்* } - சினை
*பன்னிரு கையும் பாற்பட இயற்றி* }

*தமிழ்நாட்டு வேந்தர் மூவரும் வந்தார் - முதல்*

*2. உலகில் இல்லாத பொருளைக் கூறும்போதும் உம்மை கொடுத்துக் கூற வேண்டும்.*

***(எ.கா)*** *பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை*
*குருடு காண்டல் பகலும் இல்லை*

**நூற்பா. *33.***

**இனைத்து என அறிந்த சினைமுதல் கிளவிக்கு**
**வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.**

**நூற்பா. *34.***

**மன்னாப் பொருளும் அன்ன இயற்றே.**

## இல்லை எனும் சொல்லைக் கூறும் முறை

*1. ஒருவன் ஒரு பொருள் இருக்கிறதா என்று கேட்டால், அப்பொருள் இல்லை எனில் இல்லை என்று பதில் கூறாமல் இருக்கிற பொருளைக் கூறி, அப்பொருள் அல்லது இல்லை என்று கூற வேண்டும். ( வணிகர் மரபு )*

**(எ.கா)** *பயறு உளதோ? - வினா.*

*உழுந்து அல்லது இல்லை - விடை.*

*(உழுந்து இருக்கிறது, பயறு இல்லை என்பது பொருள்)*

*2. கேட்போர் வேண்டிய பொருள் இருந்தால் அப்பொருளைச் சுட்டிக்காட்டிக் கூற வேண்டும். (வேறு பொருளைக் கூற வேண்டியதில்லை)*

**(எ.கா)** *பயறு உளதோ? - வினா.*

*(பயறைச் சுட்டி) இப்பயறு அல்லது இல்லை - விடை.*

*(இப்பயறு இருக்கிறது என்பது பொருள் )*

*3. பொருளை இது என வரையறுத்து (பயறு, உழுந்து) கூறாத சுட்டுப் பெயரால் கூறினும் முற்கூறிய பொருளையே தரும்.*

**(எ.கா.)** *இவை அல்லது இல்லை.*

*(இப்பயறு எனப் பொருளைக் கூறாமல் இவை எனக் கூறினாலும் சுட்டிக்காட்டுவதால் பொருள் புரிந்துவிடும்)*

**நூற்பா *35.***

**எப்பொருள் ஆயினும் அல்லது இல்லெனின்**
**அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்.**

**நூற்பா. *36.***

**அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்**

**நூற்பா. *37.***

**பொருளொடு புணராச் சுட்டுப்பெயர் ஆயினும்**
**பொருள்வேறு படாஅது ஒன்றுஆ கும்மே.**

# இயற்பெயரும் சுட்டுப்பெயரும்

*1.* இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வெவ்வேறு வினைகளைக் (செயல்கள்) கொண்டு முடிந்து வருவதுண்டு. அப்போது இயற்பெயரை முதலிலும் சுட்டுப் பெயரை அதன் பின்பும் கூறுதல் வேண்டும்.

**(எ.கா)** சாத்தன் வந்தான் அவனுக்கு நூல் கொடு.
பசு வந்தது. அதற்குப் புல் இடுக.
(சாத்தன், பசு - இயற்பெயர்
அவன், அது - சுட்டுப்பெயர்)

*2.* சுட்டுப்பெயரை முதலில் கூறி இயற்பெயரைப் பின்னர் கூறும் வழக்கம் செய்யுளுக்கு உரியது.

**(எ.கா)** அவன் அணங்கு நோய் செய்தான் ஆயிழாய்! வேலன்
விறன் மிகுதார்ச் சேந்தன் பேர் வாழ்த்தி….
அவன் - சுட்டுப்பெயர்
சேந்தன் - சிறப்புப் பெயர்

*3.* சுட்டெழுத்தை முதலாகக் கொண்டு ஒரு காரணத்தை உணர்த்தும் சொல் அதனால் என்பது. இது இயற்பெயருக்குப் பின் சுட்டுப்பெயர் வருவது போலக் காரணத்திற்குப் பின் வரும்.

**(எ.கா)** கண்ணன் படிப்பில் வல்லவன். அதனால் தந்தை
மகிழ்கிறார்.

***நூற்பா 38.***

***இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்***
***வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்***
***சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்***
***இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.***

***நூற்பா. 39.***

***முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.***

***நூற்பா. 40.***

***சுட்டுமுதல் ஆகிய காரணக் கிளவியும்***
***சுட்டுப் பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்.***

## சிறப்புப் பெயரும் இயற்பெயரும்

*1. ஒருவருடைய சிறப்புப் பெயரையும் இயற்பெயரையும் சேர்த்துக் கூறும் போது, சிறப்புப் பெயரை முதலிலும் இயற்பெயரைப் பின்னரும் கூற வேண்டும்.*

**(எ.கா)** **அறிஞர்** *அண்ணா* , **பாவேந்தர்** *பாரதிதாசன்.*

*(அறிஞர், பாவேந்தர் - சிறப்புப் பெயர்கள்)*

*2. ஒரு பொருளை உணர்த்தும் பல பெயர்கள் ஒருமித்து வருவதுண்டு. அவற்றிற்கு ஒரு வினையை(செயலை) முடிவாகக் கூற வேண்டும். ஒவ்வொரு பெயருக்கும் தனித்தனி வினையைக் கூறினால் அவை ஒரு பொருளை உணர்த்தும் பல பெயர்கள் ஆகாது.*

**(எ.கா)** *ஆசிரியர் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்.*

*(இது ஒருவரைக் குறித்த பல பெயர்கள். ஆனால் ஆசிரியர் வந்தார், பேரூர்கிழான் உண்டான், சாத்தன் சென்றான் என ஒவ்வொரு பெயருக்கும் தனித்தனி வினைகளைக் கூறினால் அவை ஒருவரைக் குறிப்பதில்லை. பலரைக் குறிக்கும்.)*

***நூற்பா 41.***

***சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்***
***இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.***

***நூற்பா. 42.***

***ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி***
***தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.***

## திணை வழுவமைதி

*தன்மை இடத்திற்குரிய உயர்திணைச் சொல்லும் (யான், யாம்) அ∴றிணை சொல்லும் எண்ணும் பொருளில் வரும் போது கலந்து வரும்.*

**(எ.கா)** *யானும் என் நாயும் வருவோம்.*

***நூற்பா. 43***

***தன்மைச் சொல்லே அ∴றிணைக் கிளவிஎன்று***
***எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.***

## ஒருமைக்குரிய சொல

1. ஆண் பெண் எனும் ஒருமை எண்ணினை உயர்த்திச் சொல்லும் பொதுச் சொல் ஒருவர் என்பதாகும். இது ஒருமையில் ஆண்பாலையும் பெண்பாலையும் பிரிந்து நின்று உணர்த்தும் போது ஒருவன், ஒருத்தி என வரும். ஒருவர் எனும் பொதுச்சொல் எண்ணுப் பெயராய் வரும் போது இருவர், மூவர் என வரும். ஆனால் ஒருவன் ஒருத்தி என்பன இருவன் இருத்தி, மூவன், முத்தி எனப் பிரிந்து நின்று பால் உணர்த்துவதில்லை.

**(எ.கா)** ஒருவர் - ஒருவன், ஒருத்தி

***நூற்பா. 44***

**ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்**
**ஒருமைக்கு அல்லது எண்ணுமுறை நில்லாது.**

2. எண்ணுப்பெயரைத் தொடர்ந்து வியங்கோள் வினைமுற்று வரும் வாக்கியங்களில் உயர்திணை, அஃறிணை எனும் இரு திணைகளும் விரவி (சேர்ந்து) வருவது ஏற்றுக்கொள்ளப்படும்.

**(எ.கா)** ஆவும் ஆயனும் செல்க.
(ஆ- அஃறிணை, ஆயன் - உயர்திணை)

***நூற்பா. 45***

**வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.**

## வேறுவினைப் பொதுச்சொல்

வேறுவேறு வினைகளையுடைய பொதுச்சொற்களை, அவற்றுள் ஒரு வினையால் சொல்லுதல் கூடாது. பொதுவான வினையால் கூற வேண்டும்.

**(எ.கா)** அடிசில் அயின்றார்.

அடிசில் (உணவு) என்பது உண்ணுதல், தின்னுதல், பருகுதல், நக்குதல் போன்ற வினைகளையுடைய பொதுச்சொல். அயின்றார் என்பது இந்த அனைத்து வினைகளுக்கும் பொதுவான சொல்.

***நூற்பா. 46***

**வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்.**

வெவ்வேறு வினைகளை உடைய பொதுச் சொற்களைப் பொதுவாகக் கூறாமல், தனித்தனியே பிரித்து எண்ணும் போது முற்கூறியது போலவே ஒன்றிற்குரிய சிறப்பு வினையால் கூறாமல், பொது வினையால் கூறுவதே மரபு.

**(எ.கா)** சோறும் கறியும் அயின்றார்.

(சோறும் கறியும் தின்றார், சோறும் கறியும் உண்டார் எனக் கூறுதல் மரபல்ல)

**நூற்பா. 47**

**எண்ணுங் காலும் அதுஅதன் மரபே.**

## இரட்டைக்கிளவி

பிரிந்து நின்றால் பொருள் உணர்த்தாமல் இரட்டித்து நின்று பொருள் தரும் சொற்கள் இரட்டைக்கிளவி எனப்படும். இவை இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

**(எ.கா)** சலசலத்தது - இசை

மொறுமொறுத்தது - குறிப்பு

கறுகறுத்தது - பண்பு

**நூற்பா. 48**

**இரட்டைக்கிளவி இரட்டின் பிரிந்து இசையா.**

## ஒருபெயர் பொதுச் சொல்

பல பொருள்கள் அடங்கியது ஒரு தொகுதி. இந்தத் தொகுதியைக் குறிப்பிடும் போது, தொகுதியில் உள்ள பொருட்களில் சிறப்பான ஒன்றின் பெயரால் குறிப்பிடுவர். சிறப்பு என்பது தலைமை, அல்லது மிகுதியான எண்ணிக்கை இவற்றின் அடிப்படையில் கொள்ளப்படும். இது உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொருந்தும்.

**(எ.கா)**

| | | |
|---|---|---|
| பார்ப்பனச் சேரி – தலைமை | | - உயர்திணை. |
| எயினர் நாடு - மிகுதி | | |
| பனந்தோப்பு - தலைமை | | -- அஃறிணை |
| ஈச்சங்காடு - மிகுதி | | |

**நூற்பா. 49**

**ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்**
**தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்**
**உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்**

## ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணையிலும் அஃறிணையிலும் பொதுவாக வரும் பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் உண்டு. இந்தப் பொதுச்சொற்கள் வழக்கத்தில் ஆண்பால் அல்லது பெண்பாலைக் குறித்து வருவதுண்டு. அதாவது குறிப்பினால் ஒரு பாலை நீக்கி இன்னொரு பாலை உணர்த்தும். இது வழக்கில் மரபாக வந்துவிட்டதால் வழு எனக் கருதாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

***(எ.கா)*** "பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர்
மக்கள் உளர்"

(அரசியின் கட்டிற்கீழ் என்பதனால் மக்கள் எனும் சொல் பெண்பாலைக் குறித்தது)

'ஆயிரம் மக்கள் தாவடி போயினர்'

(தாவடி - போர் - தாவடி எனும் குறிப்பால் மக்கள் என்பது ஆண்பாலைக் குறித்தது.)

***நூற்பா. 50***

***பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்***
***மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.***

## விரவுப்பெயர்

உயர்திணையும், அஃறிணையும் கலந்து வரும் எண்ணுப் பெயர்கள் செய்யுளில் வரும்போது அஃறிணை சொல்லைக் கொண்டு முடிந்து வரும். சிறுபான்மை உயர்திணை முடிவு பெறுவதும் உண்டு.

***(எ.கா)*** வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேய் எருமை என்று இவை ஆறும்.
வடுகர் அருவாளர் வான்கருநாடர் - உயர்திணை
சுடுகாடு பேய் எருமை - அஃறிணை
இவை - அஃறிணை முடிவு.

***நூற்பா. 51***

***பலவயி னாலும் எண்ணுத்திணை விரவுப்பெயர்***
***அஃறிணை முடிபின செய்யுள் உள்ளே.***

## பல பொருள் ஒரு சொல்

பொதுவாக ஒரு சொல் ஒரு பொருளைத் தரும். எனினும் சில சொற்கள் பல பொருள்களைத் தருவதுண்டு. இவை பலபொருள் ஒரு சொல் எனப்படும். இது,

1. வினை (தொழிலால்) வேறுபடும் பல பொருள் ஒருசொல்.
2. வினை வேறுபடாத பலபொருள் ஒருசொல்

என இருவகைப்படும்.

**நூற்பா. 52**

**வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்**
**வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல் என்று**
**ஆயிரு வகைய பலபொருள் ஒரு சொல்.**

### 1. வினை வேறுபடும் பல பொருள் ஒருசொல்

வினை வேறுபடும் பல பொருள் ஒருசொல், ஒரு பொருளுக்கே உரிய வினை, இனம், சார்பு இவற்றால் ஒரு பொருளை ஒழித்து, ஒரு பொருளைத் தெளிவுபடுத்தும்.

**(எ.கா)** வினை - மா பூத்தது (பூத்தது என்பதால் மரம் எனத் தெரிந்தது)
இனம் - மாவும் மருதும் வளர்ந்தன. (மாமரம்)
சார்பு - கவசம் அணிந்து நின்றவன் மாக் கொண்டு வா என்றான். (மா - குதிரை)

(போர்க்கோலம் பூண்டவன் மா கொண்டுவா என்றது சார்பால் குதிரையைக் குறித்தது.)

**நூற்பா. 53** **அவற்றுள்**
**வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்**
**வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்**
**தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.**

### 2. வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல்

வினையால் வேறுபடுத்திப் பொருள் உணர முடியாத பல பொருள் ஒருசொற்கள் உள்ளன. அவற்றைத் தெரிந்து கொள்வதற்குச் சிறப்பு அடையாளங்களைச் சுட்டிக் கூற வேண்டும்.

**(எ.கா)** மா வீழ்ந்தது

(வீழ்ந்தது என்பதில் பொருள் மயக்கம் உள்ளது) எனவே,

மா மரம் வீழ்ந்தது - மரம்

விலங்கு மா வீழ்ந்தது - குதிரை

சிறகு மா வீழ்ந்தது - வண்டு

எனக் கூற வேண்டும்.

***நூற்பா. 54*** **ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்**
**வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்**
**நினையும் காலைக் கிளந்தாங்கு இயலும்.**

## குறித்த பொருளைத் தெளிவாகக் கூறல்

ஒரு பொருளின் வேறுபாட்டைக் கூறக் கருதினால், அதனைக் குறிப்பாக விளக்க முடியாத போது, அதனைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்குத் தேவையான சொற்களால் விளக்கமாகக் கூற வேண்டும்.

**(எ.கா)** 'அரிதாரச் சாந்தம் கலந்தது போல
உருகெழத் தோன்றி வருமே – முருஉறழும்
அன்பன் மலைபெய்த நீர்'

மலையில் பெய்த நீர் அரிதாரமும் சந்தனமும் கலந்தது போல் வந்தது. இது இயற்கைக்கு மாறானது. ஆனால் தலைவன்(அன்பன்) மலை பெய்த நீர் என்பது தலைவன் குளித்ததால் கலங்கிய நீர் என்ற பொருளை உணர்த்தியது.

***நூற்பா. 55***

***குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.***

## திணைக்குப் புறனடை

***1.*** குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, விருந்து, குழு, பெண்மை, அரசு, மகவு, குழவி, தன்மை திரிபெயர்(அலி), உறுப்பின் கிளவி, காதல், சிறப்பு, செறற்சொல், விறற்சொல்(வீரம்) ஆகிய பதினெட்டும் இவை போன்ற பிறவும் குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள் ஆகும். இவை அனைத்தும் உயர்திணைப் பொருள்களுக்கு உரியன எனினும் அஃறிணை முடிவுகளைக் கொண்டே முடியும்.

**(எ.கா)** 1. குடிமை சிறந்தது
2. ஆண்மை வலிது
3. இளமை கழிந்தது
4. மூப்பு இனியது

*5. அடிமை தீது*

*6. வன்மை பெற்றது*

*7. விருந்து வந்தது*

*8. குழு பார்த்தது*

*9. பெண்மை மலர்ந்தது*

*10. அரசு நிலைத்தது*

*11. மகவு பிறந்தது*

*12. குழவி அழுதது*

*13. அலி ஆடிற்று*

*14. குருடு வந்தது*

*15. பாவை சிரித்தது (காதலால் கூறுவது)*

*16. செல்வம் வந்தது (சிறப்பு)*

*17. திருட்டு நாய் பழித்தது*

*18. பெருவிறல் வந்தது (வீரம்)*

***நூற்பா. 56***

***குடிமை ஆண்மை இளமை மூப்பே***
***அடிமை வன்மை விருந்தே குழுவே***
***பெண்மை அரசே மகவே குழவி***
***தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி***
***காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று***
***ஆ அறு மூன்றும் உளப்படத் தொகைஇ***
***அன்ன பிறவும் அவற்றொடு சிவணி***
***முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்***
***உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்***
***அ்.றிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்.***

*2. காலம், உலகம், உயிர், உடம்பு, பால்வரை தெய்வம், வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் ஆகிய பத்தும் இவை போன்ற பிறவும் உயர்திணைச் சொற்கள் ஆகும். எனினும் இவை உயர்திணைக்குரிய பால் ஈறுகளைப் (ஆண்,பெண்,பலர்) பெறாமல் அ்.றிணைப் பாலாகவே கூறப்படும்.*

***(எ.கா)*** *1. இவர்க்குக் காலம்(முடிவு) ஆயிற்று*

*2. உலகம்(மக்கள்) பசித்தது*

*3. உயிர் போயிற்று*

*4. உடம்பு சுருங்கியது*

*5. தெய்வம் செய்தது*

6. வினை விளைந்தது

7. பூதம் அடித்தது

8. ஞாயிறு உதித்தது

9. திங்கள் எழுந்தது

10. சொல்(கலைமகள்) நன்று

**நூற்பா. 57**

**காலம் உலகம் உயிரே உடம்பே**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்**
**ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்**
**ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன**
**ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்**
**பால்பிரிந்து இசையா உயர்திணை மேன.**

3. காலம் முதலாகக் கூறப்பட்டவை இறுதி மாறுபடாமல் நின்றபடியே உயர்திணையாகக் கூறப்படுவது இல்லை.

**(எ.கா)** 'காலம் நல்லவன்' என வராது. இது வழு ஆகும்.

குடிமை முதலாகக் கூறப்பட்ட சொற்கள் இறுதி மாறுபடாமல் நின்று உயர்திணையாகக் கூறப்படும்.

**(எ.கா)** குடிமை நல்லன், வேந்து செங்கோலன்

**நூற்பா. 58**

**நின்றாங்கு இசைத்தல் இவண்இயல் பின்றே.**

4. காலம் முதலிய சொற்கள் ஈறுதிரிந்து (இறுதி மாறுபட்டு) உயர்திணையாகக் கூறப்படும்.

**(எ.கா)** காலம் கொண்டது - கால**ன்** கொண்டான்.

உலகம் பசித்தது – உலக**ர்** பசித்தனர்.

(இறுதி திரிந்து உயர்திணையாக வந்தது)

**நூற்பா. 59**

**இசைத்தலும் உரிய வேறிடத் தான.**

## இனம் உணர்த்தல்

இனமாகிய பல பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பித்துக் கூறும் போது அச்சொல் தனக்கு இனமான பல பொருள்களைக் குறிப்பால் உணர்த்துவதும் உண்டு.

**(எ.கா)** 'அறம் செய்தான் துறக்கம் புகும்'

(துறக்கம் - சொர்க்கம்) என்பது மறம் செய்தவன் சொர்க்கம் செல்ல மாட்டான் (நரகம் புகும்) என்னும் இனப் பொருளைக் குறிப்பால் உணர்த்தியது.

***நூற்பா. 60***

***எடுத்த மொழிஇனம் செப்பலும் உரித்தே.***

## பன்மை சுட்டிய சினைப் பெயர்கள் முடிவு பெறுதல்

கண், தோள், மார்பு எனும் சினை(உறுப்பு)ப் பெயர்கள் பன்மைப் பொருளை (இரண்டாக உள்ளவை) உணர்த்துபவை ஆகும். ஆனால் அவை பன்மையாகவே கூறப்படவேண்டும் என்பதில்லை. (கூறப்படும் சூழலுக்கு ஏற்ப) முதற்பொருள் ஒருமையாயின் ஒருமையாகவும், பன்மையானால் பன்மையாகவும் கூறப்படும்.

**(எ.கா)**

| | | |
|---|---|---|
| கண் சிவந்தான்<br>கண் சிவந்தாள் | - ஒருமை | முதல்வினை |
| கண் சிவந்தார்<br>கண் நல்லர் | - பன்மை | |

***நூற்பா 61***

***கண்ணும் தோளும் முலையும் பிறவும்***
***பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி***
***பன்மை கூறும் கடப்பாடு இலவே***
***தம்வினைக்கு இயலும் எழுத்தலங் கடையே.***

# இயல் - 2

# வேற்றுமையியல்

## பெயர்க்காரணம்

பெயர்ப்பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும். வேறுமை என்பது உருபு, அது கொள்ளும் பெயர், அது கொண்டு முடியும் வினைச்சொல் ஆகிய மூன்றும் சேர்ந்ததாகும். வேற்றுமை உருபுகள் இன்னின்ன பொருளில் வரும் என்பதை விளக்குவது வேற்றுமையியல் ஆகும்.

வேற்றுமை எனப்பட்ட சில பொருள் உணர்த்தினதால் வேற்றுமை இயல் எனப்பட்டது என்பார் இளம்பூரணர்.

பொருள்களை வேறுபடுத்தினமையால் பெற்ற பெயர் என்பார் தெய்வச்சிலையார்.

வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு எனும் மூன்று இயல்களும் வேற்றுமை பற்றி விளக்குகின்றன.

## வேற்றுமையின் எண்ணிக்கை

வேற்றுமை ஏழு என்று புலவர் கூறுவர். விளித்தல் (அழைத்தல்) பொருளில் வரும் விளி வேற்றுமையுடன் சேர்த்து வேற்றுமை எட்டு வகைப்படும்.

***நூற்பா 62.***

***வேற்றுமை தாமே ஏழென மொழிப.***

***நூற்பா 63.***

***விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே.***

## வேற்றுமையின் பெயர்கள்

பெயர் ஐ, ஒடு, கு. இன், அது, கண், விளி என்பன வேற்றுமையின் பெயர்களாகும்.

***நூற்பா. 64***

***அவைதாம்***
***பெயர் ஐ ஒடு கு***
***இன் அது கண் விளி என்னும் ஈற்ற.***

## எழுவாய் வேற்றுமை

இது முதல் வேற்றுமை, பெயர் வேற்றுமை எனவும் பெயர் பெறும்.

பெயரை எழுவாய்ப் பொருளாக வேறுபடுத்தும் வேற்றுமை எழுவாய் வேற்றுமை. இது பெயர் தோன்றும் நிலையில் நிற்கும். உருபு எதுவும் ஏற்காமல் தனித்து நிற்கும் இயல்புடையது எழுவாய் வேற்றுமை ஆகும்.

## எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகள்

1. பொருளின் தன்மையைச் சுட்டுதல்
2. ஏவல் பொருளில்(வியங்கோள்) வருதல்
3. தொழிலைக் குறித்து வருதல்
4. வினாப் பொருளில் வருதல்.
5. பண்பை உணர்த்துதல்
6. பெயரைக் குறித்தல்

ஆகிய ஆறினையும் பயனிலையாக (முடிக்கும் சொல்லாக)க் கொண்டு எழுவாய் வேற்றுமை அமையும்.

(எ.கா) ஆ உண்டு
ஆ செல்க
ஆ கிடந்தது
ஆ எவன்?
ஆ கரிது
ஆ பல.

(முடிக்கும் சொல்லின் பொருள் அத்தொடர் மொழிக்குப் பயனாகும். எனவே அது பயனிலை எனக் கூறப்பட்டது என்பார் சேனாவரையர்)

**நூற்பா. 66**

**பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று**
**அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.**

## தொகைச் சொல் எழுவாய் ஆதல்

1. பெயர் தனியாக வருவது மட்டுமன்றி, பெயரும் பெயரும் சேர்ந்து வரும் தொகைச் சொற்களும் உண்டு. இவையும் எழுவாய் வேற்றுமைக்குரிய பொருண்மை சுட்டல் முதலிய பயனிலைகளைப் பெற்று முடிந்து வரும்.

**(எ.கா)** யானைக் கொம்பு உண்டு (யானை-பெயர், கொம்பு-பெயர்)

தமிழ்த் தாய் வாழ்க

பெண் தெய்வம் நின்றது

நற்றாய் யார்?

**நூற்பா. 67**

**பெயரின் ஆகிய தொகையு மாருளவே**
**அவ்வும் உரிய அப்பால் ஆன.**

2. எத்தகைய பெயரும் வெளிப்படையாக நின்று பயனிலை கொள்ளுவதே சிறப்பாகும் என்று புலவர் சொல்லுவார். (எழுவாய் வெளிப்படாத நிலை தோன்றா எழுவாய் எனப்படும். இது சிறப்பானதன்று)

**(எ.கா)** நான் வந்தேன்

நீ செல்

வந்தேன், செல் என்று தனித்து வருவது தோன்றா எழுவாய்.

**நூற்பா. 68**

**எவ்வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி**
**அவ்வியல் நிலையல் செவ்விது என்ப.**

## உருபுகள் நிற்கும் இடம்

வேற்றுமையுருபுகள் ( ஐ, ஒடு, கு, இன், அது, கண்) தம் நிலையில் திரியாமல் பெயரின் இறுதியில் வரும்.

சாத்தன் - சாத்தனை
சாத்தனொடு
சாத்தனுக்கு
சாத்தனின்
சாத்தனது
சாத்தன்கண்

**நூற்பா 69**

**கூறிய முறையின் உருபுநிலை திரியாது**
**ஈறுபெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப.**

## பெயர்ச் சொல்லின் இயல்பு

பெயர்ச்சொல் காலம் காட்டாது. வினையாலணையும் பெயர் மட்டும் காலம் காட்டும்.

**(எ.கா)** சாத்தன், கொற்றன் - பெயர்

உண்டவன்-(வினையாலணையும் பெயர்) - இறந்தகாலம்

***நூற்பா 70***

***பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா***
***தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே.***

## இரண்டாம் வேற்றுமை

'ஐ' எனும் இரண்டாம் வேற்றுமை உருபு எப்பெயரோடு சேர்ந்து வந்தாலும்,

1. தெரிநிலை வினை
2. குறிப்பு வினை

என்னும் இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட பொருளின் மேல் வரும்.

(எ.கா) குடத்தை வனைந்தான் - தெரிநிலை வினை

குழையை உடையன் - குறிப்பு வினை

***நூற்பா 7***

***இரண்டாகு வதே***
***ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி***
***எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு***
***அவ்விரு முதலின் தோன்றும் அதுவே.***

## இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள் பாகுபாடுகள்

*1.காப்பு (காவல்), 2.ஒப்பு (ஒப்புமை), 3.ஊர்தி (இயங்குதல்), 4.இழை, 5.ஓப்பு (துரத்துதல்), 6.புகழ், 7.பழி, 8.பெறல், 9.இழவு (இழத்தல்), 10.காதல், 11.வெகுளி (கோபம்), 12.செறல் (துன்புறுதல்) 13.உவத்தல் (மகிழ்ச்சி), 14.கற்பு (கற்றல்), 15.அறுத்தல், 16.குறைத்தல், 17.தொகுத்தல், 18.பிரித்தல், 19.நிறுத்தல், 20.அளவு, 21.எண், 22.ஆக்கல், 23.சார்தல், 24.செலவு, 25.கன்றல் (வெகுளுதல்), 26.நோக்கல், 27.அஞ்சல் (அச்சம்), 28.சிதைப்பு (அழித்தல்) எனும் பொருட்களில் இரண்டாம் வேற்றுமை வரும்.*

| | | |
|---|---|---|
| **(எ.கா)** | ஊரைக் காக்கும் | - காப்பு |
| | தாயை ஒக்கும் | - ஒப்பு |
| | தேரை ஊரும் | - ஊர்தி |

| | |
|---|---|
| மரத்தை இழைக்கும் | - இழை |
| கிளியை ஓட்டும் | - ஓப்பு |
| நாட்டைப் புகழும் | - புகழ் |
| பகைவரைப் பழிக்கும் | - பழி |
| புதல்வரைப் பெறும் | - பெறல் |
| பொருளை இழக்கும் | - இழவு |
| தமிழைக் காதலிக்கும் | - காதல் |
| படையை வெகுளும் | - வெகுளி |
| தீயோரைச் செறும் | - செறல் |
| நண்பரை உவக்கும் | - உவத்தல் |
| நூலைக் கற்கும் | - கற்பு |
| கயிற்றை அறுக்கும் | - அறுத்தல் |
| மரத்தைக் குறைக்கும் | - குறைத்தல் |
| நெல்லைத் தொகுக்கும் | - தொகுத்தல் |
| வேலியைப் பிரிக்கும் | - பிரித்தல் |
| பொன்னை நிறுக்கும் | - நிறுத்தல் |
| அரிசியை அளக்கும் | - அளவு |
| பணத்தை எண்ணும் | - எண் |
| சோற்றை ஆக்கும் | - ஆக்கல் |
| தலைவனைச் சாரும் | - சார்தல் |
| நெறியைச் செல்லும் | - செலவு |
| சூதினைக் கன்றும் | - கன்றல் |
| குழந்தையை நோக்கும் | - நோக்கல் |
| கள்வரை அஞ்சும் | - அஞ்சல் |
| காட்டைச் சிதைக்கும் | - சிதைப்பு |

**நூற்பா 72**

***காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்***
***ஒப்பின் புகழின் பழியின் என்றா***
***பெறலின் இழவின் காதலின் வெகுளியின்***
***செறலின் உவத்தலின் கற்பின் என்றா***
***அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்***
***நிறுத்தலின அளவின் எண்ணின் என்றா***
***ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்***
***நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா***

***அன்ன பிறவும் அம்முதற் பொருள***
***என்ன கிளவியும் அதன்பால் என்மனார்.***

## மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபு ஒடு ஆகும். ஆன் என்பதும் இதற்குரிய உருபாகும் என்பது சேனாவரையர் கருத்து.

ஒடு எனும் உருபினை உடைய மூன்றாம் வேற்றுமை 1. வினைமுதல் 2. கருவி எனும் இரண்டையும் பொருளாக உடையது.

ஒடு - கொடியொடு சுற்றப்பட்டான் - வினைமுதல்

ஊசியொடு குயின்ற தூசும் பட்டும் - கருவி.

ஆல் - அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது - வினைமுதல்

வேலால் எறிந்தான். - கருவி

(வினைமுதல் - கருவி முதலான காரணங்களைச் செயல்படுத்துவது. அதாவது வினைக்கு முதலாகின்ற தன்மை உடையது வினை முதலாகும். கருவி – வினை செய்வதற்குத் துணையாய் நிற்பது)

**நூற்பா 73**

***மூன்றா குவதே***
***ஒடுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி***
***வினைமுதல் கருவி அனைமுதற்று அதுவே.***

## மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருட்பாகுபாடுகள்

1. அதனின் இயறல் (அதனால் செய்யப்படுதல்), 2. அதன்தகு கிளவி (அதனால் தகுதி பெறுதல்), 3. அதன்வினைப்படுதல் (அதனால் தொழில்படுதல்), 4. அதனின் ஆதல், 5. அதனின் கோடல் (அதனால் கொள்ளப்படுதல்), 6. அதனொடு மயங்கல் (கலத்தல்), 7. அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி (அதனொடு சேர்ந்து தொழில்படுதல்), 8. அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி (அதனொடு வேறுபட்டுத் தொழில்படுதல்), 9. அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை (ஒப்பில்லாததை ஒப்புமையாக்கல்), 10. இன் ஆன் ஏது ஈங்கு என வரூஉம், (இன் ஆன் எனும் உருபுகளைப் பெற்று ஏதுப் பொருளில் வருதல்) எனும் பொருட்களில் மூன்றாம் வேற்றுமை வரும்.

(எ.கா) 1. மண்ணால் செய்த குடம்

2. கல்வியால் பெரியவன்

3. இராமனால் முடியும் வில் வளைப்பு

4. வணிகத்தினால் செல்வனாயினான்
5. திறமையால் பெற்ற பரிசு
6. பாலொடு கலந்த நீர்
7. ஆசிரியரொடு வந்த மாணவன்
8. மலையொடு போரிட்ட யானை
9. பொன்னொடு இரும்பனையர் நின்னொடு பிறரே
10. காலான் முடவன், முயற்சியின் பெரியன்

**நூற்பா 74**

**அதனின் இயறல் அதற்றகு கிளவி**
**அதன் வினைப்படுதல் அதனின் ஆதல்**
**அதனின் கோடல் அதனொடு மயங்கல்**
**அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி**
**அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி**
**அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை**
**இன் ஆன் ஏது ஈங்கென வரூஉம்**
**அன்ன பிறவும் அதன்பால என்மனார்.**

## நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமை உருபு ‘கு’ ஆகும். அது எந்தப் பொருளையும் ஏற்றுக்கொள்ளும் இயல்பினை உடையதாகும்.

**(எ.கா)** ஏழைக்கு உணவு கொடுத்தான்
மாணவர்க்குப் பாடம் கற்பித்தான்

**நூற்பா 75**

**நான்கு ஆகுவதே**
**கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே**

## நான்காம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகள்

1. அதற்கு வினையுடைமை (ஒன்றற்குப் பயன்படுதல்), 2. அதற்கு உடம்படுதல் 3. அதற்குப்படுபொருள் (பங்கிடுதல்) 4. அதுவாகு கிளவி(ஒன்று மற்றொன்று ஆதல்) 5. அதற்கு யாப்பு உடைமை ( பொருந்தி நிற்றல்) 6. அதன் பொருட்டாதல்(ஒன்றைப் பெறுவதற்காக ஒன்றைச் செய்தல்) 7. நட்பு 8. பகை 9.

காதல் 10. சிறப்பு எனும் இவற்றோடும் இவற்றைப் போன்ற பிற பொருட்களிலும் நான்காம் வேற்றுமை உருபு வரும்.

**(எ.கா)**

1. கரும்புக்கு வேலி - அதற்கு வினையுடைமை
2. சாத்தனுக்கு மகள் உடன்பட்டாள் - அதற்கு உடம்படுதல்
3. சிவனுக்குக் கூறு உமையம்மை - அதற்கு படுபொருள்
4. மாவுக்கு அரிசி - அதுவாகு கிளவி
5. கைக்கு வளையல் - அதற்கு யாப்புடைமை
6. கூலிக்கு வேலை - அதன் பொருட்டாதல்
7. கண்ணனுக்கு நண்பன் - நட்பு
8. எலிக்குப் பகை பூனை - பகை
9. அவளுக்குக் காதலன் - காதல்
10. கற்போர்க்குக் கேள்வி சிறந்தது - சிறப்பு

**நூற்பா 76**

**அதற்குவினை உடைமையின் அதற்குஉடம் படுதலின்**
**அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்**
**அதற்குயாப் புடைமையி அதன்பொருட்டு ஆதலின்**
**நட்பின் பகையின் காதலின் சிறப்பின் என்று**
**அப்பொருட் கிளவியும் அதன்பால் என்மனார்.**

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' என்பதாகும். இது பொருள்களை ஒப்பிட்டு, 'இதனை விட இது இத்தன்மையுடையது' என்று கூறும் பொருளில் வரும்.

**(எ.கா)** பாலின் வெளிது கொக்கு
காக்கையின் கரிது களம்பழம்.

**நூற்பா 77**

**ஐந்தா குவதே**
**இன்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**இதனின் இற்றுஇது என்னும் அதுவே.**

## ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருட்பாகுபாடுகள்

*1. வண்ணம் (நிறம்), 2. வடிவு, 3. அளவு, 4. சுவை, 5. தண்மை, 6. வெம்மை, 7. அச்சம், 8. நன்மை, 9. தீமை, 10. சிறுமை, 11. பெருமை, 12. வன்மை, 13. மென்மை, 14. கடுமை, 15. முதுமை, 16. இளமை, 17. சிறத்தல், 18. இழித்தல், 19. புதுமை, 20. பழமை, 21. ஆக்கம், 22. இன்மை, 23. உடைமை, 24. நாற்றம், 25. தீர்தல்(நீங்குதல்), 26. பன்மை, 27. சின்மை, 28. பற்றுவிடுதல் என்பனவும் இவை போன்ற பிற பொருட்களிலும் ஐந்தாம் வேற்றுமை வரும்.*

1. பாலின் வெளிது கொக்கு - வண்ணம்
2. சந்திரனின் வட்டம் சக்கரம் - வடிவு
3. நகத்தின் நெடிது விரல் - அளவு
4. தேனின் இனியது தமிழ் - சுவை
5. நீரின் குளிர்ந்தது இது - தண்மை
6. தீயின் வெய்யது சுடுசொல் - நன்மை
7. கள்ளரின் அஞ்சும் - அச்சம்
8. கற்றலின் நன்று கேட்டல் - நன்மை
9. களவின் தீயது பொய்மை - தீமை
10. கடுகின் சிறியது ஐயவி - சிறுமை
11. நிலத்தின் பெரியது நட்பு - பெருமை
12. யானையின் வலியது புலி - வன்மை
13. தளிரின் மெல்லிய கை - மென்மை
14. இதனின் கடிது இது - கடுமை
15. கபிலனின் முதியவன் கந்தன் - முதுமை
16. ராதையின் இளையவள் கோதை - இளமை
17. உறவின் சிறந்தது நட்பு - சிறத்தல்
18. பகையின் இழிந்தது புறங்கூறல் - இழித்தல்
19. தாயின் புதியன் மகன் - புதுமை
20. நன்னூலின் பழையது தொல்காப்பியம் - பழமை
21. வாணிகத்தின் ஆயினான் - ஆக்கம்
22. சாத்தனின் ஏழை குப்பன் - இன்மை
23. செல்வரின் உடையவர் சான்றோர் - உடைமை
24. அல்லியின் மணப்பது செண்பகம் - நாற்றம்
25. ஊரின் நீங்கினான் /தீர்ந்தான் - தீர்தல்
26. கையின் பலவாம் விரல்கள் - பன்மை

27. நெல்லின் சிலவாம் பதர் - சின்மை

28. உலகின் பற்றுவிட்டான் - பற்றுவிடுதல்

அன்னபிற என்றதால் எல்லை, ஏது எனும் பொருட்களும் கொள்ளப்படும்.

எல்லை - மதுரையின் தெற்கு

ஏது - முயற்சியில் பிறப்பதால் ஒலி நிலையாது.

***நூற்பா 78***

***வண்ணம் வடிவே அளவே சுவையே***<br>***தண்மை வெம்மை அச்சம் என்றா***<br>***நன்மை தீமை சிறுமை பெருமை***<br>***வன்மை மென்மை கடுமை என்றா***<br>***முதுமை இளமை சிறத்தல் இழித்தல்***<br>***புதுமை பழமை ஆக்கம் என்றா***<br>***இன்மை உடைமை நாற்றம் தீர்தல்***<br>***பன்மை சின்மை பற்றுவிடுதல் என்றா***<br>***அன்னபிறவும் அதன் பால என்மனார்.***

## ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமை உருபு 'அது' என்பதாகும். 'அ' என்பதும் ஆறாம் வேற்றுமை உருபு என்பார் சேனாவரையர். இது ஒரு பொருளினின்று பிரிக்க இயலாததாகிய தற்கிழமைப் பொருளிலும் ஒரு பொருளிலிருந்து வேறுபட்டு நிற்கும், அதாவது பிரிக்கக் கூடிய தன்மை உடையதாகிய பிறிதின் கிழமைப் பொருளிலும் இதனது இது (எ.கா முருகனது கை) எனும் வாய்ப்பாட்டால் நிற்கும் கிழமைப்பொருளை உணர்த்துவதாய் வரும்.

(எ.கா) எனது கை - தற்கிழமை (பிரிக்க இயலாதது)<br>எனது சட்டை- பிறிதின் கிழமை (பிரிக்க இயல்வது)

***நூற்பா 79***

***ஆறா குவதே***<br>***அதுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி***<br>***தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்***<br>***அன்ன கிளவிக் கிழமைத்து அதுவே.***

## ஆறாம் வேற்றுமைக்குரிய பொருட்பாகுபாடுகள்

*1. இயற்கை (இயல்பு), 2. உடைமை, 3. முறைமை, 4. கிழமை (உரிமையாகி வரும் பொருள்), 5. செயற்கை, 6. முதுமை, 7. வினை (செயல்), 8. கருவி, 9. துணை, 10. கலம் (எழுத்து மற்றும் உடைமை முறையில் உரிமையாதல்), 11. முதல் (பொருள்), 12. ஒருவழி உறுப்பு (ஒன்றுபட்டு நிற்கும் உறுப்பு) 13. குழு, 14. தெரிந்து மொழிச் செய்தி (செய்யுள்), 15. நிலை (ஒரு பொருளின் நிலை), 16. வாழ்ச்சி (வாழ்க்கை உரிமை), 17. திரிந்து வேறுபடுதல் எனும் பொருட்கள் ஆறாம் வேற்றுமைக்கு உரியன.*

| | |
|---|---|
| *1. இலையது பசுமை* | *- இயற்கை* |
| *2. சாத்தனது தோட்டம்* | *- உடைமை* |
| *3. பசுவினது கன்று* | *- முறைமை* |
| *4. முருகனது குறிஞ்சிநிலம்* | *- கிழமை* |
| *5. சாத்தனது கல்வியறிவு* | *- செயற்கை* |
| *6. அரசனது முதுமை* | *- முதுமை* |
| *7. கண்ணனது வருகை* | *- வினை* |
| *8. இராமனது வில்* | *- கருவி* |
| *9. அவனது துணை* | *- துணை* |
| *10. சாத்தனது ஒற்றிக்கலம்* | *- கலம்* |
| *(ஒற்றிக்கலம் - போக்கிய பாத்திரம்)* | |
| *11. சாத்தனது முதல்* | *- முதல்* |
| *12. யானையது தந்தம்* | *- ஒருவழி உறுப்பு* |
| *13. எள்ளது குவியல்* | *- குழு* |
| *14. கபிலரது பாட்டு* | *- மொழிச்செய்த பாட்டு* |
| *15. கண்ணனது வறுமை* | *- நிலை* |
| *16. யானையது காடு* | *- வாழ்ச்சி* |
| *17. எள்ளினது துவையல்* | *- திரிந்து வேறுபடுதல்* |

***நூற்பா 80***

***இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்***
***செயற்கையின் முதுமையின் வினையின் என்றா***
***கருவியின் துணையின் கலத்தின் முதலின்***
***ஒருவழி உறுப்பின் குழுவின் என்றா***
***தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்***
***திரிந்துவேறு படூஉம் பிறவும் அன்ன***

**கூறிய மருங்கின் தோன்றும் கிளவி**
**ஆறன் பால என்மனார் புலவர்.**

## ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமை உருபு கண் (இடம்) ஆகும். இது ஒரு செயல் நிகழ்கின்ற 1. இடம், 2. நிலம், 3. காலம் ஆகிய மூவகைக் குறிப்புப் பொருளிலும் வரும்.

**(எ.கா)** விளையாட்டுக் களத்தின் கண் நின்றான் - இடம்
மாடத்தின்கண் இருந்தான் - நிலம்
விடியற்கண் எழுந்தான் - காலம்

**நூற்பா 81**

**ஏழாகு வதே**
**கண்ணனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்**
**அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே.**

## ஏழாம் வேற்றுமை உருபுகள்

1. கண், 2. கால், 3. புறம், 4. அகம், 5. உள், 6. உழை(பக்கம்), 7. கீழ், 8. மேல், 9. பின், 10. சார் (பகுதி), 11. அயல்(அருகிடம்), 12. புடை, 13. தேவகை (திசைக்கூறு), 14. முன், 15. இடை, 16. கடை, 17. தலை, 18. வலம், 19. இடம் எனும் பத்தொன்பதும் இவை போல்வன பிறவும் ஏழாம் வேற்றுமைப் பொருளை (இடப்பொருளை) உணர்த்தும் உருபுகள்(சொற்கள்) ஆகும்.

**(எ.கா)**
1. திருவிழாவின் கண் கூட்டம் - கண்
2. ஊர்க்கால் செய் - கால்
3. ஊர்ப்புறம் நின்ற மரம் - புறம்
4. மதிலகத்து இருந்தான் - அகம்
5. வீட்டினுள் இருந்தான் - உள்
6. அரசனுழைச் சென்றான் - உழை
7. ஆலின் கீழ் கிடந்த இலை - கீழ்
8. மரத்தின் மேல் குரங்கு - மேல்
9. ஏர்ப்பின் சென்றான் - பின்
10. காட்டுச் சார் ஓடும் ஆறு - சார்
11. ஊருக்கு அயல் இருக்கும் குளம் - அயல்

12. மதிற்புடை ஏறினான் - புடை
13. வடக்கண் வேங்கடம் - தேவகை
14. தேர் முன் சென்றான் - முன்
15. சான்றோரிடை இருந்தான் - இடை
16. தெருக்கடைச் சென்றான் - கடை
17. தந்தை தலைச் சென்றான் - தலை
18. கைவலத்து உள்ளது - வலம்
19. என்னிடத்து இருந்தான் - இடம்

***நூற்பா 82***

**கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்**
**பின்சார் அயல்புடை தேவகை எனாஅ**
**முன்இடை கடைதலை வலம்இடை எனாஅ**
**அன்ன பிறவும் அதன்பால என்மனார்.**

## வேற்றுமைத் தொகையை விரித்துப் பொருள் காணும் முறை

வேற்றுமைத் தொகையை விரித்துப் பொருள்கொள்ளும் போது இடையில் பொருள் விளக்கத்திற்குத் தேவையான சொற்களைச் சேர்த்துக் கொள்ளலாம் எனபர் புலவர்.

(எ.கா) மட்குடம் - மண்ணால் இயன்ற குடம்
கருங்குழல்பேதை-கருமையான கூந்தலை உடையபெண்

***நூற்பா 83***

**வேற்றுமைப் பொருளை விரிக்கும் காலை**
**ஈற்றுநின்று இயலும் தொகைவயின் பிரிந்து**
**பல்லா றாகப் பொருள்புணர்ந்து இசைக்கும்**
**எல்லாச் சொல்லும் உரிய என்ப.**

# இயல் - 3

# வேற்றுமை மயங்கியல்

வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கி நின்று பொருள் வேற்றுமை செய்வதை உணர்த்துவதால் இவ்வியல் வேற்றுமை மயங்கியல் எனப்படுகிறது. இம் மயக்கம், பொருள் மயக்கம், உருபு மயக்கம் என இரு வகைப்படும்.

ஒரு வேற்றுமை உருபு தனது பொருளோடு, வேறொரு வேற்றுமைப் பொருளிலும் பொருந்தி நின்று பொருள் தந்தால் அது பொருள் மயக்கம் ஆகும். ஒரு பொருளில் இரண்டு உருபுகள் சென்று பொருந்தினாலும் அதுவும் பொருள் மயக்கம் என்றே கொள்ளப்படும்.

ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் வேறொரு உருபு பொருத்தமின்றி நின்றால் (நிற்க வேண்டிய வேற்றுமையின் பொருளைத் தரும்) அது உருபு மயக்கம் எனப்படும்.

இவ்விரு வகையிலும் நிகழும் வேற்றுமை மயக்கத்தினை இவ்வியல் விளக்குகிறது.

## 1. பொருள் மயக்கம்

### 'ஐ'யும் 'கண்'ணும் மயங்குதல்

கருமம் அல்லாத சார்புப் பொருளுக்கு உரியது இரண்டாம் வேற்றுமை ஆகும். அதற்கு ஏழாம் வேற்றுமையும் வரும்.

**(எ.கா)** அரசரைச் சார்ந்தான் - அரசர்கண் சார்ந்தான்,
(கருமம் அல்லாச் சார்பு)

(சார்பு இருவகை. 1. கருமச்சார்பு, 2. கருமமல்லாச்சார்பு. உடலால் ஒன்றைச் சார்வது கருமச்சார்பு. கொள்கை அல்லது கருத்தால் ஒன்றைச் சார்வது கருமமல்லாச்சார்பு. தூணைச் சார்ந்தான் என்பது கருமச்சார்பு )

**நூற்பா 84**

**கருமம் அல்லாச் சார்புஎன் கிளவிக்கு**
**உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை.**

உறுப்பினைக் குறித்து வரும் சினைச்சொல் வினை முடிவினை ஏற்கும் போது இரண்டாம் வேற்றுமையும்(ஐ), ஏழாம் வேற்றுமையும்(கண்) ஒத்து வரும்.

**(எ.கா)** கிளையை வெட்டினான் - கிளையின் கண் வெட்டினான்

**நூற்பா 85**

***சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்***
***வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்.***

கன்றல்(வெகுளுதல்), செலவு(பயணம்) எனும் பொருட்களில் வரும் சொற்கள் இரண்டாம் வேற்றுமை உருபையும், ஏழாம் வேற்றுமை உருபையும் பெறும்.

**(எ.கா)** சூதினைக் கன்றினான் - சூதின்கண் கன்றினான்
நெறியைச் சென்றான் - நெறியின்கண் சென்றான்

**நூற்பா 86**

***கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே.***

## முதல் சினைப் பெயர்களில் மயங்கும் வேற்றுமை

முதற்பொருளும் சினைப்பொருளும் தொடர்ந்து நிற்பது முதற்சினைப் பொருளாகும். அத்தொடரில் 1. முதற்பொருளுக்கு ஆறாம் வேற்றுமை உருபு (அது) வந்தால் சினைக்கு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வரும்.

**(எ.கா)** யானையது துதிக்கையை வெட்டினான்
(யானை – முதல், துதிக்கை – சினை)

**நூற்பா 87**

***முதல்சினைக் கிளவிக்கு அதுஎன் வேற்றுமை***
***முதற் கண் வரினே சினைக்கு ஐ வருமே.***

2. முதற்சொல்லுக்கு இரண்டாம் வேற்றுமை(ஐ) வந்தால் சினைக்கு ஏழாம் வேற்றுமை (கண்) வரும்.

**(எ.கா)** யானையை கோட்டின்கண் வெட்டினான்

**நூற்பா 88**

***முதன்முன் ஐவரின் கண்என் வேற்றுமை***
***சினைமுன் வருதல் தெள்ளிது என்ப.***

முதல்சினை என்பனவற்றை வரையறுத்துக் கூறுவது இயலாது. சொல்பவரின் குறிப்பினால் எது முதல், எது சினை என்பது தெளியப்படும். (முதல் சினையாவதும், சினை முதலாவதும் உண்டு

உடம்பு முதல் ஆனால், கை சினையாகும்

கை முதல் ஆனால், விரல் சினையாகும்

விரல் முதல் ஆனால் நகம் சினையாகும்)

***நூற்பா 89***

**முதலும் சினையும் பொருள்வேறு படாஅ**
**நுவலும் காலைச் சொற்குறிப் பினவே.**

பல பொருள்கள் அடங்கிய தொகுதி பிண்டமாகும். பிண்டப் பெயரை முதல், சினைப் பெயருக்குரிய இலக்கணத்தின்படியே (நூற்பா. 87,88) கூறுதல் வேண்டும். அவற்றை முதலும் சினையுமாக வழங்குதல் மரபாகும்.

**(எ.கா)** குப்பையது தலையைச் சிதறினான்

(முதல்- அது, சினை- ஐ)

குப்பையை தலைக்கண் சிதறினான்

(முதல் - ஐ, சினை – கண்)

***நூற்பா 90***

**பிண்டப் பெயரும் ஆயியல் திரியா**
**பண்டுஇயல் மருங்கின் மரீஇய மரபே.**

## ஒடு உருபு நிற்குமிடம்

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் ஒருவினையைப் பெற்று வருவது ஒருவினைக்கிளவி எனப்படும். அவ்வாறு வரும் போது உயர்ந்த பொருளை உணர்த்தும் சொல்லின் பின்னர் ‘ ஒடு’ உருபு சேர்த்துக் கூற வேண்டும்.

**(எ.கா)** ஆசிரியரொடு மாணவர் வந்தார்

அரசரொடு அமைச்சர் வந்தார்

***நூற்பா 91***

**ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.**

## ஏதுப் பொருளில் மயங்கல் (ஆன் - இன்)

இதனால் இது ஆயிற்று என்பது ஆக்கத்தோடு கூடிய காரணச் சொல்லாகும். இதற்கு மூன்றாம் வேற்றுமை (அதனின் ஆதல் - நூற்பா. 74) ஐந்தாம் வேற்றுமை (ஆக்கம் - நூற்பா. 78) ஆகிய இரு உருபுகளும் ஒத்த பொருளை உடையன.

**(எ.கா)** வாணிகத்தான் செல்வந்தன் ஆயினான் (ஆன்)
வாணிகத்தின் செல்வந்தன் ஆயினான் (இன்)

***நூற்பா 92***

**மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய**
**ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி**
**நோக்கு ஓரனைய என்மனார் புலவர்.**

## நோக்கல் பொருளில் மயக்கம்

(நோக்கு இருவகைப்படும். 1. நோக்கிய நோக்கம் - கண்ணால் ஒன்றை நோக்குவது. 2. நோக்கல் நோக்கம் - மனத்தால் ஒன்றை நோக்குவது.)

நோக்கல் நோக்கமாகிய இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள் மூன்றாம் வேற்றுமைக்கும் (ஆல்), ஐந்தாம் வேற்றுமைக்கும் (இன்) உரிய ஏதுப் பொருளிலும் வரும்.

**(எ.கா)** வான்நோக்கி வாழும் உயிரெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

வான்நோக்கி → வானை நோக்கி (ஐ)
வான்நோக்கி → வானால் நோக்கி (ஆல்)
வான்நோக்கி → வானின் நோக்கி (இன்)

கோல் நோக்கி → கோலை நோக்கி (ஐ)
கோல் நோக்கி → கோனால் நோக்கி (ஆல்)
கோல் நோக்கி → கோனின் நோக்கி (இன்)

***நூற்பா 93***

**இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்அவ்**
**இரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும்.**

## ஆறாம் வேற்றுமை உயர்திணைத் தொகையில் உருபு மயக்கம்

உயர்திணையில் ஆறாம் வேற்றுமை உருபு(அது) மறைந்து வரும் தொகைச் சொற்கள் உண்டு. அதை விரித்துக் கூறும் போது 'அது' என்பதை விடுத்து 'கு' எனும் நான்காம் வேற்றுமை உருபால் கூற வேண்டும்.

**(எ.கா)** நம்பி மகன் (நம்பியது மகன்) – நம்பிக்கு மகன்

***நூற்பா 94***

**அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்**
**அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே.**

## தடுமாறு தொழிற் பெயரில் வரும் மயக்கம்

முன்னும் பின்னும் பெயர்ச்சொல் வர, இடையில் வினைச்சொல் வந்தால் பொருள் கொள்வதில் தடுமாற்றத்தைத் தரும். இது தடுமாறு தொழிற்பெயர் எனப்படும். இவ்வாறு நிற்கும் தொடரில் இரண்டாம்(ஐ), மூன்றாம் (ஆல்) வேற்றுமைகள் மயங்கி வரும். உரிய பொருள் வருமிடத்து அவை ஏற்றுக்கொள்ளப்படும்.

**(எ.கா)** புலியைக் கொன்ற யானை
புலி கொல் யானை
புலியால் கொல்லப்பட்ட யானை

***நூற்பா 95***

**தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்**
**கடிநிலை இலவே பொருள்வயின் ஆன.**

தடுமாறு தொழிற் பெயரில் இறுதியில் நிற்கும் பெயரோடு பொருள் வேறுபாட்டை அறிவதற்குரிய சொல் வரும். அதைக் கொண்டு தடுமாற்றத்தைப் போக்கிக் குறிப்பால் பொருளை உணர்வர்.

**(எ.கா)** புலிகொல் யானை ஓடியது
- புலியைக் கொன்ற யானை ஓடியது.
புலிகொல் யானை கிடந்தது
- புலியால் கொல்லப்பட்ட யானை கிடந்தது.
(ஓடியது, கிடந்தது என்பன பொருள் உணரும் சொற்கள்).

***நூற்பா 96***

**ஈற்றுப் பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்**
**வேற்றுமை தெரிய உணரு மோரே.**

## ஓம்படை கிளவியில் மயங்குதல்

பாதுகாத்தல் என்னும் பொருளைத் தருகின்ற சொல் ஓம்படைக்கிளவி எனப்படும். அத்தொகைச் சொல், இரண்டாம்(ஐ), மூன்றாம் (ஆல்) வேற்றுமை உருபுகளைக் கொண்டு விரித்துப் பொருள் கொள்ளப்படும்.

(எ.கா)

புலியைப் போற்றிவா — புலியைப் போற்றிவா / புலியால் போற்றிவா

***நூற்பா 97***

**ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்**
**தாம்பிரி விலவே தொகைவரு காலை.**

## வாழ்ச்சிக் கிழமையில் மயங்குதல்

ஆறாம் வேற்றுமைக்குரிய வாழ்ச்சிக் கிழமை, வாழும் நிலத்தின் உரிமை காரணமாக ஏழாம் வேற்றுமை உருபையும் பெற்று வரும்.

**(எ.கா)**

காட்டியானை — காட்டது யானை (அது) / காட்டின்கண் யானை (கண்)

***நூற்பா 98***

**ஆறன்மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு**
**ஏழும் ஆகும் உறைநிலத் தான.**

## கொடைப் பொருளில் அது உருபு

கொடைப் பொருளை உணர்த்தும் நான்காம் வேற்றுமைத் தொகைச் சொல் விரித்துப் பொருள் கொள்ளும் போது ஆறாம் வேற்றுமை உருபையும் ஏற்கும்.

**(எ.கா)**

நாகர் பலி — நாகர்க்கு நேர்ந்த பலி (கு) / நாகரது பலி (அது)

***நூற்பா 99***

**குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி**
**அப்பொருள் ஆதற்கு உரித்தும் ஆகும்.**

## அச்சப் பொருளில் மயக்கம்

அச்சப் பொருள் ஐந்தாம் வேற்றுமைக்கும் இரண்டாம் வேற்றுமைக்கும் உரியது. அச்சம் பற்றிய தொகைச்சொல்லை அவ் இரு வேற்றுமைகளைக் கொண்டும் விரிக்கலாம். அவை ஒரே உரிமையுடையன.

**(எ.கா)** பழியஞ்சும் — பழியின் அஞ்சும்(இன்)
பழியஞ்சும் — பழியை அஞ்சும் (ஐ)

***நூற்பா 100***

***அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்***
***எச்சம் இலவே பொருள்வயி னான.***

### புறனடை

விதி கூறப்பட்ட வேற்றுமை மயக்கங்களும், அவற்றைப் போன்ற பிறவும் தொன்றுதொட்டு வருகின்ற வழக்கத்திலிருந்து மாறுவதில்லை. அவை உருபாலும், பொருளாலும் ஒன்று நிற்க வேண்டிய இடத்தில் வேறொன்று நின்று, தன் பொருளையும், பிறதொன்றின் பொருளையும் தருவது உண்டு. ஆராய்ந்து உணர்பவர்களுக்கு இது மாறுபாடு உடையது அல்ல.

**(எ.கா)** சாத்தனை வெகுண்டான் - சாத்தனொடு வெகுண்டான்
கடலொடு காடு ஒட்டாது - கடலைக் காடு ஒட்டாது

***நூற்பா 101***

***அன்ன பிறவும் தொல்நெறி பிழையாது***
***உருபினும் பொருளினும் மெய்தடு மாறி***
***இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்***
***திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே.***

## உருபுகள் தொடர்ந்து அடுக்கி வருதல்

ஒரு தொடரில் உருபுகள் பல அடுக்கி வருவதுண்டு. அத்தகைய சொற்கள் பொருள் வேறுபடாமல் இருக்குமானால், பொருத்தமான ஒரு சொல்லைக் கொண்டு முடிக்கப்படும்.

**(எ.கா)** என்னொடும் நின்னொடும் சூழாது.
யானைய**து** கோட்**டை** நுனிக்**கண்** வா**ளால்** வெட்டினான்

***நூற்பா 102***

**உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி**

**ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே.**

## உருபுகள் விரிந்து நிற்றல்

ஐ முதல் கண் ஈறாக கூறப்பட்ட ஆறு உருபுகளும் வேற்றுமைத் தொடரின் இடையிலும், இறுதியிலும் தமக்குரிய பொருளில் வரும் அதனை நீக்காமல் ஏற்றுக் கொள்வர்.

***(எ.கா)***

| **உருபு** | ***இடையில்*** | ***இறுதியில்*** |
|---|---|---|
| ஐ | நிலத்தைக் கடந்தான் | கடந்தான் நிலத்தை |
| ஆல் | சாத்தனொடு வந்தான் | வந்தான் சாத்தனொடு |
| கு | சாத்தற்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தற்கு |
| இன் | சாத்தனின் வலியன் | வலியன் சாத்தனின் |
| அது | சாத்தனது ஆடை | ஆடை சாத்தனது |
| கண் | வீட்டின்கண் இருந்தான் | இருந்தான் வீட்டின்கண் |

***நூற்பா 103***

**இறுதியும் இடையும் எல்லா உருபும்**

**நெறிபடுபொருள்வயின் நிலவுதல் வரையார்.**

## உருபு மற்றொன்றினை ஏற்றலும் தொகையும்

ஓர் உருபு பிறிதோர் உருபை ஏற்று வருவதும், ஆறு உருபுகளும் (ஐ முதல் கண் வரை) மறைந்து வருவதும் ஆகிய இவை இரண்டும் தொன்று தொட்டு வழங்கி வருபவை ஆகும்.

***(எ.கா)*** சாத்தன் + அது = சாத்தனது. (அது எனும் உருபைப் பெற்றது)

நிலம் + ஐ + கடந்தான் = நிலங்கடந்தான்

(ஐ உருபு மறைந்து வந்தது)

***நூற்பா 104***

**பிறிதுபிறிது ஏற்றலும் உருபுதொக வருதலும்**

***நெறிபட வழங்கிய வழிமயங்கு என்ப.***

## தொடர்மொழி இறுதியில் தொகும் தொகா உருபுகள்

ஐ, கண் எனும் இரண்டு உருபுகளும் தொடர் மொழிகளின் இறுதியில் மறைந்து வரும் (தொகும்). ஏனைய உருபுகள் ( ஆல், கு, இன், அது) மறைந்து வருவதில்லை (தொகா).

**(எ.கா)** கடந்தான் நிலம் → கடந்தான் நிலத்தை - ஐ

இருந்தான் குன்றத்து →இருந்தான் குன்றத்தின்கண் - கண்

## 2. உருபு மயக்கம்

தொடர் மொழிகளில் ஒரு வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமை உருபு வரும். ஆனாலும் வந்த உருபின் பொருள் கூறப்படாமல் வரவேண்டிய வேற்றுமை உருபைக் கொண்டே பொருள் விளக்கப்படும்.

(எ.கா) கிளையரி நாணற்கிழங்கு மணற்கு ஈன்ற

இத்தொடரில் மணற்கு என்பதில் நான்காம் வேற்றுமை உருபு இடம் பெற்றுள்ளது. ஆனால் அவ் உருபு நான்காம் வேற்றுமைக்குரிய கொடைப்பொருளைத் தராமல் கண் (மணலின்கண்) எனும் ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளைத் தந்தது. எனவே இது உருபு மயக்கம் ஆகும்.

***நூற்பா 106***

***யாதன் உருபின் கூறிற் றாயினும்***
***பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்***

## எதிர்மறையில் வேற்றுமை வரும் நிலை

வேற்றுமைத் தொடர்கள் உடன்பாட்டில் மட்டுமல்லாமல் எதிர்மறையாலும் கூறப்படும். அப்போதும் அவ்வேற்றுமை உருபுகள் தமக்குக் கூறப்பட்ட பொருள்களிலிருந்து மாறுபடாமல் நிற்கும்.

**(எ.கா)** மரத்தைக் குறையான் (எதிர்மறை)

மரத்தைக் குறைத்தான் (உடன்பாடு)

***நூற்பா 107***

***எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்***
***பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.***

## செய்யுளில் உருபுகள் திரிதல்

கு, ஐ, ஆன் எனும் உருபுகள் செய்யுளில் தொடர்மொழிகளின் இறுதியில் வரும் போது 'அ' கரத்தோடு பொருந்தி நிற்கும்.

(எ.கா) கடிநிலை இன்றே ஆசிரியற்க - (ஆசிரியற்கு)

காவலோனக் களிறு அஞ்சும்மே - (காவலோனை)

புரைதீர் கேள்விப் புலவரான - (புலவரான்)

***நூற்பா 108***

***கு ஐ ஆன் என வரூஉம் இறுதி***
***அவ்வொடு சிவணும் செய்யுள் உள்ளே.***

மேற்கூறிய கு, ஐ, ஆன் உருபுகளுள், கு, ஐ என்பன அ∴றிணைப் பெயர்களில் நின்று அகரத்தைப் பெறுவதில்லை. ஆன் உருபு மட்டும் அகரம் பெறும்.

(எ.கா) புள்ளியற் கலிமா உடைமையான (உடைமையான்)

***நூற்பா 109***

***அ எனப் பிறத்தல் அ∴றிணை மருங்கின்***
***குவ்வும் ஐயும் இல்லென மொழிப.***

## நான்காம் வேற்றுமை உருபு ஏற்கும் பல பொருள்கள்

1. ஒன்றற்குரிய பொருள் இத்தன்மை உடையது எனக் கூறும் ஆறாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** யானைக்குக் கோடு கூரிது - (யானையது கோடு கூரிது - அது)

2. ஒன்றை ஒன்று ஏற்றுக்கொள்ளும் இரண்டாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** இவளுக்குக் கொள்ளும் இவ்வணி - (இவளைக் கொள்ளும் இவ்வணி - ஐ)

3. ஒன்றனால் ஒன்று தொழில் நிகழ்வதற்கு ஒத்ததாய் வரும் மூன்றாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** அவனுக்குச் செய்யத்தகும் அக்காரியம் - (அவனால் செய்யத்தகும் அக்காரியம் - ஆல்)

4. உறவு முறைப் பெயரின் ஆறாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** ஆவிற்குக் கன்று - (ஆவினது கன்று - அது)

5. நிலத்தை வரையறுத்துக் கூறும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** கருவூர்க்குக் கிழக்கு - (கருவூரின் கிழக்கு - இன்)

6. பண்பை அடிப்படையாகக் கொண்டு ஒப்புமை கூறப்படும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** சாத்தற்கு நெடியன் - (சாத்தனின் நெடியன் - இன்)

7. காலத்தை உணர்த்தும் ஏழாம் வேற்றுமைப் பொருள்

**(எ.கா)** வேனிற்கு வந்தான் - (வேனிற்கண் வந்தான் - கண்)

8. பற்றுவிடுதல் 9. தீர்தல் எனும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள்.

**(எ.கா)** மனை வாழ்க்கைக்குப் பற்று விட்டான் - (மனை வாழ்க்கையின் பற்றுவிட்டான் - இன்)

ஊர்க்குத் தீர்ந்தான் - (ஊரின் தீர்ந்தான் - இன்)

ஆகியவையும் அவை போன்ற பிறவும் நான்காம் வேற்றுமை உருபினை ஏற்று வருவது தொன்று தொட்டே பின்பற்றப்படும் மரபாகும்.

***நூற்பா 110***

***இதனது இதுஇற்று என்னும் கிளவியும்***
***அதனைக் கொள்ளும் பொருள்வயி னாலும்***
***அதனான் செயல்படற்கு ஒத்த கிளவியும்***
***முறைகொண்டு எழுந்த பெயர்ச்சொல் கிளவியும்***
***பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்***
***காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்***
***பற்றுவீடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்***
***அன்ன பிறவும் நான்கன் உருபின்***
***தொல்நெறி மரபின தோன்றல் ஆறே.***

## பிற உருபுகள் மயங்குதல்

மேற்கூறப்பட்ட நான்காம் வேற்றுமை உருபைப் போல பிற உருபுகளும் பொருள் சிதையாமல் மயங்கிவரும். அவ்வாறு வருவது குற்றமற்றதாகும்.

**(எ.கா)** நூலது குற்றம் கூறினான் -(நூலைக் குற்றம் கூறினான் - அது - ஐ)

***நூற்பா 111***

***ஏனை யுருபும் அன்ன மரபின***
***மான மிலவே சொன்முறை யான.***

## தொழில் முதல் நிலைகள்

ஒரு செயல் நிகழ்வதற்கு அடிப்படையான காரணம் தொழில் முதல்நிலை எனப்படும்.

ஒரு தொழில் நிகழ்வதற்கு,

1. வினை (செயல்)
2. வினைமுதல் (கருத்தா அல்லது செய்பவர்),
3. செயப்படு பொருள்,
4. நிலம் (இடம்),
5. காலம்,
6. கருவி (செய்வதற்கான கருவி),

என்பவற்றோடு,

7. இன்னதற்கு (இதற்காக),
8. இதுபயன்

எனும் இரண்டையும் சேர்த்துத் தொழில் முதல் நிலைகள் எட்டாகும் என்பர்.

**(எ.கா)** வனைந்தான் - இதில்

1. வினை – வனைதல்
2. செய்பவன் - குயவன்
3. செயப்படுபொருள் - பானை
4. இடம் - வீட்டுமுற்றம்
5. காலம் - பகல்
6. கருவி – சக்கரம் முதலாயின
7. இன்னதற்கு – விற்பதற்கு
8. பயன் - பொருள் பெறுதல்

எனும் எட்டும் வெளிப்படுகின்றன. இன்னதற்கு, இது பயன் என்பவை மிகச் சில இடங்களில் மட்டுமே வரும்.

**நூற்பா 112**

**வினையே செய்வது செயப்படு பொருளே**
**நிலனே காலம் கருவி என்றா**
**இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்**
**அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ**
**ஆய்எட்டு என்ப தொழில்முதல் நிலையே.**

### புறனடை

கூறப்பட்ட தொழில் முதல் நிலைகள் எட்டும் எல்லா வினையிலும் பொருந்தி வருவதில்லை. உலக வழக்கில் சில குறைந்தும் வரும்.

(எ.கா) காற்று வீசிற்று.

இதில் செயப்படுபொருள், ஏற்பது, பயன் ஆகியவை இல்லை.

***நூற்பா 113***

***அவைதாம்,***

***வழக்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்.***

## ஆகுபெயர்

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஒன்று மற்றொன்றிற்கு ஆகி வருவதால் ஆகுபெயர்.

## ஆகுபெயரின் வகைகள்

*1.* **முதலாகுபெயர்** : முதற்பொருளின் பெயர் சினைப் பொருளுக்கு ஆகிவருவது.

**(எ.கா)** கடுத்தின்றான், தெங்கு தின்றான்.

(கடுகு, தேங்காய் எனும் சினைகளுக்கு ஆகிவந்தது)

***2. சினையாகுபெயர்*** : சினைப்பொருளின் பெயர் முதற்பொருளுக்கு ஆகி வருவது.

**(எ.கா)** வெற்றிலை நட்டான்

(வெற்றிலைச் செடியாகிய முதலுக்கு ஆகிவந்தது)

*3.* **இடவாகுபெயர் :** ஓர் இடத்தின் பெயர் அங்குள்ள பொருளுக்கு ஆகிவருவது.

**(எ.கா)** காஞ்சிபுரம் உடுத்தினாள்

(காஞ்சிபுரத்தில் உள்ள புடவைக்கு ஆகிவந்தது

***4. பண்பாகுபெயர் :*** ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது.

**(எ.கா)** நீலம் சூடினாள்

(நீல நிறமுடைய மலருக்கு ஆகி வந்தது.)

*5.* **காரண ஆகுபெயர் :** ஒன்றற்குக் காரணமாய் அமைந்த பெயர் அதனால் ஆகிய காரியத்திற்கு ஆகி வருவது.

**(எ.கா)** இக்குடம் பொன்

(பொன் எனும் காரணம் குடத்திற்கு (காரியத்திற்கு) ஆகி வந்தது.)

*6.* **இருபெயரொட்டு ஆகுபெயர்:** அன்மொழிப் பொருள் மேல் இருபெயரொட்டாய் வருவது.

**(எ.கா)** பொற்றொடி வந்தாள்

பொன்னால் ஆகிய தொடியினை உடையாள் என அன்மொழிப் பொருள் மேல் ஆகி வந்தது.

**7. கருத்தாவாகுபெயர் :** செய்தவனின்(கருத்தா) பெயர் அவனால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது.

**(எ.கா)** வள்ளுவரைக் கற்றேன்.

கருத்தாவின் பெயர் அவரால் இயற்றப்பட்ட நூலுக்கு ஆகிவந்தது.

***நூற்பா 114***

***முதலின் கூறும் சினையறி கிளவியும்***
***சினையின் கூறும் முதல்அறி கிளவியும்***
***பிறந்த வழிக் கூறலும் பண்புகொள் பெயரும்***
***இயன்றது மொழிதலும் இருபெயர் ஒட்டும்***
***வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ***
***அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி.***

மேற்கூறப்பட்ட ஆகுபெயர்கள், தம்மோடு உறவுடைய பொருளோடு சேர்ந்து வருதல் (விடாத ஆகுபெயர்), தம்மோடு இயைபில்லாத வேறு பொருள்களுடன் சேர்ந்து வருதல் (விட்ட ஆகுபெயர்) எனும் இரு பண்புகளை உடையனவாகும்.

**(எ.கா)** புளி தின்றான் - விடாத ஆகுபெயர்
(சுவை புளியோடு உறவுடையது)
காஞ்சிபுரம் சிறந்தது – விட்ட ஆகுபெயர்
(காஞ்சிபுரம் புடவைக்குத் தொடர்பில்லாதது)

***நூற்பா 115***

***அவைதாம்***
***தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்***
***ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்***
***அப்பண் பினவே நுவலும் காலை***
***வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்.***

அளவுப் பெயரும், நிறைப்பெயரும். ஆகுபெயராய்க் கொள்வதற்கு உரியன என்று உயர்ந்தோர் கூறுவர்.

**(எ.கா)** இந்நெல் பதக்கு - (முகத்தல்) அளவை ஆகுபெயர்

இப்பொன் தொடி - நிறுத்தல் அளவை ஆகுபெயர்

***நூற்பா 116***

**அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி**
**உளவென மொழிப உணர்ந்திசி னோரே.**

முற்கூறப்பட்டவை தவிர, இயைபு பற்றி வேறு பெயர்களும் ஆகுபெயர்களாக வரும். அவற்றை மேற்கூறிய இலக்கணத்தைக் கொண்டு ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**(எ.கா)** யாழ்கேட்டான் - கருவி ஆகுபெயர்

பாவை வந்தாள் - உவமை ஆகுபெயர்.

# இயல் - 4

# விளி மரபு

## பெயர்க்காரணம்

விளித்தல் என்றால் அழைத்தல் என்று பொருள். படர்க்கை இடப் பொருளைத் தனக்கு முன்னிலையாக அழைப்பதால் விளிக்கப்படும் பொருள் எட்டாம் வேற்றுமை ஆயிற்று. இவ்விளி,

1. அண்மை விளி (அருகில் உள்ளவரை அழைப்பது),
2. சேய்மை விளி (தொலைவில் உள்ளவரை அழைப்பது)

என இருவகைப்படும். சேய்மை விளியின் போது பெயர்கள் ஈறுதிரிதல், ஈற்றயல் நீளுதல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் எனப் பல மாற்றங்களை அடையும். இவ் விளியின் இயல்பினை எடுத்துரைப்பது விளிமரபு எனும் இயலாகும்.

## விளி வேற்றுமையின் இயல்பு

விளி என்று சொல்லப்படும் எட்டாம் வேற்றுமை, தம்மை ஏற்றுக் கொள்ளும் பெயரோடு வெளிப்பட்டுத் தோன்றும் இயல்பினை உடையது என்று சொல்லுவர்.

***நூற்பா 118***

**விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு**
**தெளியத் தோன்றும் இயற்கைய என்ப.**

விளி ஏற்கும் பெயர்களும், விளி ஏற்காத பெயர்களும் இவை என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டுத் தெளிவாக இவ்வியலில் கூறப்படுகின்றன.

***நூற்பா 119***

**அவ்வே**
**இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப.**

# விளி ஏற்கும் உயர்திணைப் பெயர்கள்

## உயிரீறுகள்

இ, உ, ஐ, ஓ எனும் எழுத்துக்களை இறுதியில் உடைய உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும்.

**(எ.கா)** சுடர்த்தொடி - சுடர்த்தொடீ
வேந்து - வேந்தே
நங்கை - நங்காய்
கோ - கோவே

***நூற்பா 120***

**அவைதாம்,**
**இ உ ஐ ஓ என்னும் இறுதி**
**அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்**
**மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.**

## இகர ஐகார ஈறுகள்

விளி ஏற்கும் போது இகரம் ஈகாரமாகும், ஐகாரம் ஆய் ஆகும்.

(எ.கா) நம்பி - நம்பீ
நங்கை - நங்காய்

***நூற்பா 121***

**அவற்றுள்**
**இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும்.**

## ஓ, உ ஈற்றுப் பெயர்கள்

ஓகார ஈறும், உகர ஈறும் ஏகாரத்தைப் பெறும்.

**(எ.கா)** கோ - கோவே
வேந்து - வேந்தே

விளியேற்கும் எனக் கூறப்பட்ட உகரம் குற்றியலுகரம் ஆகும்.
(முற்றியலுகரம் சிறுபான்மையே விளியேற்கும்)

***நூற்பா 122.***

**ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்.**

***நூற்பா 123.***

**உகரம் தானே குற்றிய லுகரம்.**

# விளியேற்காத உயர்திணைப் பெயர்கள்

## *1. உயிரீறுகள்*

இ, உ, ஐ, ஓ தவிர்த்த ஏனைய எட்டு உயிர் ஈறுகளும் (அ, ஆ, ஈ, ஊ, எ, ஏ, ஒ, ஔ) உயர்திணையில் விளிகொள்வதில்லை.

***நூற்பா 124***

**ஏனை உயிரே உயர்திணை மருங்கின்**
**தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.**

மேற்கூறிய எழுத்துக்கள் விளிஏற்காது என்றாலும், சொல்பவனின் குறிப்பினால் விளியேற்பவையும் உண்டு.

(எ.கா) மக - மகவே

## அளபெடையில் இகரம்

இகர ஈற்றுப் பெயர்கள் அளபெடையில் மூன்று மாத்திரையிலிருந்து மிகுந்து நான்கு ஐந்து மாத்திரையாய் வருவதுண்டு. அப்போது ஈகாரமாகத் திரியாமல் இயல்பாய் நின்று விளி ஏற்கும்.

(எ.கா) தொழீஇஇ - தொழீஇஇஇ (தொழில் செய்பவனே)

***நூற்பா 125***

***அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்***
***இயற்கைய ஆகும் செயற்கைய என்ப.***

## ஐகார ஈற்று முறைப்பெயர்

ஐகாரத்தை இறுதியாக உடைய முறைப்பெயர்கள் விளியேற்கும் போது ஆய் எனத் திரியாமல் ஆ - எனத் திரிந்து வரும்.

(எ.கா) அன்னை - அன்னா
அத்தை - அத்தா

***நூற்பா 126***

***முறைப்பெயர் மருங்கின் ஐ என் இறுதி***
***ஆவொடு வருதற்கு உரியவும் உளவே.***

## உயிரீறுகள் அண்மை விளி பெறுதல்

இ, உ, ஐ, ஓ எனும் நான்கு உயிரீற்றுச் சொற்களும் அருகில் உள்ளவரை அழைக்க (அண்மை விளி) விளி ஏற்கும் போது இயல்பாக நிற்கும்.

(எ.கா) நம்பி வாழி

வேந்து வாழி

கங்கை வாழி

கோ வாழி

***நூற்பா 127***

**அண்மைச் சொல்லே இயற்கை யாகும்.**

## 2. மெய்யீறுகள்

ன், ர், ல், ள் எனும் இறுதியை உடைய உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும்.

***நூற்பா 128***

**னரலள என்னும் அந்நான்கு என்ப**
**புள்ளி இறுதி விளிகொள் பெயரே.**

மேற்கூறியவை தவிர ஏனைய மெய்யீற்றுப் பெயர்கள் (ஞ், ண், ந், ம், ய், வ், ழ்) விளி ஏற்பதில்லை. சிறுபான்மை விளி ஏற்கும் என்பார் சேனாவரையார்.

**(எ.கா)** கொடும் பூண்ஆஅய்

(ஆஅய் எனும் யகர ஈற்றுப்பெயர் விளி பெற்றது)

***நூற்.129***

**ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா.**

## னகர ஈற்றுப் பெயர்கள்

1. னகர ஈறு அன் என நிற்கும். அதில் உள்ள னகரம் கெட்டு அகரம் 'ஆ' எனத் திரியும்.

**(எ.கா)** சோழன் - சோழா
கண்ணன் - கண்ணா } - அன் 'ஆ' ஆதல்

2. னகர ஈறு அண்மை விளியில் னகரம் கெட்டு அகரமாகத் திரியும்

**(எ.கா)** முருகன் - முருக

துறைவன் - துறைவ

***நூற்பா 131***

**அண்மைச் சொல்லிற்கு அகரமும் ஆகும்.**

3. ஆன் எனும் னகர ஈறு விளியேற்கும் போது இயல்பாய் நிற்கும்.

**(எ.கா)** மலையமான், சேரமான்

***நூற்பா 132***

**ஆன் என் இறுதி இயற்கை யாகும்.**

*4.* ஆன் ஈற்று வினையாலணையும் பெயர் விளி ஏற்கும் போது ஆன் என்பது ஆய் ஆகத் திரியும்.

**(எ.கா)** வந்தான் - வந்தாய்

சென்றான் - சென்றாய்

***நூற்பா 133***

**தொழிலின் கூறும் ஆன்என் இறுதி**
**ஆயா கும்மே விளிவயி னான.**

*5.* ஆன் ஈற்றுப் பண்புப் பெயரும் விளியேற்கும் போது, வினையாலணையும் பெயரைப் போலவே ஆய் எனத் திரியும்,

**(எ.கா)** கரியான் - கரியாய்

***நூற்பா 134***

**பண்புகொள் பெயரும் அதனோர் அற்றே.**

6. ஆன் ஈற்று அளபெடைப் பெயர்கள் இகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல (நூ.125) மூன்று மாத்திரையில் நீண்டு இயல்பாய் நின்று விளியேற்கும்.

**(எ.கா)** உழாஅஅன், கிழாஅஅன்

***நூற்பா 135***

**அளபெடைப் பெயரே அளபெடை இயல.**

7. னகர ஈற்று உறவுப் பெயர்கள் ஏகாரம் பெற்று விளி ஏற்கும்.

(எ.கா) மகன் - மகனே

மாமன் - மாமனே

***நூற்பா 136***

**முறைபெயர்க் கிளவி ஏயொடு வருமே.**

## விளியேற்காத னகர ஈற்றுப் பெயர்கள்

தான் எனும் பெயர், சுட்டெழுத்தை முதலாக உடைய (அவன், இவன், உவன்) பெயர்கள், யான் என்னும் பெயர், யாவன் எனும் வினாப் பெயர் ஆகியவை விளி ஏற்பதில்லை.

(தான், அவன், இவன், உவன், யான், யாவன் என்பன)

***நூற்பா 137***

**தான்என் பெயரும் சுட்டுமுதல் பெயரும்**
**யான்என் பெயரும் வினாவின் பெயரும்**
**அன்றி அனைத்தும் விளிகோள் இலவே.**

## ரகர ஈற்றுப் பெயர்கள்

1. ஆர், அர் எனும் விகுதிகளை உடைய பெயர்கள் ஈர் எனத் திரிந்து விளி ஏற்கும்

**(எ.கா)** பார்ப்பார் - பார்ப்பீர்
கூத்தர் - கூத்தீர்

***நூற்பா 138***

**ஆரும் அருவும் ஈரொடு சிவணும்**

2. ஆர், அர் எனும் ஈற்று வினையாலணையும் பெயர்கள் (தொழிற்பெயர்) விளியேற்கும் போது ஈர் எனும் ஈற்றுடன் 'ஏ' காரத்தையும் பெறும்.

**(எ.கா)** வந்தார் - வந்தீரே
சென்றார் - சென்றீரே

***நூற்பா 139***

**தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்**
**வழுக்கின்று என்மனார் வயங்கி யோரே.**

3. ஆர், அர் ஈற்றுப் பண்புப்பெயரும் ரகார ஈற்றுத் தொழிற்பெயரைப் போல ஈர் எனும் ஈற்றுடன் ஏகாரம் பெற்று விளி ஏற்கும்.

(எ.கா) கரியார் - கரியீரே
இளையர் - இளையீரே

***நூற்பா 140***

**பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.**

*4. ரகார ஈற்று அளபெடைப் பெயர்கள் னகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல மூன்று மாத்திரையில் மிகுந்து இயல்பாய் விளியேற்கும்.*

***(எ.கா)*** *சிறாஅர் - சிறாஅஅர்*

*மகாஅர் - மகாஅஅர்*

***நூற்பா 141***

***அளபெடைப் பெயரே அளபெடை இயல.***

## விளியேற்காத ரகர ஈற்றுப் பெயர்கள்

*1. ரகார ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் (அவர், இவர், உவர்) னகார ஈற்றுச் சுட்டுப் பெயரைப் போல விளியேற்பதில்லை.*

***நூற்பா 142***

***சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.***

*2. நும் என்பதன் திரிபாகிய நீயிர், வினாவின் திரிபாகிய யாவர் எனும் இரு ரகர ஈற்றுப் பெயர்களும் விளி ஏற்பதில்லை.*

***நூற்பா 143***

***நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்று***
***அம்முறை இரண்டும் அவற்றியல்பு இயலும்.***

## லகர, ளகர ஈற்றுப் பெயர்கள்

*1. லகர, ளகர மெய்யீற்றுப் பெயர்கள் விளி ஏற்கும் போது ஈற்றயல் (இறுதி எழுத்துக்கு முன்னால் நின்ற) எழுத்து நீண்டொலிக்கும்.*

*(எ.கா) குரிசில் - குரிசீல்*

*மக்கள் - மக்காள்*

***நூற்பா 144***

***எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே***
***நின்ற ஈற்றயல் நீட்டல் வேண்டும்.***

*2. ஈற்றயல் எழுத்து நெடிலாக அமைந்த லகர, ளகர ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும் போது இயல்பாகும்.*

*(எ.கா) திருமால், பெருமாள்*

**நூற்பா 145**

**அயல்நெடி தாயின் இயற்கை ஆகும்.**

3. ஆள் என்பதை ஈற்றில் உடைய வினையாலணையும் பெயரும், பண்புப்பெயரும் ஆய் எனத் திரிந்து விளி ஏற்கும்.

**(எ.கா)** நின்றான் - நின்றாய்

கரியான் - கரியாய்

**நூற்பா 146**

**வினையினும் பண்பினும்**
**நினையத் தோன்றும் ஆள்என் இறுதி**
**ஆய்ஆ கும்மே விளிவயி னான.**

4. ளகர ஈற்று முறைப்பெயர்கள் விளி ஏற்கும் போது, னகர ஈற்று முறைப் பெயரைப் போல ஏகாரம் பெறும்.

**(எ.கா)** மகள் - மகளே

**நூற்பா 147**

**முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல.**

## விளி ஏற்காத ளகர ஈற்றுப்பெயர்கள்

சுட்டெழுத்தை முதலாக உடைய ளகர ஈற்றுப் பெயர்கள் (அவள்,இவள், உவள்), ளகர ஈற்று வினாப்பெயர் (யாவள்), இவை முற்கூறியது போல (நூற் 137) விளி ஏற்பதில்லை.

**நூற்பா 148**

**சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்**
**முற்கிளந் தன்ன என்மனார் புலவர்**

## லகர, ளகர ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்றல்

லகர, ளகர ஈற்று அளபெடைப் பெயர்கள் ஏற்கனவே கூறிய அளபெடைப் பெயர்களைப் போல மூன்று மாத்திரை நீண்டு இயல்பாய் விளியேற்கும்.

**(எ.கா)** மாஅல் - மாஅஅல்

வேண்மாஅள் - வேண்மா அஅள்

***நூற்பா 149***

***அளபெடைப் பெயரே அளபெடை இயல.***

## திணை விரவுப் பெயர்கள் விளியேற்கும் முறை

*இ, உ, ஐ, ஒ எனும் உயிரீறுகளும், ன், ர், ல், ள் எனும் மெய்யீறுகளும் உயர்திணைக்கு உரியன. இவ் ஈற்றுப் பெயர்கள் அஃறிணையிலும் விரவி வரும். அப்போது உயர்திணைக்குக் கூறப்பட்ட விதிகளின்படியே விளியேற்கும்.*

**(எ.கா)** *சாத்தி - சாத்தீ*

*பூண்டு - பூண்டே* } *- உயிரீறு*

*தந்தை - தந்தாய்*

*சாத்தன் - சாத்தா*

*கூந்தல் - கூந்தால்* } *- மெய்யீறு*

*மக்கள் - மக்காள்*

***நூற்பா 150***

***கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்***
***விளம்பிய நெறிய விளிக்கும் காலை.***

## அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்றல்

*மெய்யீற்று, உயிரீற்று அஃறிணைப் பெயர்கள் அனைத்தும் விளியேற்கும் சூழலில் இறுதியில் ஏகாரம் பெறும்.*

**(எ.கா)** *மரம் - மரமே*

*நரி - நரியே*

***நூற்பா 151***

***புள்ளியும் உயிரும் இறுதி ஆகிய***
***அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்***
***விளிநிலை பெறூஉம் காலம் தோன்றின்***
***தெளிநிலை உடைய ஏகாரம் வரலே.***

## சேய்மை விளியின் இயல்பு

உயர்திணையிலும் அ∴றிணையிலும் விளி ஏற்பனவாகச் சொல்லப்பட்ட பெயர்கள் எல்லாம், சேய்மையில் (தொலைவில்) உள்ளவற்றை விளிக்கும் போது தமக்குரிய மாத்திரை அளவில் மிகுந்து ஒலிக்கும் இயல்பினை உடையன ஆகும்.

**(எ.கா)** நம்பீஇ, சாத்தா அ

***நூற்பா 152***

***உளஎனப் பட்ட எல்லாப் பெயரும்***
***அளபிறந் தனவே விளிக்கும் காலைச்***
***சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான.***

## அம்ம எனும் அசைச்சொல்

அம்ம எனும் அசைச்சொல்லின் நீட்டமாகிய அம்மா என்பது விளி ஏற்கும் பெயராய் வராது. எனினும் அச்சொல் இடைச்சொல்லுடன் வரும் போது விளியாக ஏற்றுக் கொள்வர்.

**(எ.கா)** அம்ம சாத்தா - அம்மா சாத்தா.

***நூற்பா 153***

***அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்***
***அம்முறைப் பெயரோடு சிவணா தாயினும்***
***விளியொடு கொள்ப தெளியு மோரே.***

## விளியேற்காத உயர்திணைப் பெயர்கள்

த, ந, நு (மெய்), எ (உயிர்) எனும் எழுத்துக்களை முதலிலும் ன், ர், ள் எனும் மெய்களை இறுதியிலும் கொண்ட முறைப் பெயர்களும், இவை போன்ற பிறபெயர்களும் விளியேற்பதில்லை.

**(எ.கா)** த - தமன், தமர், தமன்

ந - நமன், நமர், நமன்

நு - நுமன், நுமர், நுமன்

எ - எமன், எமர், எமன்

பிற - மற்றையான், மற்றையார், மற்றையாள், பிறன், பிறர், பிறள்

*நூற்பா 154*

**த ந நு எ என அவைமுதல் ஆகித்**
**தன்மை குறித்த ன ர ள என் இறுதியும்**
**அன்ன பிறவும் பெயர்நிலை வரினே**
**இன்மை வேண்டும் விளியோடு கொளலே.**

# இயல் - 5

# பெயரியல்

## பெயர்க்காரணம்

தொடர்மொழிக்கு உறுப்பாகும் சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர், வினை, இடை, உரி என்பன. அவற்றுள் பெயர்ச்சொல்லின் இலக்கணம் உணர்த்துவதால் இவ் இயல் பெயரியல் எனப்பட்டது.

## சொற்களின் இயல்பு

பெயர், வினை, இடை, உரி எனும் நால்வகைப்பட்ட சொற்கள் அனைத்தும் ஒரு பொருளைக் குறிப்பனவாகும். (பொருளற்ற எழுத்துக்களின் கூட்டம் சொல் ஆகாது)

***நூற்பா 155***

**எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே.**

தனது பொருளை உணர்த்துவதும், தன்னையே உணர்த்துவதும் ஆகிய இரண்டும் சொல்லினால் ஆகும்.

***(எ.கா)*** அவன், இவன், வந்தான் - பொருளுணர்த்தின.

நீயென் கிளவி, கடியென் கிளவி - நீ எனும் சொல், கடி எனும் சொல் எனச் சொற்களை உணர்த்தியது.

***நூற்பா 156***

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனார் புலவர்.**

சொற்கள் பொருள் உணர்த்தும் போது, வெளிப்படையாகவும் உணர்த்தும். குறிப்பாகவும் உணர்த்தும்.

***(எ.கா)*** அவன், வந்தான் - உயர்திணை ஆண்பால் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

தெங்கு தின்றான் (ஆகுபெயர்) - தேங்காய் தின்றான் என்பதைக் குறிப்பாக உணர்த்தியது.

***நூற்பா 157***

**தெரிபுவேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்**
**இருபாற்று என்ப பொருண்மை நிலையே.**

## சொற்களின் பாகுபாடு

சொல் 1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் என்று இருவகைப்படும் என்பர். பெயர்ச் சொல்லையும், வினைச் சொல்லையும் (இடமாகக் கொண்டு) சார்ந்து 3. இடைச்சொல் 4. உரிச்சொல் எனும் இரண்டும் தோன்றும் என்று புலவர் கூறுவர்.

**நூற்பா** ***158.***

**சொல்எனப் படுப பெயரே வினை என்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே.**

***159.***

**இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப.**

## பெயர்ச்சொல்

ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல். பெயர்ச்சொல் 1. உயர்திணைக்கு உரியது, 2. அஃறிணைக்கு உரியது, 3. இரண்டு திணைக்கும் (விரவுத் திணை) உரியது என மூன்று வகைப்படும்.

**(எ.கா)** சாத்தன் - உயர்திணைப்பெயர்
யானை - அஃறிணைப்பெயர்
தாய் (தாய் வந்தாள், தாய் வந்தது.) - விரவுப்பெயர்

**நூற்பா** ***160***

**அவற்றுள்**
**பெயரெனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ வுருபின தோன்ற லாறே.**

இருதிணைகளாகப் பிரிந்த ஐம்பால்களையும் பெயர்ச்சொற்கள் உணர்த்தும். அவை வழக்கில் வரும் நிலையை நோக்கி உணரப்படும்.

- உயர்திணை
  - ஆண் (அவன்)
  - பெண் (அவள்)
  - பலர் (அவர்)
- அஃறிணை
  - ஒன்று (அது)
  - பல (அவை)

***நூற்பா 161***

> ***இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்***
> ***உரியவை உரிய பெயர்வயி னான.***

## உயர்திணைப் பெயர்கள்

***1***. அவன், இவன், உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர், யான், யாம், நாம், யாவன், யாவள், யாவர் எனும் பதினைந்தும் பாலுணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும்.

| | | |
|---|---|---|
| அவன், இவன், உவன் | - ஆண்பால் | சுட்டு |
| அவள், இவள், உவள் | - பெண்பால் | |
| அவர், இவர், உவர் | - பலர்பால் | |
| யான், யாம், நாம் | - தன்மை இடப்பெயர். | |
| யாவன், யாவள், யாவர் | - வினாப்பெயர் | |

***நூற்பா 162***

> ***அவ்வழி***
> ***அவன் இவன் உவன்என வரூஉம் பெயரும்***
> ***அவள் இவள் உவள்என வரூஉம் பெயரும்***
> ***அவர் இவர் உவர்என வரூஉம் பெயரும்***
> ***யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்***
> ***யாவன் யாவள் யாவர் என்னும்***
> ***ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்***
> ***பாலறி வந்த உயர்திணைப் பெயரே.***

***2*** : 1. ஆண் எனும் சொல்லை அடுத்து வரும் மகன் எனும் சொல் - ஆண்மகன்

2. பெண் எனும் சொல்லை அடுத்து வரும் மகள் எனும் சொல் - பெண்மகள்

3. பெண் எனும் சொல்லை முதலாக உடைய இகர ஈற்றுச் சொல் - பெண்டாட்டி

4. நம் எனும் சொல்லைச் சார்ந்து வரும் இகர ஈற்றுச் சொல் - நம்பி

5. நம் எனும் சொல்லைச் சார்ந்து வரும் ஐகார ஈற்றுச் சொல் - நங்கை

*6.* மகன் *7.* மகள் *8.* மாந்தர் *9.* மக்கள் *10.* ஆடூஉ *11.* மகடூஉ எனும் பெயர்சொற்கள்.

*12.* சுட்டெழுத்தை முதலாக உடைய அன் ஈற்றுப்பெயர்கள் - அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்.

*13.* சுட்டெழுத்தை முதலாக உடைய ஆன் ஈற்றுப் பெயர்கள் - அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான்.

*14.* சுட்டெழுத்தை முதலாக உடைய பெண்டு எனும் சொல் - அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு.

*15.* பிற ஒன்றோடு ஒப்புமைப்படுத்திக் கூறப்படும் பெயர் - புலியன்னான், மயிலன்னாள்.

ஆகிய பதினைந்தும் மேற்கூறியதைப் போல் பால் உணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும்.

**நூற்பா *163***

**ஆண்மை அடுத்த மகன்என் கிளவியும்**
**பெண்மை அடுத்த மகள்என் கிளவியும்**
**பெண்மை அடுத்த இகர இறுதியும்**
**நம்ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்**
**முறைமை சுட்டா மகனும் மகளும்**
**மாந்தர் மக்கள் என்னும் பெயரும்**
**ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்**
**சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்**
**அவை முதலாகிய பெண்டுஎன் கிளவியும்**
**ஒப்பொடு வரூஉம் கிளவியோடு தொகைஇ**
**அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன.**

***3.*** எல்லாரும், எல்லீரும், பெண்மகன் (பெண்மை அடுத்த மகன்) எனும் சொற்களும் பால் உணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும்.

***(எ.கா)*** எல்லாரும் - படர்க்கைப் பெயர்ச்சொல்
எல்லீரும் - முன்னிலைப் பெயர்ச்சொல்

பெண்மகன் - புறத்துப் போய் விளையாடும் பேதைப் (பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்று வழங்குவர்.)

***நூற்பா 164***

> ***எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்***
> ***எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்***
> ***பெண்மை அடுத்த மகனென் கிளவியும்***
> ***அன்ன இயல என்மனார் புலவர்.***

***4.*** நிலம், குடி, குழு, வினை, உடைமை, பண்பு, முறை, சினை, திணை, விளையாட்டு (ஆடியல் பெயர்), எண் இவை காரணமாக அமையும் உயர்திணைப் பெயர்கள் அனைத்தும் பால் உணர்த்துபவை யாகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா) | நிலப்பெயர் | - சோழியன் | |
| | குடிப்பெயர் | - சேரமான் | |
| | குழுப்பெயர் | - அவையத்தார் | |
| | வினைப்பெயர் | - தச்சன், கொல்லன் | |
| | உடைமைப்பெயர் | - பேரூர்கிழான் | |
| | பண்புகொள் பெயர் | - வெள்ளையம்மாள் | |
| | முறைப்பெயர் | - தாயர், தந்தையர் | } - பன்மை |
| | சினைப்பெயர் | - பெருங்கையர் | } - பன்மை |
| | திணைப்பெயர் | - ஆயர், வேட்டுவர் | } - பன்மை |
| | ஆடியல் பெயர் | - சங்கிராமத்தார், பட்டிபுத்திரர் | |
| | எண்ணியற்பெயர் | - ஒருவர், இருவர், மூவர்... | |

இவையனைத்தும் மேற்கூறியவற்றைப் போன்று பால் உணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும். (பாலறியும் உயர்திணைப் பெயர்கள் - 44 = 15+15+3+11)

***நூற்பா 165***

> ***நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே***
> ***வினைப்பெயர் உடைபெயர் பண்புகொள் பெயரே***
> ***பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே***
> ***பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே***
> ***பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே***
> ***கூடிவரும் வழக்கின் ஆடியற் பெயரே***
> ***இன்றி இவரென்னும் எண்ணியற் பெயரொடு***
> ***அன்றி யனைத்தும் அவற்றியல் பினவே.***

**புறனடை**

மேற்கூறப்பட்டவை போன்ற பிற பெயர்களும், உயர்திணையில் பன்மை (பலர்பால்), ஒருமை (ஆண்பால், பெண்பால்) எனப் பால் விளங்க வரும் எல்லாப் பெயர்களும் உயர்திணைப் பெயர்கள் ஆகும்.

பிறபெயர்கள் - ஆசிரியன், புலவன், அமைச்சன்

***நூற்பா 166***

***அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்***
***பன்மையும் ஒருமையும் பாலறி வந்த***
***என்ன பெயரும் அத்திணை யவ்வே.***

## *அஃறிணைப்பெயர்கள்*

***1.*** அது, இது, உது, அஃது, இஃது, உஃது, அவை, இவை, உவை, அவ், இவ், உவ் எனும் சுட்டுப்பெயர்கள், யாது, யா, யாவை எனும் வினாப்பெயர்களுமாகப் பதினைந்தும் பால் (ஒன்றன்பால், பலவின்பால்) உணர்த்தும் அஃறிணைப் பெயர்களாகும்.

***நூற்பா 167***

***அது இது உது உன வரூஉம் பெயரும்***
***அவைமுதலாகிய ஆய்தப் பெயரும்***
***அவை இவை உவை என வரூஉம் பெயரும***
***அவை முதலாகிய வகரப் பெயரும்***
***யாது யா யாவை என்னும் பெயரும்***
***ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்***
***பாலறி வந்த அஃறிணைப் பெயரே.***

***2.*** *1.* பல்ல, *2.* பல, *3.* சில, *4.* உள்ள, *5.* இல்ல எனும் பெயர்கள்,

6. வினைப்பெயர் (வருவது,செல்வது)

7. பண்புப்பெயர் - கரியது, செய்யது

8. எண்ணுப்பெயர் - ஒன்று, பத்து

9. ஒப்புமைப் படுத்திக் கூறும் பெயர் - பொன்னன்னது, கண்ணன்னவை

எனும் ஒன்பதும் பால் உணர்த்தும் அஃறிணைப் பெயர்கள் ஆகும்.

***நூற்பா 168***

**பல்ல பல சில என்னும் பெயரும்**
**உள்ள இல்ல என்னும் பெயரும்**
**வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்**
**இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்**
**ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட**
**அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன.**

***3.*** அஃறிணை இயற்பெயர்கள் 'கள்' என்னும் விகுதியைப் பெற்றுப் பலவின்பாலை உணர்த்தும்

| (எ.கா) | **ஒருமை** | **பன்மை** |
|---|---|---|
| | நாய் | நாய்கள் |
| | குதிரை | குதிரைகள் |
| | கடல் | கடல்கள் |
| | மலை | மலைகள் |

***நூற்பா 169***

**கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே**
**கொள்வழி உடைய பலவறி சொற்கே.**

***4.*** கள் எனும் விகுதி பெறாமல் வரும் அஃறிணை இயற்பெயர்கள் அவற்றைத் தொடர்ந்து வரும் வினைச்சொற்களைக் கொண்டு பால் (ஒருமை, பன்மை) பகுத்தறியப்படும்.

(எ.கா) குதிரை வந்தது - ஒருமை
குதிரை வந்தன - பன்மை

***நூற்பா 171***

**தெரிநிலை உடைய அ.றிணை இயற்பெயர்.**
**ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.**

## புறனடை

மேற்கூறப்பட்டவை போன்ற பிற பெயர்களும் அஃறிணையில் பன்மை (பலவின் பால்), ஒருமை (ஆண் பால், பெண்பால்) எனப் பால் விளங்க வரும் அனைத்துப் பெயர்களும் அஃறிணைக்கு உரியனவாகும்.

பிற – மற்றையது, மற்றையன, உள்ளது, உள்ளன.

***நூற்பா 170***

***அன்ன பிறவும் அ.றிணை மருங்கின்***
***பன்மையும் ஒருமையும் பாலறி வந்த***
***என்ன பெயரும் அத்திணை யவ்வே.***

## ***விரவுப்பெயர்***

***1.*** உயர்திணைக்கும், அஃறிணைக்கும் ஒத்த உரிமை உடைய (பொதுவான) பெயர்கள் விரவுப்பெயர்கள் எனப்படும். அவை உயர்திணையை உணர்த்த வரும் போது உயர்திணையாகவும், அஃறிணையை உணர்த்த வரும் போது அஃறிணையாகவும் கொள்ளப்படும். இவை திணை உணர்த்துவதற்குரிய வினைச்சொல்லோடு வராதபோது திணையையும், பாலையும் விளக்குவதில்லை. (விரவுப் பெயர்களுடன் வினைச்சொற்கள் சேர்ந்து வந்தால் மட்டுமே திணை, பால்களைத் தெளிவாக அறிய முடியும்)

***(எ.கா)*** சாத்தன் - விரவுப்பெயர்
சாத்தன் வந்தான் - உயர்திணை - ஆண்பால்
சாத்தன் வந்தது - அஃறிணை - ஒன்றன்பால்
(வந்தான், வந்தது – வினைச்சொற்கள்)

***நூற்பா 172***

***இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்***
***திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்***
***நினையுங் காலைத் தத்தம் மரபின்***
***வினையொடு அல்லது பால்தெரிபு இலவே.***

***2.*** நிகழ்காலம் பற்றி வரும் செய்யும் என்னும் வாய்ப்பாட்டு (இசைக்கும், அசைக்கும், படிக்கும் என்பன போன்றவை) முற்றுச்சொல், உயர்திணை ஒருமையை உணர்த்தும். அதற்கு அது தொடர்ந்து வரும் வினைச்சொல் காரணமாகும்.

***(எ.கா)*** சாத்தன் யாழ் இசைக்கும்
சாத்தி சாந்து அசைக்கும்

இசைத்தல், அசைத்தல் என்பன உயர்திணைக்கு உரிய வினைகள்(செயல்கள்) ஆகும்.

***நூற்பா 173***

***நிகழூஉ நின்ற பால் வரை கிளவியின்***
***உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே***

**அன்ன மரபின் வினைவயி னான.**

## 3. விரவுப் பெயர்களின் பாகுபாடு.

1. இயற்பெயர் - சாத்தன், கொற்றன்
2. சினைப்பெயர் - பெருந்தலையன், நெடுங்கண்ணன்
3. சினை முதற்பெயர் - சீத்தலைச் சாத்தன்,
4. முறைப்பெயர் - தாய், தந்தை

5. தாம், 6. தான், 7. எல்லாம் 8. நீயீர், 9. நீ என்னும் பெயர்களும், இவை போன்ற பிற பெயர்களும் விரவுப் பெயர்களாக வரும்.

**நூற்பா 174**

**இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே**
**முறைப்பெயர்க் கிளவி தாமே தானே**
**எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து**
**சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு**
**அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளவே.**

## விரவுப்பெயரின் விரி

மேற்கூறப்பட்ட விரவுப் பெயர்கள்

1. இயற்பெயர் - 4
2. சினைப்பெயர் - 4
3. சினைமுதற்பெயர் - 4
4. முறைப்பெயர் - 2
5. தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பன - 5

என மொத்தம் 19 ஆகும்.

**நூற்பா 175**

**அவற்றுள்**
**நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்**
**நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே**
**முறைப் பெயர்க் கிளவி இரண்டா கும்மே**
**ஏனைப் பெயரே தம்தம் மரபின.**

## இயற்பெயர் வகைகள்

*1. பெண்மை இயற்பெயர் 2. ஆண்மை இயற்பெயர் 3. பன்மை இயற்பெயர் 4. ஒருமை இயற்பெயர் என இயற்பெயர் நான்கு வகைப்படும்.*

**(எ.கா)** *சாத்தி, சாத்தன், யானை, கோதை*

***நூற்பா 176***

***அவைதாம்***
***பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்***
***பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்று***
***அந்நான்கு என்ப இயற்பெயர் நிலையே.***

## சினைப் பெயர் வகைகள்

*1. பெண்மைச் சினைப்பெயர்*

*2. ஆண்மைச் சினைப்பெயர்*

*3. பன்மைச் சினைப்பெயர்*

*4. ஒருமைச் சினைப்பெயர் எனச் சினைப்பெயர் நான்கு வகைப்படும்.*

**(எ.கா)** *முடத்தி, முடவன், பெருந்தலை, செவியிலி*

***நூற்பா 177***

***பெண்மைச் சினைப் பெயர் ஆண்மைச் சினைப்பெயர்***
***பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்று***
***அந்நான்கு என்ப சினைப்பெயர் நிலையே.***

## சினைமுதற்பெயர் வகைகள்

*சினைமுதற் பெயர் நான்கு வகைப்படும். அவை*

*1. பெண்மைச் சினை முதற்பெயர்*

*2. ஆண்மைச் சினை முதற்பெயர்*

*3. பன்மைச் சினை முதற்பெயர்*

*4. ஒருமைச் சினை முதற்பெயர்.*

**(எ.கா)** *முடக்கொற்றி, முடக்கொற்றன், பெருங்கால் யானை கொடும்புற மருதி.*

***நூற்பா 178***

***பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே***
***ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே***

***பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே***
***ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று***
***அந்நான்கு என்ப சினைமுதற் பெயரே.***

## முறைப்பெயர் வகைகள்

*முறைப்பெயர் இரண்டு வகைப்படும் அவை*

1. *பெண்மை முறைப்பெயர் - தாய்*
2. *ஆண்மை முறைப்பெயர் - தந்தை*

***நூற்பா 179***

***பெண்மை முறைப் பெயர் ஆண்மை முறைப்பெயரென்று***
***ஆயிரண்டு என்ப முறைப்பெயர் நிலையே.***

## பெண்மை சுட்டிய பெயர்கள்

*பெண்மை இயற்பெயர், பெண்மை சினைப்பெயர், பெண்மை சினைமுதற்பெயர், பெண்மை முறைப்பெயர் ஆகிய நான்கும் பெண்பால் பெயர்களாகும். இவை அஃறிணைக்கும் (ஒன்றன்பால் - பெண்), உயர்திணைக்கும் (பெண்பால்) உரியவையாகும்.*

1. *பெண்மை இயற்பெயர்* — *சாத்திவந்தது (அஃறிணை)* / *சாத்தி வந்தாள் (உயர்திணை)*
2. *பெண்மை சினைப்பெயர்* — *முடத்தி வந்தது (அஃறிணை)* / *முடத்தி வந்தாள் (உயர்திணை)*
3. *பெண்மை சினைமுதற்பெயர்* — *முடக்கொற்றி வந்தது (அஃறிணை)* / *முடக்கொற்றி வந்தாள் (உயர்திணை)*
4. *பெண்மை முறைப்பெயர்* — *தாய் வந்தது (அஃறிணை)* / *தாய் வந்தாள் (உயர்திணை)*

***நூற்பா 180***

***பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்***
***ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே.***

## ஆண்மை சுட்டிய பெயர்கள்

ஆண்பாலைப் பற்றிவரும் ஆண்மை இயற்பெயர், ஆண்மைச் சினைப்பெயர், ஆண்மைச் சினைமுதற்பெயர், ஆண்மை முறைப்பெயர் எனும் நான்கும் பெயர்களும் அஃறிணைக்கும், உயர்திணைக்கும் பொருந்திவரும்.

1. ஆண்மை இயற்பெயர்
   - சாத்தன் வந்தது (அஃறிணை)
   - சாத்தன் வந்தான் (உயர்திணை)
2. ஆண்மை சினைப்பெயர்
   - முடவன் வந்தது (அஃறிணை)
   - முடவன் வந்தான் (உயர்திணை)
3. ஆண்மை சினைமுதற்பெயர்
   - முடக்கொற்றன் வந்தது (அஃறிணை)
   - முடக்கொற்றன் வந்தான் (உயர்திணை)
4. ஆண்மை முறைப்பெயர்
   - தந்தை வந்தது (அஃறிணை)
   - தந்தை வந்தான் (உயர்திணை)

***நூற்பா 181***

**ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே**

## பன்மை சுட்டிய பெயர்கள்

பன்மை இயற்பெயர், பன்மைச்சினைப்பெயர், பன்மைச் சினைமுதற்பெயர் எனும் மூன்றும், அஃறிணை ஒருமை, பன்மைக்கும், உயர்திணை ஒருவருக்கும் உரியனவாகும்.

**(எ.கா)**

1. பன்மை இயற்பெயர்
   - யானை வந்தது, யானை வந்தன — அஃறிணை
   - யானை வந்தான், யானை வந்தாள் — உயர்திணை

2. பன்மை சினைப்பெயர்
- நெடுங்கழுத்தல் வந்தது
- நெடுங்கழுத்தல் வந்தன } அஃறிணை
- நெடுங்கழுத்தல் வந்தான்
- நெடுங்கழுத்தல் வந்தாள் } உயர்திணை

3. பன்மை சினை முதற்பெயர்
- பெருங்கால் யானை வந்தது
- பெருங்கால் யானை வந்தன } அஃறிணை
- பெருங்கால் யானை வந்தான்
- பெருங்கால் யானை வந்தாள் } உயர்திணை

**நூற்பா 182**

**பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றே பலவே ஒருவர் என்னும்**
**என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே.**

## ஒருமை சுட்டிய பெயர்கள்

ஒருமை இயற்பெயர், ஒருமைச் சினைப்பெயர், ஒருமைச் சினைமுதற்பெயர் ஆகிய மூன்றும் ஒருமைக்குரிய பெயர்களாகும். இவை அஃறிணையில் ஒருமைக்கும், உயர்திணையில் ஒருவருக்கும் (ஆண், பெண்) பொருந்தி வரும்.

**(எ.கா)** 1. ஒருமை இயற்பெயர்

கோதை வந்தது - அஃறிணை
கோதை வந்தான்
கோதை வந்தாள் } - உயர்திணை

2. ஒருமைச் சினைப்பெயர்

செவியிலி வந்தது - அஃறிணை
செவியிலி வந்தான்
செவியிலி வந்தாள் } - உயர்திணை

3. ஒருமைச் சினைமுதற்பெயர்

கொடும்புறமருதி வந்தது - அ∴றிணை

கொடும்புறமருதி வந்தான்
கொடும்புறமருதிவந்தாள் } - உயர்திணை

*நூற்பா 183*

***ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்***
***ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே***

## தாம் எனும் பெயர்

தாம் எனும் பெயர் பன்மைக்கு உரியது. இது உயர்திணையிலும் அ∴றிணையிலும் வரும்.

(எ.கா) தாம் வந்தார் - உயர்திணைப் பன்மை

தாம் வந்தன - அ∴றிணைப் பன்மை

*நூற்பா 184*

***தாம்என் கிளவி பன்மைக்கு உரித்தே.***

## தான் எனும் பெயர்

தான் எனும் பெயர் உயர்திணையிலும் அ∴றிணையிலும் ஒருமையை உணர்த்தும்

(எ.கா) தான் வந்தான்
தான் வந்தாள் } - உயர்திணை ஒருமை
தான் வந்தது - அ∴றினை ஒருமை

*நூற்பா 185*

***தான்என் கிளவி ஒருமைக்கு உரித்தே.***

## எல்லாம் என்னும் பெயர்

எல்லாம் எனும் பெயர் இருதிணையிலும் பன்மையை குறித்து வரும்.

(எ.கா) எல்லாம் வந்தார் - உயர்திணை

எல்லாம் வந்தன - அ∴றிணை

*நூற்பா 186.*

***எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி***
***பலவழி நுதலிய நிலைத்தா கும்மே.***

எல்லாம் எனும் படர்க்கைச் சொல் உயர்திணையில் தன்மைப் பன்மைக்கு மட்டுமே வரும். முன்னிலைப் பன்மை, படர்க்கைப் பன்மை ஆகியவற்றை வருவதில்லை.

(எ.கா.) நாம் எல்லாம் செய்வோம் - தன்மை பன்மை

***நூற்பா 187.***

***தன்னுள் ளுறுத்து பன்மைக் கல்லது***
***உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை.***

## நீயிர், நீ எனும் பெயர்கள்

நீயிர், நீ எனும் பெயர்கள் இன்ன திணை என்பதை உணர்த்தாமல், இருதிணைக்கும் பொருந்தி வரும். அவற்றுள் நீ என்பது ஒருமைக்கும் நீயிர் என்பது பன்மைக்கும் வரும்.

(எ.கா) நீயிர் வந்தீர் - பன்மை
நீ வந்தாய் - ஒருமை

***நூற்பா 188.***

***நீயிர் நீயென வரூஉங் கிளவி***
***பால்தெறி பிலவே உடன்மொழிப் பொருள.***

***நூற்பா 189.***

***அவற்றுள்***
***நீயென் கிளவி ஒருமைக்கு உரித்தே.***

***நூற்பா 190.***

***ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே.***

## ஒருவர் என்னும் பெயர்

ஒருவர் என்னும் உயர்திணைப் பெயர்ச்சொல் ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவானது.

**(எ.கா)** ஒருவர் வந்தார்

ஒருவர் என்பது ஒருமைச் சுட்டும் பெயராகும். எனினும் அது பலர்பால் முடிவைப் பெறும்.

**(எ.கா)** ஒருவர் வந்தார்
ஒருவர் அவர்

***நூற்பா 191.***

***ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி***

***இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை.***

***நூற்பா 192.***

***தன்மை சுட்டின் பன்மைக்கு ஏற்கும்.***

நீயிர், நீ, ஒருவர் எனும் மூன்று பெயர்களும் இன்ன பால், இன்ன திணை என்பதை உணர்த்தாது. திணை, பால் அறிய வேண்டுமாயின் சொல்லுபவனின் குறிப்பைக் கொண்டே அறிய வேண்டும்.

***நூற்பா 193***

***இன்ன பெயரே இவையெனல் வேண்டின்***

***முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்***

## பால்திரி பெயர்

பெண்பால் பொருளில் பால் திரிந்து வழங்கப்படும் சொல் பெண்மகன் என்பது. இச்சொல் பெண்பாலுக்குரிய வினையைக் கொண்டே முடியும்.

(எ.கா) பெண் மகன் வந்தாள் (வந்தாள் வினை)

***நூற்பா 194***

***மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி.***

***மகடூஉ இயற்கை தொழில் வயி னான.***

## செய்யுளில் ஈறு திரிதல்

செய்யுளில் சில பெயர்ச்சொற்களின் ஈற்றயலில் (இறுதி எழுத்துக்கு முந்தின எழுத்து) நிற்கும் ஆ - ஓ வாகத் திரியும். இத்திரிபினை இடம் பார்த்து ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

**(எ.கா)** வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர் (குறுந் . 7)

இப்பாடலில்

வில்லான் - வில்லோன், தொடியாள் - தொடியோள்
நல்லார் - நல்லோர் என திரிந்தன.

***நூற்பா 195***

**ஆ ஓ வாகும் பெயரு மாருளவே**

**ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே.**

## உயர்திணை ஈறு அமைந்த விரவுப் பெயர்கள்

*செய்யுளில் கருப்பொருளில் வரும் சில அஃறிணைப் பெயர்கள் உயர்திணை ஈறுகளைப் பெற்று வரும். எனினும் அவை அந்த நிலத்தில் அஃறிணைப் பொருளாய் வழங்கி வருவதால் உயர்திணையை உணர்த்தாது.*

*கடுவன், மூலன் - ஆண்பால் முடிவு பெற்றன ⎫ அஃறிணையைக்*
*குமரி - பெண்பால் முடிவு பெற்றது ⎭ குறித்தது.*

***நூற்பா 196***

**இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும்**

**இயற்பெயர் கிளவி உயர்திணை சுட்டா**

**நிலத்துவழி மருங்கின் தோன்றல் ஆன.**

*கருப்பொருளில் வருகின்ற விரவுப்பெயர்கள் அஃறிணையைச் சுட்டுவன. ஆனால் அந்தந்தத் திணைக்கு உரியனவாய் வழங்கப்படும் போது அப்பெயர்கள் உயர்திணையைக் குறிக்கும்.*

**(எ.கா.)** *விடலை, காளை - இவை அஃறிணைக்கு உரியன.*

*பாலை நிலத் தலைவனுக்கு உரிய பெயராய் நிற்கும் போது உயர்திணையைக் குறிக்கும்.*

***நூற்பா 197***

**திணையொடு பழகிய பெயரலங் கடையே.**

# இயல் - 6

# வினையியல்

ஒரு செயல் அல்லது ஒன்றன் இயக்கமே வினை எனப்படும். வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும். வினைச்சொல் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காலத்தைக் காட்டும். இவ்வினைச்சொற்களின் இயல்பினை விளக்குவது வினையியல் ஆகும்.

## வினைச் சொல்லின் இலக்கணம்

வினைச் சொற்கள் வேற்றுமை உருபினை ஏற்காது. காலம் காட்டும்.

**(எ.கா)** உண்டான், வந்தான்

*நூற்பா 198*

**வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.**

## காலம்

காலம் மூன்று வகைப்படும். அவை, 1.இறந்தகாலம், 2. நிகழ்காலம், 3. எதிர்காலம். வினைச்சொற்கள் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் காலத்தை உணர்த்தும்.

(எ.கா) உண்டான் - இறப்பு
உண்கிறான்- நிகழ்வு
உண்பான் - எதிர்வு
} -வெளிப்படையாகக் காலம் காட்டியது.

கரியன் <
பண்டுகரியன் - இறப்பு
இன்றுகரியன் - நிகழ்வு
நாளை கரியென்ஆம் - எதிர்வு
} குறிப்பாகக் காலம் காட்டியது.

*நூற்பா 199.*

**காலந் தாமே மூன்றென மொழிப.**

*நூற்பா 200.*

**இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்**
**மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.**

## வினைச் சொற்களின் வகைகள்

வினைச் சொற்கள் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் காலத்தை உணர்த்தி வரும். இவை,

1. உயர்திணைக்கு உரியன
2. அ∴றிணைக்குரியன
3. இருதிணைக்கும் பொதுவான விரவுவினைக்கு உரியன

என மூன்று வகைகளில் அமையும்.

| | |
|---|---|
| வந்தான், வருகிறான் - தெரிநிலைவினை<br>பொன்னன், கரியன் - குறிப்புவினை | - உயர்திணை |
| சென்றது - தெரிநிலை வினை<br>செய்யது - குறிப்புவினை | - அ∴றிணை |
| வந்தனை - தெரிநிலை வினை<br>வெளியை - குறிப்பு வினை | - விரவுவினை |

(வெளிப்படையாகக் காலம் காட்டும் வினைச்சொல் தெரிநிலை வினை. குறிப்பாகக் காலம் காட்டும் வினைச்சொல் குறிப்புவினை எனப்படும். வெளியை – சோகை ஆயினை.)

**நூற்பா 201**

**குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்**
**காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்**
**உயர்திணைக் குரிமையும் அ∴றிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ வுருபின் தோன்ற லாறே.**

### 1. உயர்திணை வினைகள்

## தன்மை பன்மை வினைமுற்று

அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் எனும் எட்டையும் இறுதியில் உடைய சொற்கள் தன்மை பன்மை உணர்த்தும் வினைமுற்றுக்கள் ஆகும்.

| | |
|---|---|
| அஞ்சினம் - அம் | உண்கும் - கும் |
| அஞ்சினாம் - ஆம் | உண்டும் - டும் |
| அஞ்சினெம் - எம் | வருதும் - தும் |
| அஞ்சனேம் - ஏம் | சேறும் - றும் |

*நூற்பா 202*

**அவைதாம்**

**அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்**

**உம்மொடு வரூஉங் கடதற என்னும்**

**அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்**

**பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே.**

## தன்மை ஒருமை வினைமுற்றுக்கள்

கு, டு, து, று, என், ஏன், அல் என்பனவற்றை ஈற்றில் கொண்ட சொற்கள் தன்மை ஒருமை உணர்த்தும் வினைச்சொற்களாகும்.

உண்கு, உண்டு, வருது, சேறு – கு, டு, து, று
உண்டனென் - என்
உண்டேன் - என்
உண்பல் - அல்

*நூற்பா 203*

**கடதற வென்னும்**

**அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமொடு**

**என் ஏன் அல் என வரூஉம் ஏழும்**

**தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே.**

மேற்கூறியவற்றுள் செய்கு எனும் வாய்ப்பாட்டு வினைமுற்று (கு ஈற்றில் வருவது) பெயரைக் கொண்டு முடியாமல் வேறொரு வினையைக் கொண்டு முடிந்தாலும் அது முற்றுவினை ஆகும்.

**(எ.கா)** காண்கு வந்தேன்.

*நூற்பா 204*

**அவற்றுள்**

**செய்குஎன் கிளவி வினையொடு முடியினும்**

**அவ்வியல் திரியாது என்மனார் புலவர்.**

## படர்க்கை ஒருமை வினைமுற்றுக்கள்

அன், ஆன், அள், ஆள் எனும் விகுதிகளை (இறுதியாக) உடைய சொற்கள் படர்க்கை ஒருமை உணர்த்தும் வினைச்சொற்கள் ஆகும்.

**(எ.கா.)** உண்டனன் - அன் }
உண்டான் - ஆன் } - ஆண்பால்

உண்டனள் - அன்
உண்டாள் - ஆன் } - பெண்பால்

**நூற்பா 205** **அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்**
**ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே**

## படர்க்கை பன்மை வினைமுற்றுக்கள்

அர், ஆர், ப என்னும் மூன்றினையும் இறுதியில் உடைய சொற்கள் பன்மை (பலர்பால்) உணர்த்தும் சொற்கள் ஆகும்.

(எ.கா) உண்டனர் - அர்
உண்டார் - ஆர்
உண்ப - ப

**நூற்பா 206**

**அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்**
**பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல்லே.**

மார் என்பதை இறுதியாகப் பெற்று வினையைக் கொண்டு முடிந்து வரும் சொல்லும் படர்க்கைப் பன்மையை உணர்த்தும்.

**(எ.கா)** கொண்மார் வந்தார்.

**நூற்பா 207**

**மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை**
**காலக் கிளவியொடு முடியும் என்ப.**

## உயர்திணைக்குரிய வினைமுற்றுக்கள்

மேற்கூறப்பட்ட 23-ம் உயர்திணை ஒருமை (ஆண், பெண்), பன்மை (பலர்)க்குரிய வினைமுற்றுக்கள் ஆகும்.

(அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும், கு, டு, து, று, என், ஏன், அல், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார் என்பன)

**நூற்பா 208**

**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அந்நா லைந்தும் மூன்றுதலை இட்ட**
**முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே.**

உயர்திணைப் பன்மையை உணர்த்தும் தன்மை வினைமுற்று எண்ணுப்பொருளில் (எண்ணிக்கையைக் குறிப்பது) வரும் போது அ∴றிணையைச் சார்ந்து வருவதும் உண்டு.

**(எ.கா)** *யானும் என் எ∴கமும் சாறும் (றும்)*
*(யான் - உயர்திணை, எ∴கம் - அ∴றிணை)*

***நூற்பா 209***

***அவற்றுள்***
***பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி***
***எண்ணியல் மருங்கின் திரிபவை உளவே.***

## யார் எனும் குறிப்பு வினைமுற்று

வினாப் பொருளை உணர்த்தும் யார் எனும் குறிப்பு வினைமுற்றுச் சொல், உயர்திணையில் ஆண், பெண், பலர் எனும் மூன்று பால்களுக்கும் உரியதாகும்.

**(எ.கா)** *அவன் யார்?*
*அவள் யார்?*
*அவர் யார்?*

***நூற்பா 210***

***யாஅர் என்னும் வினாவின் கிளவி***
***அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே.***

## செய்யுளில் ஈறுதிரிதல்

ஆன், ஆள், ஆர் எனும் மூன்று ஈறுகளும் உயர்திணையில் தெளிவாகப் பால் உணர்த்துவன ஆகும். இவை செய்யுளில் வரும்போது இவற்றில் உள்ள ‘ஆ’காரம் ‘ஓ’காரமாகத் திரியும்.

**(எ.கா)** *நிற்தந்தான் - நிற்தந்தோன் (ஆன் - ஓன்)*
*நகூஉப்பெயர்ந்தாள் - நகூஉப்பெயர்ந்தோள்*
*(ஆள் - ஓள்)*
*காடிறந்தார் - காடிறந்தோர் - (ஆர் - ஓர்)*

***நூற்பா 211***

***பாலறி மரபின் அம்மூ வீற்றும்***
***ஆஓ ஆகும் செய்யு ளுள்ளே.***

முன்னிலை ஈற்றிற்குரிய ‘ஆய்’ எனும் சொல்லிலுள்ள ‘ஆ’காரமும் செய்யுளில் ஓ காரமாகத் திரியும்.

**(எ.கா)** வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப (அகம் - 80)
வந்தாய் - வந்தோய் (ஆய் - ஓய்)

**நூற்பா 212**

**ஆயென் கிளவியும் அவற்றொடு கொள்ளும்.**

## குறிப்பு வினைமுற்று

1. ஆறாம் வேற்றுமைக்குரிய உடைமைப்பொருள்,

2. ஏழாம் வேற்றுமைக்குரிய நிலப்பொருள்,

3. ஒப்பு, 4. பண்பு ஆகிய பொருட்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பு வினை தோன்றும். இது காலத்தைக் குறிப்பாக உணர்த்தும்.

**(எ.கா)** 1. கச்சினன், கழனினன் - ஆறாம் வேற்றுமை உடைமைப்பொருள்.
2. இல்லத்தள், தஞ்சையன் - ஏழாம் வேற்றுமை நிலப்பொருள்
3. பொன்னன்னன், புலிபோல்வான் - ஒப்பு,
4. கரியன், செய்யன் - பண்பு.

**நூற்பா 213**

**அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்**
**கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்**
**ஒப்பி னானும் பண்பி னானுமென்று**
**அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்.**

அன்மை, இன்மை, உண்மை, வன்மை எனும் சொற்களும், இவற்றைப் போலக் குறிப்புப் பொருளில் வரும் எல்லாச் சொற்களும் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் குறிப்பு வினைமுற்றுக்களாகும்.

**(எ.கா)** அல்லன், அல்லள் - அன்மை
இலன், இலள் - இன்மை
உளன், உளள் - உண்மை
பிற : நல்லன், நல்லள் - நன்மை
தீயன், தீயர் - தீமை.

***நூற்பா 214***

> ***அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்***
> ***அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்***
> ***என்ன கிளவியும் குறிப்பே காலம்.***

## *குறிப்பு வினை முற்றின் ஈறு*

பன்மையும் ஒருமையும் தெளிவாகத் தெரியுமாறு விளக்கிக் காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது குறிப்பு வினைமுற்றாகும். இது தெரிநிலை வினைமுற்றுக்குக் கூறப்பட்ட ஈறுகளைப் பெற்று வரும்.

அம், ஆம், எம், ஏம், என், ஏன் - கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர் - கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார்.

***நூற்பா 215***

> ***பன்மையும் ஒருமையும் பாலறி வந்த***
> ***அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்***
> ***காலக் கிளவி உயர்திணை மருங்கின்***
> ***மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.***

## *2. அஃறிணை வினை*

## *பன்மை வினைமுற்று*

அ, ஆ, வ எனும் மூன்றையும் இறுதியாக உடைய வினைச்சொற்கள் அஃறிணைப் பலவின் பால் படர்க்கையை உணர்த்தும்.

**(எ.கா)** உண்டன, உண்ட - அ
உண்ணா, தின்னா - ஆ
பாடுவ, வருவ - வ

***நூற்பா 216***

> ***ஆ ஆ வ என வரூஉம் இறுதி***
> ***அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை.***

## ஒருமை வினைமுற்று

து, று, டு எனும் குற்றியலுகர ஈறுகளை இறுதியாக உடைய சொற்கள் ஒன்றன்பால் படர்க்கை உணர்த்துவனவாகும்.

**(எ.கா)** புக்கது, வந்தது - து

கூவிற்று, கூறிற்று - று

குண்டுகட்டு, குறுந்தாட்டு - டு

***நூற்பா 217***

**ஒன்றன் படர்க்கை த ற ட ஊர்ந்த**
**குன்றிய லுகரத்து இறுதியாகும்.**

## அ∴றிணை வினைமுற்றுக்கள் (6)

பலவின் பால் ஈறுகள் (அ, ஆ, வ) மூன்றும், ஒன்றன்பால் ஈறுகள் (து, று, டு) மூன்றும் ஆக மேற்கூறிய ஆறினையும் ஈறாகக் கொண்ட சொற்கள் அ∴றிணைத் தெரிநிலை (காலத்தை வெளிப்படையாக உணர்த்துவன) வினைமுற்றுக்கள் ஆகும்.

***நூற்பா 218***

**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அம்மூ விரண்டும் அ∴றிணை யவ்வே.**

## எவன் எனும் குறிப்பு வினைமுற்று

எவன் எனும் குறிப்பு வினைமுற்று அ∴றிணை ஒன்றன்பால், பலவின்பால் இரண்டிற்கும் பொருந்தி வரும்.

**(எ.கா)** *அ∴து எவன்? அவை எவன்?*

***நூற்பா 219***

**அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்**
**ஒக்கும் என்ப எவன்என் வினாவே.**

## அ∴றிணைக் குறிப்பு வினைமுற்றுக்கள்

இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல எனும் சொற்கள், பண்பினை உணர்த்தும் சொல், உள எனும் சொல், பண்பினை உணர்த்தி வரும் சினைமுதற் சொல், ஒப்புமைப் பொருளில் வரும் சொல் எனும் பத்தும் அ∴றிணைக் குறிப்பு வினை முற்றுக்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| **(எ.கா)** | கொம்பின்று, செவியின்று | - இன்று |
| | கோடில, செவியில | - இல |
| | கோடுடைய, செவியுடைய | - உடைய |
| | காயன்று, கனியன்று | - அன்று |
| | கொம்புடைத்து, செவியுடைத்து | - உடைத்து |
| | உழுந்தல்ல, பயறல்ல | - அல்ல |
| | கரியது, கரிய | - பண்புகொள் கிளவி |
| | உழுந்துள, பயறுள | - உள |
| | குறுஞ்செவித்து, குறுஞ்செவிய | - பண்பினாயாகிய சினைமுதற்கிளவி. |
| | பொன்னன்னது, பொன்னன்ன | - ஒப்பொடு வரும் கிளவி. |

***நூற்பா 220***

***இன்றில வுடைய என்னுங் கிளவியும்***
***அன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்***
***பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்***
***பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்***
***ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ***
***அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்.***

## அஃறிணைக் குறிப்பு வினைமுற்றின் ஈறுகள்

அஃறிணைத் தெரிநிலை முற்றுக்குக் கூறிய ஈறுகள் குறிப்பு வினைமுற்றிற்கும் பொருந்தி வரும்.

***நூற்பா 221***

***பன்மையும் ஒருமையும் பாலறி வந்த***
***அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்***
***காலக் கிளவி அஃறிணை மருங்கின்***
***மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.***

## 3. விரவு வினைகள்

முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வினையெச்சம், இல்லை, வேறு எனும் சொற்கள், செய்ம்மன, செய்யும், செய்த எனும் வாய்ப்பட்டு வினைச்சொற்கள் எனும் எட்டுச் சொற்களும் இருதிணைப் பொதுச்

சொற்கள் ஆகும். இவை அப்பொதுத்தன்மையிலிருந்து விலகி ஒரு நேரம் உயர்திணையையும், இன்னொரு நேரம் அ.ஃறிணையையும் உணர்த்தும் வேறுபட்ட தொழிலை உடையனவாய் வரும்.

**(எ.கா)** முன்னிலை - வந்தாய், வந்தீர்

வியங்கோள் - வாழ்க, வாழிய

வினையெச்சம் - பார்க்க

இல்லை (இன்மைச் செப்பல்) -நிலவில் இருள் இல்லை

வேறு - அவன் வேறு, அவள் வேறு

செய்ம்மன - உண்மன குதிரை

செய்யும் - காணும் கண்

செய்த - (வண்டு) துளைத்த கனி.

*நூற்பா 222*

***முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி***
***இன்மை செப்பல் வேறென் கிளவி***
***செய்ம்மன செய்யுஞ் செய்த என்னும்***
***அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்***
***திரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி***
***இருதிணை சொற்குமோ ரன்ன வுரிமைய.***

## முன்னிலை ஒருமை வினைமுற்று

மேற்கூறியவற்றில் இ, ஐ, ஆய் எனும் மூன்று ஈறுகளையும் உடைய முன்னிலை வினைமுற்றுச் சொற்கள் ஒருமைக்கு (ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால்) உரியனவாகும்.

**(எ.கா)** உண்டி - இ

உண்டனை - ஐ

உண்டாய் - ஆய்

*நூற்பா 223*

***அவற்றுள்***
***முன்னிலைக் கிளவி***
***இ ஐ ஆ யென வரூஉம் மூன்றும்***
***ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.***

## முன்னிலைப் பன்மை வினைமுற்று

இர், ஈர், மின் எனும் ஈற்றுச் சொற்கள் முன்னிலைப் பன்மைச் சொற்களாகும். அவை உயர்திணைப் பலர்பாலுக்கும், அ∴றிணைப் பலவின்பாலுக்கும் பொதுவாக வரும்.

**(எ.கா)** உண்டனிர் - இ

உண்டீர் - ஈர்

உண்மின் - மின்

***நூற்பா 224***

***இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும்***
***பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்***
***சொல்லோ ரனைய என்மனார் புலவர்.***

## முன்னிலை ஒழிந்த விரவு வினைகள்

முன்னிலை வினைதவிர கூறப்பட்ட விரவு வினைகள் ஏழு (நூ 222). அவை தத்தம் பொருட்களில் வரும்போது ஐம்பால், மூவிடத்திற்கும் பொதுவாக வரும்.

***நூற்பா 225***

***எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி***
***ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே.***

## வியங்கோள் வினைமுற்று

வியங்கோள் வினைமுற்று தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் வராது. படர்க்கையில் வருவதே பெரும்பான்மை.

**(எ.கா)** அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க,

அவை வாழ்க - படர்க்கை சிறுபான்மை தன்மை,

முன்னிலையிலும் வரும்.

**(எ.கா)** நீவாழ்க, நீர்வாழ்க - முன்னிலை

***நூற்பா 226***

***அவற்றுள்***
***முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு***
***மன்னா தாகும் வியங்கோட் கிளவி.***

## செய்யும் எனும் வினை

நிகழ்காலத்தை உணர்த்தும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகிய மூன்று இடங்களிலும் வருவதில்லை.

***நூற்பா 227***

**பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை**
**அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்**
**செய்யு மென்னும் கிளவியொடு கொள்ளா.**

## *3.* வினையெச்சம்

வினையைக் கொண்டு முடிகின்ற எச்சச் சொல் வினையெச்சம் எனப்படும். (பொருள் முடிவு பெறுவதற்கு ஒரு சொல்லை வேண்டி நிற்பதால் இது எச்சம் ஆகும். வினைச்சொல்லை வேண்டி நிற்பது வினையெச்சம். அதாவது ஒரு வினைச்சொல் வந்தால்தான் பொருள் முற்றுப் பெறும். வினைச்சொல் எஞ்சி நிற்பது வினையெச்சம். பெயர்ச்சொல் எஞ்சி நிற்பது பெயரெச்சம்)

வினை என்பது செயல் ஆகும். வினையெச்ச வாய்பாடுகளும் செய் என்பதை அடிப்படையாக வைத்தே அமைகினறன.

## வினையெச்ச வாய்பாடுகள்

செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்ய, செயின், செய, செயற்கு எனும் ஒன்பது வாய்பாட்டுச் சொற்களும் வினையெச்சச் சொற்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| **(எ.கா)** | உண்டு வந்தான் | - செய்து |
| | தின்னூ வந்தான் | - செய்பூ |
| | உண்ணுபு வந்தான் | - செய்பு |
| | உண்ணெனப் பசிபோயிற்று | - செய்தென |
| | உண்ணியர் வந்தான் | - செய்யியர் |
| | உண்ணிய வந்தான் | - செய்யிய |
| | உணின் மகிழ்வேன் | - செயின் |
| | உண்ண வந்தான் | - செய |
| | உணற்கு வந்தார் | - செயற்கு |

***நூற்பா 228***

***செய்து செய்யூச் செய்பு செய்தெனச்***
***செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென***
***அவ்வகை ஒன்பதும் வினைஎஞ்சு கிளவி.***

பின், முன், கால், கடை, வழி, இடத்து(இடம்) என்பனவற்றை ஈற்றில் கொண்ட சொற்களும் இவற்றைப் போல் காலம் பொருந்தி வருவனவும் ஆகிய அனைத்தும் வினையெச்சச் சொற்கள் ஆகும்.

| | |
|---|---|
| கூறிய பின் | - பின் (இறந்த காலம்) |
| சோறுண்ணு முன் / பசி நீங்கிற்று | - முன் (இறந்தகாலம்) |
| வணங்கி விடுத்தக்கால் | - கால் (இறந்தகாலம்) |
| துவ்வாமை வந்தக்கடை | - கடை (இறந்தகாலம்) |
| உரைக்கும் வழி | - வழி (நிகழ்காலம்) |
| உரைத்தவழி | - வழி (இறந்தகாலம்) |
| உரைத்த இடத்து | - இடம் (இறந்தகாலம்) |

***நூற்பா 229***

***பின் முன் கால் கடை வழியிடத் தென்னும்***
***அன்ன மரபிற் காலங் கண்ணிய***
***என்ன கிளவியும் அவற்றியல் பினவே.***

## வினைமுதல் வினைகொண்டு முடியும் வினையெச்சம்

மேற்கூறப்பட்ட வினையெச்ச வாய்பாடுகளில் செய்து, செய்யூ, செய்பு என்பன தம் வினை முதலின்(கருத்தாவின்) வினையைக் கொண்டு முடியும்.

(எ.கா) கண்ணன் உழுது வந்தான் - செய்து
அழகன் உண்ணூ வந்தான் - செய்யூ
கண்ணன் உண்குபு வந்தான் - செய்பு

***நூற்பா 230***

***அவற்றுள்***
***முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின.***

செய்து, செய்யூ, செய்பு எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள் சினையின் வினையாக வரும் போது சினை வினையோடு முடிய வேண்டும். அவ்வாறின்று முதல் வினையோடு முடிந்தாலும் கொள்ளப்படும்.

**(எ.கா)** கை ஒடிந்து வீழ்ந்தான்

கை ஒடிந்து வீழ்ந்தது.

கை - சினை

வீழ்ந்தான் - முதல் வினை.

கையிறூ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான்.

*நூற்பா 231*

***அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்***
***சினையொடு முடியா முதலொடு முடியினும்***
***வினையோ ரனைய என்மனார் புலவர்.***

## தன்வினை பிறவினை கொண்டு முடியும் எச்சங்கள்

மேற்கூறப்பட்ட மூன்று நீங்கலாக அமைந்த ஏனைய வினையெச்சங்கள், 1. தம் வினைமுதலின் (கருத்தா) வினையைக் கொண்டு முடியும்.

2. அந்த இடத்திற்குப் பொருந்துகின்ற பிற வினைக்குரிய வினையைக் கொண்டும் முடியும்.

**(எ.கா)**செய்தென - மழை பெய்தெனப் புகழ்பெற்றது - தன்வினை

மழை பெய்தென மரம் தழைத்தது - பிறவினை

செயின் - மழை பெயின் புகழ்பெறும் - தன்வினை

மழை பெயின் குளம் நிரம்பும் - பிறவினை

*நூற்பா 232*

***ஏனை யெச்சம் வினைமுதலானும்***
***ஆன்வந் தியையும் வினைநிலை யானும்***
***தாமியல் மருங்கின் முடியும் என்ப.***

## வினையெச்சங்கள் அடுக்கி முடிதல்

ஒவ்வொரு வினையெச்சச் சொற்களும் தனித்தனி வினையைக் கொண்டு முடிவதே முறையாகும். அவ்வாறின்றி வினையெச்சச் சொற்களில் ஒரு வகை வாய்ப்பாட்டுச் சொற்கள் பலமுறை தொடர்ந்தும் (அடுக்கியும்), பலவகை வாய்ப்பாட்டுச் சொற்கள் பலமுறை தொடர்ந்தும் வருவது உண்டு. அவ்வாறு

அடுக்கி வரும் போது இறுதியில் நிற்கும் எச்சம் ஒருவினை கொண்டு பொருள் முடியும். அப்போது ஏனைய எச்சங்களும் பொருள் முடிந்தவை ஆகும்.

**(எ.கா)** உண்டு தின்று ஓடிப்பாடி வந்தான்.

(உண்டு. தின்று, ஓடு, பாடு என்பன செய்து எனும் வாய்பாட்டுச் சொற்கள். ஓடு, பாடு என்பனவற்றின் உகரம் இகரமாகத் திரிந்தது)

உண்டு பருகூத் தின்குபு வந்தான்.

உண்டு(செய்து), பருகூ(செய்யூ), தின்குபு(செய்பு) எனும் பல வாய்பாட்டுச் சொற்கள் அடுக்கி வந்தது. வந்தான் எனும் ஒருவினை கொண்டு முடிந்தன.

***நூற்பா 233***

**பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி**
**சொன்முறை முடியா தடுக்குந வரினும்**
**முன்னது முடிய முடியுமன் பொருளே.**

## பெயரெச்சம்

## பெயரெச்ச வாய்பாடுகள்

செய்யும், செய்த எனும் வாய்பாட்டுப் பெயரெச்சச் சொற்கள், நிலம், பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை எனும் ஆறு பெயர்களையும் கொண்டு முடியும்.

**(எ.கா)**

| | | |
|---|---|---|
| நிலம் | - வாழும் ஊர் | - செய்யும் |
| பொருள் | - விளையும் பயிர் | |
| காலம் | - துயிலும் நேரம் | |
| கருவி | - எழுதும் பேனா | |
| வினைமுதல் | - படிக்கும் மாணவன் | |
| வினை | - உண்ணும் உணவு | |

### தொழிற்பெயர்

| | | |
|---|---|---|
| நிலம் | - படித்த பள்ளி | - செய்த |
| பொருள் | - உண்ட சோறு | |
| காலம் | - வந்த நாள் | |
| கருவி | - எய்த வேல் | |
| வினைமுதல் | - ஆடிய கூத்தன் | |
| வினை | - கூடிய கூட்டம் | |

***நூற்பா 234***

**நிலனும் பொருளும் காலமும் கருவியும்**
**வினைமுதல் கிளவியும் வினையும் உளப்பட**
**அவ்வறு பொருட்குமோ ரன்ன உரிமைய**
**செய்யுஞ் செய்த என்னுஞ் சொல்லே.**

மேற்கூறப்பட்ட நிலம் முதலாகிய அறுவகைப் பெயரையும் கொண்டு முடியும் செய்யும் எனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம், பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகிய மூவிடங்களிலும் வரும்.

**(எ.கா)** அவர் பாடும் பாட்டு – பலர்பால் படர்க்கை

நான் பாடும் பாட்டு }
நாம் பாடும் பாட்டு } தன்மை
நீ பாடும் பாட்டு }
நீவிர் பாடும் பாட்டு } - முன்னிலை

***நூற்பா 235***

**அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி**
**முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே.**

## எதிர்மறையில் பெயரெச்சமும் வினை எச்சமும்

பெயரெச்சமும், வினையெச்சமும் எதிர்மறைப் பொருளில் வரும் போதும் தத்தமக்குரிய எச்சப் பொருளில் மாறுபடாமல் வரும். அதாவது பெயரெச்சம் பெயரைக் கொண்டும், வினையெச்சம் வினையைக் கொண்டும் முடிந்து வரும்.

**(எ.கா)** பெயரெச்சம் - வாழும் வீடு - உடன்பாடு
வாழா வீடு - எதிர்மறை
வினையெச்சம் - உண்டு வந்தான் - உடன்பாடு
உண்ணாது வந்தான் - எதிர்மறை.

***நூற்பா 236***

**பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்**
**எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா.**

## இடையில் பிற சொற்கள் வருதல்

பெயரெச்சமும், வினையெச்சமும் தத்தமக்குரிய சொற்களைப் (பெயர்ச்சொல், வினைச்சொல்) பெற்று முடிந்து வரும். அந்த எச்சச் சொல்லிற்கும் அதைக் கொண்டு முடிந்து வரும் சொல்லிற்கும் இடையில் பொருத்தமான பிற சொற்கள் வருவதும் உண்டு. இது **இடைபிறவரல்** எனப்படும்.

(எ.கா) உழுது(முருகன்) வந்தான் - வினையெச்சம்

கொன்ற(காட்டுள்) யானை - பெயரெச்சம்.

முருகன் , காட்டுள் எனும் சொற்கள் இடையில் வந்தன.

***நூற்பா 237***

**தத்தம் எசச்மொடு சிவணுங் குறிப்பின்**
**எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.**

## செய்யும் எனும் பெயரெச்சம் திரிதல்

செய்யும் என்னும் பெயரெச்சத்தின் ஈற்றயலில் நிற்கும் உகரம் தான் ஏறிய மெய்யெழுத்துடன் சேர்ந்து (ய் + உ = யு) சில இடங்களில் கெடும்.

(எ.கா) வாவும் பரி - வாம்பரி

போகும் புரளி - போம்புரளி

***நூற்பா 238***

**அவற்றுள்**
**செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு**
**மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை உகரம்**
**அவ்விட னறிதல் என்மனார் புலவர்.**

### 5. கால வழுவமைதி

## இறந்தகாலச் சொல் எதிர்காலச் சொல்லுடன் மயங்குதல்

இறந்த காலத்தை உணர்த்தும் செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம், எதிர்காலத்தை உணர்த்தும் வினைச்சொல்லோடு சேர்ந்து வருவதும் உண்டு.

**(எ.கா)** நீ உண்டு வருவாய்

உண்டு - இறந்தகாலம்

வருவாய் - எதிர்காலம்

***நூற்பா 239***

***செய்தெ னெச்சத் திறந்த காலம்***
***எய்திடன் உடைத்தே வாராக் காலம்.***

## நிகழ்காலச் சொல் பிறகாலங்களை உணர்த்துதல்

இவ்வுலகில் மூன்று காலத்திலும் மாற்றம் இன்றிப் பொதுவாய் வரும் இயல்பினை உடைய பொருட்கள் உள்ளன. அவற்றின் இயல்பினை நிகழ்காலத்துக்குரிய செய்யும் என்னும் வாய்பாட்டுப் பொதுச்சொல்லால் கூற வேண்டும்.

(எ.கா) சூரியன் உதிக்கும்
உலகம் சுற்றும்.

***நூற்பா 240***

***முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை***
***எம்முறைச்சொல்லும் நிகழுங் காலத்து***
***மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்***

## விரைவுப் பொருளில் காலம் மயங்குதல்

எதிர்காலம், நிகழ்காலம் இரண்டிற்கும் பொதுவாக வரும் வினைச் சொற்களை விரைவின் காரணமாகக் கூறும் போது இறந்தகாலத்திற்குரிய வினைச் சொல்லால் கூறுவது மரபு.

**(எ.கா.)** (உண்டு கொண்டிருப்பவனை அவசரமாக அழைக்கும் போது)

உண்டேன், உண்டேன், வந்தேன், வந்தேன் எனக் கூறுவது நிகழ்காலம் விரைவின் காரணமாக இறந்த காலமாகக் கூறப்பட்டது.

***நூற்பா 241***

***வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்***
***ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி***
***இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்***
***விரைந்த பொருள என்மனார் புலவர்.***

## சிறப்புப் பொருளில் காலம் மயங்குதல்

உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுகின்ற சிறந்த வினையின் பயனைக் கூறும் போது, வினையைச் செய்தவரின் பெயரைச் சுட்டிச் சொல்லவில்லை என்றால் நிகழ்காலத்தால் சொல்வதே முறையாகும். அப்பெயரைச் சேர்த்துச் சொல்கின்ற போது எதிர்காலத்திலோ இறந்தகாலத்திலோ சொல்ல வேண்டும்.

**(எ.கா)** தவம் செய்யின் சுவர்க்கம் புகும். (புகும் - நிகழ்காலம்)
முனிவன் தவம் செய்து சுவர்க்கம் புகுந்தான் (இறந்தகாலம்)

***நூற்பா 242***

***மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி***
***அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி***
***செய்வ தில்வழி நிகழூங் காலத்து***
***மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.***

## இது செயல் வேண்டும் எனும் முற்று

'இச்செயலைச் செய்ய வேண்டும்' எனும் வாய்ப்பாட்டில் வரும் வினைமுற்று இரு பொருள்பட வரும். அதாவது அதைச் சொல்பவனுக்கும் (தன்னிடத்தும்), கேட்பவனுக்கும் (பிறனிடத்தும்) ஒத்த பொருளில் வரும்.

**(எ.கா)** கண்ணன் படித்தல் வேண்டும்.

எனும் கூற்று கண்ணனுக்கும், படித்தலை விரும்பும் தந்தைக்கும் பொருத்தமாக வந்தது.

***நூற்பா 243***

***இதுசெயல் வேண்டு மென்னுங கிளவி***
***இருவயி னிலையும் பொருட்டா கும்மே***
***தன்பாலானும் பிறன்பா லானும்.***

## வற்புறுத்தலில் வரும் வினா

வினைச்சொல் வற்புறுத்திக் கூறுவதற்கான பொருளில் அமைந்த வினாவாக வருமானால் அது வினாவுடை வினைச்சொல் எனப்படும். அது உடன்பாட்டுப் பொருளை உணர்த்தாமல் எதிர்மறைப் பொருளை உணர்த்தியும் வரும்.

**(எ.கா)** கோபம் காரணமாக ஒருவனை ஒருவன் திட்டிய பின், திட்டியவனிடம் நீ வைதாய் என்று கூறும் போது அவன்,

*நான் வைதேனா?*

என்று கேட்டால் நான் வையவில்லை எனும் எதிர்மறைப் பொருளைத் தரும்.

***நூற்பா 244***

***வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்***
***எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தே.***

## இயற்கை, தெளிவுப் பொருளில் காலம் மயங்குதல்

எதிர்காலத்திற்குரிய வினைச் சொல்லால் கூறப்பட வேண்டிய, ஒரு பொருளின் இயல்பு மற்றும் இது என்று துணியப்பட்ட தெளிவுப் பொருள் ஆகியவை இறந்தகாலம் மற்றும் நிகழ்காலச் சொற்களால் கூறப்படுவதும் உண்டு.

***இயற்கை: (எ.கா)***

இக்காட்டில் போவான் பொருளை இழந்தான் (இறந்தகாலம்)

பொருளை இழக்கின்றான் (நிகழ்காலம்)

காட்டில் செல்பவன் கள்வரால் பொருளை இழப்பான் என்பது இயற்கை. எனவே பொருளை இழக்கும் முன்பே இறந்தகால, நிகழ்காலச் சொற்களால் கூறப்பட்டது.

**தெளிவு:** ***(எ.கா)*** மழை பெய்தது (இறந்தகாலம்)
மழை பெய்கிறது (நிகழ்காலம்)

(எறும்பு முட்டையைக் கொண்டு மேடான இடத்திற்குச் சென்றால் மழைபொழியும் என்பது தெரிந்த பொருள். இதனைக் கண்ட ஒருவர் மழை பெய்யும் முன்பே கூறியது.)

***நூற்பா 245***

***வாராக் காலத்து வினைச்சொற் கிளவி***
***இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்***
***இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை.***

## செயப்படுபொருள் வினைமுதல் போல வருதல்.

செயப்படுபொருளை (செய்யப்பட்ட பொருள்) வினை முதலாகக் (கருத்தா) கொண்டு அதன் மேல் வினையை ஏற்றிக் கூறுதலும் உண்டு. இது உலக வழக்கத்திற்கு உரியதாகும்.

***(எ.கா)*** *திண்ணை மெழுகிற்று (மெழுகப்பட்டது)*

***நூற்பா 246***

***செயப்படு பொருளைச் செய்தது போலத்***
***தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.***

## இறந்தகாலமும் எதிர்காலமும் தம்முள் மயங்கல்

*இறந்தகாலமும் எதிர்காலமும் தம்முள் மயங்கி வரும்.*

***(எ.கா)*** *இவர் முன்பு இச்சோலையில் விளையாடுவர்.*
*இவர் முன்பு இச்சோலையில் விளையாடினார்.*

*நாளை விளையாடுவார். நேற்று விளையாடினார் என வர வேண்டும். இது மயங்கி வந்தது.*

***நூற்பா 247***

***இறப்பே யெதிர்வே யாயிரு காலமும்***
***சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.***

## நிகழ்காலம் ஏனையவற்றோடு மயங்குதல்

*இறந்தகாலமும், எதிர்காலமும் மயங்குவது போல நிகழ்காலமும் மயங்கி வரும்.*

***(எ.கா)*** *உன்னுடன் நாளை பேசுகிறேன்*

*நாளை - எதிர்காலம்*
*பேசுகிறேன் - நிகழ்காலம்*

*மயங்கி வந்தது.*

***நூற்பா 248***

***ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.***

# இயல் - 7

# இடையியல்

தனக்கென ஒரு பொருள் இன்றிப் பெயரோடும், வினையோடும் சார்ந்து அந்தந்தப் பொருளைத் தருவது இடைச்சொல் ஆகும். இடைச்சொல் சொற்களின் முன்னும் பின்னும் சிறுபான்மையும், இடையில் பெரும்பான்மையும் நிற்கும். இடைச்சொற்கள் சொல்லின் முன்னும் பின்னும் நின்றாலும், பெரும்பாலும் இடையில் நிற்கும் இயல்பை உடையதால் இடைச்சொல் ஆயிற்று என்பார் சேனாவரையர். தனித்து இயங்கும் ஆற்றல் அற்றது இடைச்சொல். அது பெயர், வினைகளை இடமாகக் கொண்டு (சார்ந்து) தோன்றும். அதனால் இடச்சொல் என்பதே இடைச்சொல் என வழங்கப்படுகிறது என்பார் தெய்வச்சிலையார். பெயர்ச்சொல்லும் ஆகாது; வினைச் சொல்லும் ஆகாது; அவ்விரண்டன் வேறுமாகாமல் இடைநிகரனவாய் நிற்பதால் இடைச்சொல் ஆயிற்று என நன்னூல் உரையாசிரியர்களில் ஒருவரான சங்கரநமச்சிவாயர் இடைச்சொல்லுக்கு விளக்கம் தருகிறார். இடைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறுவது இடையியல் ஆகும்.

## இடைச்சொல்லின் பொது இலக்கணம்

இடைச்சொற்கள் பெயரைச் சார்ந்து பெயர்ப் பொருளையும், வினையைச் சார்ந்து வினைப் பொருளையும் உணர்த்தும். அவை தனித்து நின்று பொருள் தரும் இயல்பு உடையன அல்ல.

அது **கொல்** தோழி (கொல்) அது எனும் பெயரைச் சார்ந்து வந்தது.

வருக**தில்** அம்ம (தில்) வருக எனும் வினையைச் சார்ந்து வந்தது.

***நூற்பா 249***

**இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்**
**நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.**

# இடைச்சொற்களின் பாகுபாடு

இடைச்சொற்கள்,

*1. இரு சொற்களின் புணர்ச்சியின் போது அவற்றின் பொருள் விளங்க உதவுவன.*

**(எ.கா)** *எல்லாவற்றையும்*

*எல்லாம் + வற்று + ஐ + உம் - (வற்று - அ∴றிணையைக் காட்டியது.)*

*2. வினைச் சொற்களில் காலம் காட்டும் உறுப்பாய் வருவன.*

**(எ.கா)** *கண்டான் - காண் +ட் + ஆன்*

*(ட் - இறந்தகாலத்தைக் காட்டியது.)*

*3. வேற்றுமைப் பொருளை உணர்த்த உருபாய் வருவன,*

**(எ.கா)** *கண்ணனை – (ஐ)*

*கண்ணனால் - (ஆல்)*

*4. தமக்கெனப் பொருளின்றித் தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்தி வருவன (அசைநிலைக்கிளவி)*

**(எ.கா)** *மலைகிழவோனே (ஏ - அசைநிலை)*

*5. செய்யுளில் இசைநிறைத்தல் பொருளில் வருவன (இசைநிறைக் கிளவி)*

**(எ.கா)** *ஏஎ! இவன் ஒருத்தன்.*

*(ஏஎ என்பது செய்யுள் இசைநிறைக்க வந்தது)*

*6. சொல்பவனின் குறிப்பினால் தத்தம் பொருள் உணர்த்துவன.*

**(எ.கா)** *கூரியதோர் வாள்மன் (மன்)*

*(மன் என்பது வாள் கூர்மையற்றது என்பதைக் குறிப்பால் உணர்த்தியது.)*

*7. ஒப்புமைப் பொருளில் வரும் உவம உருபுகள்.*

**(எ.கா)** *பொன்னன்ன குதிரை (அன்ன - உவம உருபு)*

*எனும் ஏழு வகைப் பாகுபாடுகளை உடையன.*

***நூற்பா 250***

***அவைதாம்***
***புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்***
***வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்***
***வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவும்***
***அசைநிலைக் கிளவி யாகி வருநவும்***
***இசைநிலைக் கிளவி யாகி வருநவும்***

**தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்**
**ஒப்பில் வழியால் பொருள்செய் குநவுமென்று**
**அப்பண் பினவே நுவலுங் காலை.**

## இடைச்சொற்கள் நிற்குமிடமும் வேறுபாடும்.

இடைச்சொற்கள் தாம் சார்ந்து வரும் சொல்லின் முன்னும் பின்னும் வரும். ஈறு திரிந்து வரும். ஓர் இடைச்சொல் வேறொரு இடைச்சொல்லுடன் இணைந்தும் வரும்.

**(எ.கா)** **கொன்**னூர் (கொன்) - முன்னால் வந்தது
அது**மன்** (மன்) - பின்னால் வந்தது
போகுக**தில்ல** தில் திரிந்து தில்ல ஆனது
வருக**தில் அம்ம** - தில், அம்ம எனும் இடைச்சொற்கள் இணைந்து வந்தது.

***நூற்பா 251***

**அவைதாம்**
**முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்**
**தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்**
**அன்னவை யெல்லாம் உரிய வென்ப.**

## இடைச்சொற்களின் பொருள்கள்
## (சிறப்பிலக்கணம்)

### ‘மன்’ இடைச்சொல்

மன் எனும் இடைச்சொல் கழிவு (நீங்குதல்), ஆக்கம், ஒழியிசை (வேறோர் பொருள் தருதல்) எனும் மூன்று பொருளையும் தரும்.

**(எ.கா)** சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே - கழிவு
பண்டு காடுமன், இனி கயல் பிறழும் வயலாயிற்று – ஆக்கம்
கூரியதோர் வாள்மன் - ஒழியிசை (வாள் கூர்மையற்றது எனும் பொருள் தந்தது)

***நூற்பா 252***

**கழிவே யாக்கம் ஒழியிசைக் கிளவியென்று**
**அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.**

## ‘தில்’ இடைச்சொல்

*1.* விழைவு (விருப்பம்), *2.* காலம், *3.* ஒழியிசை எனும் மூன்று பொருட்களிலும் தில் எனும் இடைச்சொல் வரும்.

(எ.கா) பெறுகதில் அம்ம - விழைவு

(தலைவியைப் பெறுவதற்குரிய தலைவனின் விருப்பத்தைக் குறித்தது)

பெற்றாங் கறிகதில் அம்ம இவ்வூரே - காலம்

(தலைவியை அடைந்த காலத்தை இவ்வூர் அறிந்து கொள்ளட்டும்)

வருகதில் அம்ம எம்சேரி சேர் - ஒழியிசை.

(எம் ஊருக்கு வந்தால் இன்னது செய்வேன் எனும் ஒழியிசைப் பொருள்)

***நூற்பா 253***

**விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று**
**அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.**

விழைவுப் பொருளில் வரும் ‘தில்’ எனும் இடைச்சொல் தன்மை இடத்திற்கு மட்டுமே வரும்.

**(எ.கா)** பெறுவதில் அம்ம யானே (யான் பெறுவேனாக) – தன்மை

***நூற்பா 260***

**விழைவின் தில்லை தன்னிடத் தியலும்.**

## ‘கொன்’ இடைச்சொல்

*1.* அச்சம் *2.* பயமிலி (பயன் இன்மை) *3.* காலம், *4.* பெருமை எனும் நான்கு பொருட்களையும் கொன் எனும் இடைச்சொல் தரும்.

**(எ.கா)** கொன்முனை இரவூர் - அச்சம்

(அஞ்சி வாழும் ஊர்)

கொன்னே கழிந்தன்று இளமை - பயமிலி

(பயனின்றிக் கழிந்தது இளமை)

கொன்வரல் வாடை நினது எனக் கொண்டேனோ – காலம்

(காதலர் நீங்கிய காலத்தை அறிந்து வரும்

வாடைக்காற்று)

கொன்னூர் துஞ்சினும் யாம்துஞ் சலமே (பெருமை)

கொன்னூர் - பெரிய ஊர்

***நூற்பா 254***

***அச்சம் பயமிலி காலம் பெருமையென்று***
***அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.***

## ‘உம்’ இடைச்சொல்

1. எச்சம், 2. சிறப்பு, 3. ஐயம், 4. எதிர்மறை, 5. முற்று, 6. எண், 7. தெரிநிலை, 8. ஆக்கம் எனும் எட்டுப் பொருள்களையும் குறித்து உம் இடைச்சொல் வரும்.

**(எ.கா)** சாத்தனும் வந்தான் - கொற்றனும் வந்தான் என எச்சப்பொருள் தந்தது.

அறிஞரும் விரும்பும் நூல் - சிறப்பு

இன்றேனும் நாளையேனும் வருவான் - ஐயம்

சாத்தன் வருவதற்கும் உரியன் - வராமலும் போகலாம் எனும் எதிர்மறைப் பொருள் தந்தது.

பாண்டவர் ஐவரும் வந்தார் - முற்று

நிலமும் நீரும் தீயும் வளியும் ஆகாயமும் எனப் பூதம் ஐந்து - எண்

திருமகளும் அல்லள்: மலைமகளும் அல்லள் இவள் யாரோ?- தெரிநிலை

(நிலவுலகப் பெண் என்பது தெரியப்பட்டது)

நெடியனும் வலியனும் ஆயினான் - ஆக்கம்

***நூற்பா 255***

***எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை***
***முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று***
***அப்பால் எட்டே உம்மைச் சொல்லே.***

எச்ச உம்மையும் (எஞ்சி நிற்பதை உணர்த்துவது), எதிர்மறை உம்மையும் (எதிர்மறைப் பொருளைத் தருவது) இரண்டும் சேர்ந்து வருவது இல்லை.

**(எ.கா)** ‘சாத்தனும் வந்தான், கொற்றனும் வரலும் உரியன்’ என்பது பொருத்தமற்ற தொடர்.

***நூற்பா 283***

**எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்**

**தத்தமுள் மயங்கும் உடனிலை யிலவே.**

எச்ச உம்மைச் சொல் உம்மையின்றி வந்தால் அது **செஞ்சொல்** எனப்படும். உம்மை இல்லாத செஞ்சொல் தொடரை உம்மைத் தொடருக்குப் பின்னர்க் கூறாமல் முன்னர்க் கூற வேண்டும்.

**(எ.கா)** சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான்.

(சாத்தன் - செஞ்சொல், கொற்றனும் - எச்ச உம்மை)

***நூற்பா 284***

**எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்**

**பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்**

முற்றும்மையை அடுத்து நிற்கும் தொகைச்சொல் எச்சப் பொருளையும் தருவதுண்டு.

**(எ.கா)** பத்தும் கொடுக்காதே.

முற்றும்மை, சில குறைத்துக் கொடு என்ற எச்சப் பொருளில் வந்தது.

***நூற்பா 285***

**முற்றிய வும்மைத் தொகைச் சொல் மருங்கின்**

**எச்சக் கிளவி யுரித்து மாகும்.**

## ‘ஓ’கார இடைச்சொல

ஓகார இடைச் சொல் 1. பிரிநிலை, 2. வினா, 3. எதிர்மறை, 4. ஒழியிசை, 5. தெரிநிலை, 6. சிறப்பு எனும் ஆறு பொருள்களிலும் வரும்.

**(எ.கா)** அவனோ கொண்டான் - பிரிநிலை

சாத்தன் உண்டானோ ? - வினா

அவனோ வருவான் - எதிர்மறை

(வரமாட்டான் எனும் பொருள்)

வேலை செய்யவோ வந்தான்? - ஒழியிசை.

(பொழுது போக்க வந்தான் எனும் ஒழிந்த பொருளைத் தந்தது)

நன்றோ? அன்று தீதோ? அன்று - தெரிநிலை

ஓஒ! பெரியன் - சிறப்பு

*நூற்பா 256*

**பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை**
**தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ**
**இருமூன்று என்ப ஓகா ரம்மே.**

## 'ஏ'கார இடைச்சொல்

1. தேற்றம் (தெளிவு), 2. வினா, 3. பிரிநிலை, 4. எண், 5. ஈற்றசை என்னும் ஐந்து பொருட்களில் 'ஏ'கார இடைச்சொல் வரும்.

**(எ.கா)** உண்டே மறுமை - தேற்றம்
நீயே கொண்டாய்? - வினா
அவருள் இவனே கள்வன் - பிரிநிலை
நிலனே நீரே தீயே வளியே - எண்
காடிறந்தோரே - ஈற்றசை

*நூற்பா 257*

**தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே**
**ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.**

தெளிவுப் பொருளில் வரும் 'ஏ'காரம், சிறப்புப் பொருளில் வரும் 'ஓ'காரம் இரண்டும் இரண்டு, மாத்திரை அளவில் இருந்து நீண்டு மூன்று மாத்திரை அளவாய் ஒலிக்கும்.

**(எ.கா)** ஏஎ இவளொருத்தி (தெளிவு)
ஓஒ பெரியன் (சிறப்பு)

*நூற்பா 261*

**தெளிவின் ஏயுஞ் சிறப்பின் ஓவும்**
**அளபின் எடுத்த இசைய வென்ப.**

## 'என' இடைச்சொல்

'என' எனும் இடைச்சொல் 1. வினை, 2. குறிப்பு, 3. இசை, 4. பண்பு, 5. எண், 6. பெயர் எனும் ஆறு பொருட்களிலும் வரும்.

**(எ.கா)** கொள் எனக் கொண்டான் - வினை
துண்ணெனத் துடித்தது - குறிப்பு

(அச்சமாகிய குறிப்புப் பொருள்)

ஒல்லென ஒலித்தது - இசை

வெள்ளென விளர்த்தது - பண்பு

நிலனென, நீரென, வளியென - எண்

அழுக்காறென ஒரு பாவி - பெயர்

***நூற்பா 258***

***வினையே குறிப்பே இசையே பண்பே***
***எண்ணே பெயரொ டவ்வறு கிளவியும்***
***கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி.***

## ‘என்று’ இடைச்சொல்

என்று எனும் இடைச்சொல் என எனும் இடைச்சொல்லிற்குக் கூறப்பட்ட ஆறு பொருள்களையும் தரும்.

**(எ.கா)** கொள்ளென்று கொடுத்தான் - வினை
விண் என்று இசைத்தது - குறிப்பு
ஒல்லென்று ஒலிக்கும் - இசை
வெள்ளென்று விளர்த்தது - பண்பு
நிலனென்று, நீரென்று, வளியென்று - எண்
ஊரென்று சொல்லப்படுவது உறையூர் - பெயர்

***நூற்பா 259***

***என்றென் கிளவியும் அதனோ ரற்றே.***

## ‘மற்று’ இடைச்சொல்

மற்று எனும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை எனும் இரண்டு பொருட்களிலும் வரும்.

**(எ.கா)** மற்றறிவாம் நல்வினையாம் இளையம் - வினைமாற்று
(நல்வினையைப் பின்னர் செய்வோம் என மாற்றுவது)

அதுமற்று அவலம் கொள்ளாது - அசைநிலை

(மற்று எனும் சொல் எப்பொருளும் தராமல் அசைநிலையாய் நின்றது).

***நூற்பா 262***

***மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை***
***அப்பா லிரண்டென மொழிமனார் புலவர்.***

## ‘எற்று’ இடைச்சொல்

எற்று எனும் இடைச்சொல் கழிந்து போனது எனும் பொருளில் வரும்.

**(எ.கா)** எற்று என் உடம்பின் எழில்நலம்

***நூற்பா 263***

**எற்றென் கிளவி இறந்த பொருட்டே.**

## ‘மற்றையது’ இடைச்சொல்

மற்றையது எனும் இடைச்சொல் ஒன்றைச் சுட்டுவதோடு மட்டுமல்லாமல், அதற்கு இனமான பொருளைக் குறித்தும் வரும்.

**(எ.கா)** மற்றையது கொடு

(சுட்டியதை விடுத்து இனமான பிறிதொன்றைக் குறித்தது)

***நூற்பா 264***

**மற்றைய தென்னுங் கிளவி தானே**
**சுட்டுநிலை யொழிய இனங்குறித் தன்றே.**

## ‘மன்ற’ இடைச்சொல்

மன்ற எனும் இடைச்சொல் தெளிவுப் பொருளில் வரும்.

**(எ.கா)** மடவை மன்ற வாழிய முருகே!

(உறுதியாக அறிவற்றவன் என்பதைத் தெளிவுபடுத்தியது)

***நூற்பா 265***

**மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்**

## ‘தஞ்சம்’ இடைச்சொல்

தஞ்சம் எனும் இடைச்சொல் எளிமை எனும் பொருளில் வரும்.

**(எ.கா)** முரசு கெழுதாயத்து அரசோ தஞ்சம்

***நூற்பா 266***

**தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.**

## ‘அந்தில்’ இடைச்சொல்

அந்தில் எனும் இடைச்சொல் ஆங்கு எனும் இடப்பொருள், அசைநிலை எனும் இரண்டு இயல்பினையும் உடையது.

**(எ.கா)** வருமே சேயிழை அந்திற் கொழுநற்காணிய - ஆங்கு

அந்தில் கச்சினன் கழலினன் - அசைநிலை

***நூற்பா 267***

**அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று**

**ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப.**

## 'கொல்' இடைச்சொல்

கொல் எனும் இடைச்சொல் ஐயப் பொருளில் வரும்.

**(எ.கா)** அணங்குகொல் ஆய் மயில் கொல்

***நூற்பா 268***

**கொல்லே ஐயம்.**

## 'எல்' இடைச்சொல்

'எல்' எனும் இடைச்சொல் 'இலங்குதல்' எனும் பொருளைத் தரும்.

**(எ.கா)** எல்வளை

***நூற்பா 269.*** **எல்லே இலக்கம்.**

## 'ஆர்' இடைச்சொல்

இயற்பெயரின் முன்னர் ஆர் எனும் இடைச்சொல் சேர்ந்து வரும். இவ் இயற்பெயர், பலர்பால் ஈற்றெழுத்தினை உடைய வினையைக் கொண்டு முடியும்.

**(எ.கா)** பெருஞ்சாத்தனார் வந்தார்

தந்தையார் வந்தார்.

***நூற்பா 270***

**இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி**

**பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே.**

ஆர் எனும் இடைச்சொல் அசைநிலையாகவும் வரும். அதனை இடம் அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**(எ.கா)** பெயரினாகிய தொகையுமார் உளவே.

***நூற்பா 271***

**அசைநிலைக் கிளவி யாகுவழி அறிதல்.**

## 'ஏ' 'குரை' எனும் இடைச்சொற்கள்

ஏ, குரை எனும் இரு இடைச்சொற்களும் *1.* இசை நிறைத்தல், *2.* அசைநிலை எனும் இரு பொருண்மையிலும் வரும்.

**(எ.கா)** **ஏஎ** இ∴தொத்தன்!
அளிதோ தானே பெறலருங் **குரைத்தே** - இசைநிறை
**ஏஎ** என் சொல்லுக
பல்**குரைத்** துன்பங்கள் சென்றுபடும் - அசைநிலை

***நூற்பா 272***

***ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலை***
***ஆயிரண் டாகும் இயற்கைய வென்ப.***

## 'மா' இடைச்சொல்

மா எனும் இடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசை நிலையாய் வரும்.

**(எ.கா)** புற்கை உண்க**மா** கொற்கை யோனே

***நூற்பா 273***

***மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்***

## முன்னிலை அசைச்சொற்கள்

*1.* மியா, *2.* இக, *3.* மோ, *4.* மதி, *5.* இகும், *6.* சின் எனும் ஆறு அசைச்சொற்களும் முன்னிலை இடத்திற்கு மட்டும் உரியனவாகும்.

**(எ.கா)** கேண்மியா, சென்**மியா** - மியா
(கேள், செல் எனும் முன்னிலை மொழிகளைச் சார்ந்து வந்தது)
கண்பனி ஆன்**றிக** என்றி தோழி - இக
காமம் செப்பாது கண்டது மொழி**மோ** - மோ
உரை**மதி** வாழியோ வலவ - மதி
மெல்லம் புலம்ப கண்**டிகும்** - இகும்
காப்பும் பூண்டி**சின்** கடையும் போகலை - சின்

***நூற்பா 274***

***மியா இக மோ மதி இகும் சின் என்னும்***
***ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்.***

மேற்கூறியவற்றில் இகும், சின் எனும் இரண்டும் தன்மை, படர்க்கை இடங்களிலும் பொருந்தி வரும்.

**(எ.கா)** கண்**டிகும்** அல்லமோ - இகும்
கண்ணும்படுமோ என்றி**சின்** யானே - சின் - தன்மை

புகழ்ந்திகு மல்லரோ பெரிதே - இகும்
யார.்.தறிந் திசினோரே - சின் } - படர்க்கை

***நூற்பா 275***

**அவற்றுள்**
**இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடும்**
**தகுநிலை யுடைய வென்மனார் புலவர்.**

## ‘அம்ம’ இடைச்சொல்

அம்ம எனும் இடைச்சொல், ‘நான் கூறுவதைக் கேள்’ என்று கூறும் பொருளில் வரும்.

**(எ.கா)** அம்ம வாழி தோழி.

***நூற்பா 276***

**அம்ம கேட்பிக்கும்.**

## ‘ஆங்க’ இடைச்சொல்

ஆங்க எனும் இடைச்சொல் அசைநிலையாய் வரும்.

**(எ.கா)** **ஆங்க**க் குயிலும் மயிலும் காட்டி.

***நூற்பா 277***

**ஆங்க உரையசை**

## ஒப்பில் போலி

ஒப்புமையை உணர்த்தாமல் வரும் போலும் எனும் சொல் **‘ஒப்பில் போலி’** எனப்படும். அது ஆங்க எனும் இடைச்சொல்லைப் போல உரையசையாக (அசைநிலை) வரும்.

**(எ.கா)** மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும்.

***நூற்பா 278***

**ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்.**

## அசைநிலைச் சொற்கள்

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது எனும் ஏழு சொற்களும் அசைநிலைகளாகும்.

**(எ.கா)** **யா** பன்னிருவர் மாணாக்கர் உளர் அகத்தியனார்க்கு–யா

உது**கா** - கா

அதுபிற, இதுபிற - பிற

**பிறக்கு** – அதுபிறக்கு

நோதக இருங்குயிலாளும் **அரோ** – அரோ

பிரியின் வாழாதென்**போ** தெய்ய – போ

விளிந்தன்று **மாத**வர்த் தெரிந்த நெஞ்சே – மாது

***நூற்பா 279***

***யா கா***

***பிற பிறக்கு அரோ போ மாதென வரூஉம்***

***ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.***

## பிரிவில் அசைநிலைச் சொற்கள்

ஆக, ஆகல், என்பது எனும் மூன்று இடைச்சொற்களும் அசைநிலையாய் வரும் போது தனித்து வருவதில்லை. இரட்டித்தே வரும்.

**(எ.கா)** ஒருவன் கூறுவதை ஒருவன் ஒத்துக் கொள்ளுமிடத்து, **ஆக ஆக, ஆகல் ஆகல்** என்று கூறுவான். இது போன்றே **என்பது என்பது** எனவும் வரும்.

***நூற்பா 280***

***ஆக வாக லென்ப தென்னும்***

***ஆவயின் மூன்றும் பிரிவி லசைநிலை***

## ஔ இடைச்சொல்

ஔகாரம் இரண்டு மாத்திரையுடையது. தனித்து மொழிக்கு ஈறாகாது. இது மேற்கூறிய அசைநிலைச் சொற்களைப் போல, 1. இரட்டித்து நிற்கும். 2. அளபெடையாகவும் வரும், 3. அளபெடை இன்றி தனித்தும் வரும். இவ்வாறு வரும் மூன்று இடங்களிலும் பொருள் வேறுபடும். அப்பொருள் வேறுபாடு சொல்பவனின் ஓசை வேறுபாட்டால் புலப்படும்.

**(எ.கா)** **ஔஔ** ஒருவன் தவம் செய்தவாறு-பிரிவில் அசைநிலை

**ஔஉ** ஒருவன் இரவலர்க்கு ஈதல் - அளபெடை

**ஔ** அவன் முயலுமாறு - தனித்து வருதல்.

***நூற்பா 281***

***ஈரள பிசைக்கும் இறுதியி லுயிரே***

***ஆயியல் நிலையும் காலத் தானும்***

***அளபெடை நிலையுங் காலத் தானும்***

***அளபெடை இன்றித் தான்வரும் காலையும்***
***உளவென மொழிப பொருள்வேறு படுதல்***
***குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.***

## குறிப்பால் பொருள் உணர்த்துவன

நன்றே. அன்றே, அந்தோ, அன்னோ என ஏகாரத்தோடும் ஓகாரத்தோடும் கூடி வரும் சொற்களும் அவற்றைப் போன்ற பிற இடைச்சொற்களும் கூறுவோனின் குறிப்பினால் பொருள் உணரப்படும்.

***(எ.கா)*** ஒருவன் ஒன்றைக் கூறும் போது அதற்கு உடன்படாமையை மற்றொருவன் **நன்றே நன்றே;**
**அன்றே அன்றே** என்பதன் மூலம் வெளிப்படுத்துவான

***நூற்பா 282***

***நன்றீற் றேயும் அன்றீற் றேயும்***
***அந்தீற்று ஓவும் அன்னீற்று ஓவும்***
***அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்.***

## ஈற்றசை ஏகாரம்

செய்யுளின் இறுதியில் ஈற்றசையாக வரும் ஏகாரம் பொருத்தமாகக் கூறப்படும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒரு மாத்திரையாயும் ஒலிக்கும்.

***(எ.கா)*** கடல்போல் தோன்றல காடிறந் தோரே

***நூற்பா 286***

***ஈற்றுநின் றிசைக்கும் ஏயென் இறுதி***
***கூற்றுவயின் ஓரளபு ஆகலு முரித்தே.***

## எண்ணிடைச் சொற்கள் தொகை பெறலும் பெறாமையும்

உம், என எனும் இரண்டும் எண்ணுப் பொருள் குறித்து வரும் இடைச்சொற்கள் ஆகும். இவ் எண்ணிடைச் சொற்கள் தொகை பெற்றும் பெறாமலும் வரும்.

***(எ.கா)***

நிலனும் நீரும் தீயும் வளியும் ஆகாயமும் என ஐந்தும்
நிலனை நீரென தீயென வளியென ஆகாயமென ஐந்தும்
- தொகைபெற்றன.

உயிரும் உடலும் பேணப்பட வேண்டும்

உயிரென உடலென பேணப்பட வேண்டும்

- தொகை பெறாதன.

***நூற்பா 287***

**உம்மை யெண்ணு என என்னெண்ணும்**
**தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.**

## எண்ணுப் பொருளில் வரும் 'ஏ'காரம்

எண்ணிக்கையைக் குறித்து வரும் ஏகாரம் எண்ணேகாரமாகும். அது சொல்தோறும் வராமல் இடையிடையே மட்டும் வருவதும் உண்டு. அவ்வாறு வரினும் அது எண்ணிக்கையைக் குறித்து வந்ததாகவே கொள்ளப்படும்.

***(எ.கா)*** தோற்றம் இசையே நாற்றம் சுவையே

***நூற்பா 288***

**எண்ணே கார மிடையிட்டுக் கொளினும்**
**எண்ணுக் குறித் தியலு மென்மனார் புலவர்.**

## 'எனா' 'என்றா' எண்ணுப்பொருளில் வருதல்

உம் மறைந்து நிற்கும் எனா எனும் சொல்லும், ஆகாரம் பெற்று வரும் என்றா எனும் ஆகார ஈற்றுச் சொல்லும் சொல்தோறும் நின்று எண்ணுப் பொருள் தரும்.

***(எ.கா)*** 1. நிலனெனா, நீரெனா
2. நிலனென்றா, நீரென்றா

***நூற்பா 289***

**உம்மை தொக்க எனாவென் கிளவியும்**
**ஆவீ றாகிய என்றென் கிளவியும்**
**ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன.**

## தொகை பெற்று வரும் எண்ணிடைச் சொற்கள்

எனா, என்றா என்பவற்றின் இறுதி, இடைச் சொல்லால் அன்றி பெயரால் எண்ணப்படும் செவ்வெண் இறுதி, ஏகார இறுதி ஆகியவை எண்ணுப் பொருளில் வரும் போது தொகை பெறாமல் வராது. (தொகை பெற்றே வரும்)

***(எ.கா)*** நிலன் எனா, நீர் எனா இரண்டும் - எனா
நிலன் என்றா, நீர் என்றா இரண்டும் - என்றா
நிலன் நீர் என இரண்டும் - செவ்வெண்

*நிலனே, நீரே என இரண்டும் - ஏ*

***நூற்பா 290***

***அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்***
***பெயர்க்குரி மரபிற் செவ்வெண் இறுதியும்***
***ஏயி னாகிய எண்ணின் இறுதியும்***
***யாவயின் வரினும் தொகையின் றியலா.***

## எண்ணும்மையில் உருபு

*எண்ணும்மையில் வேற்றுமை உருபுகள் மறைந்து வரும்.*

***(எ.கா)*** *யானையும் தேரும் ஆளும் எறிந்தார்.*
*இதில் யானையையும் தேரையும் ஆளையும் எறிந்தார் என இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்தது.*

***நூற்பா 291***

***உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையார்***

## உம் உந்து ஆதல்

*செய்யும் எனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சச் சொல்லில் ஈற்றில் உள்ள 'உம்' என்பது 'உந்து' எனத் திரிந்து வருவதும் உண்டு.*

***(எ.கா)*** *நீர்க்கோழிக் கூப்பெயர்க்**குந்து***
*(பெயர்க்கும் என்பது பெயர்க்குந்து ஆனது)*

***நூற்பா 292***

***உம்முந் தாகு மிடனுமா ருண்டே***

## வினையில் எண்ணிடைச் சொற்கள்

*மேற்கூறிய எண்ணிடைச் சொற்கள் பெயரோடு அன்றி வினையோடு சேர்ந்து வருவதுண்டு. அப்போதும் எண்ணுப் பொருண்மையிலிருந்து மாறுவதில்லை.*

***(எ.கா)*** *உண்டும் தின்றும் பாடியும் வந்தான் - உம்*
*உண்ணவெனத் தின்னவெனப் பாடவென வந்தான்*
*- என*
*(உண்ணுதல், தின்னுதல், பாடுதல் என்பன வினைகள்)*

***நூற்பா 293***

***வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா***

***நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே.***

## எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்

ஒரு தொடரில் ஓரிடத்தில் நிற்கும் என்று, என, ஒடு எனும் எண்ணிடைச்சொற்கள் எண்ணுகின்ற போது வேறொரு இடத்தில் சென்று பொருந்துவதும் உண்டு.

**(எ.கா)** வினைபகை என்றிரண்டும் எச்சம் - என்று
(வினை என்று பகை என்று)
கண்ணிமை நொடியென- என
(கண்ணிமையென, நொடியென)
பொருள் கருவி காலம் வினை இடனொடு - ஒடு
(பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு)

இதில் இடைச்சொற்கள் பிரிந்து முன் உள்ள சொற்களோடும் சென்று பொருந்தியது.

***நூற்பா 294***

***என்று மெனவு மொடுவுந் தோன்றி***
***ஒன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே.***

## இடைச் சொற்களுக்குப் பொருள் கொள்ளுதல்

மேற்கூறப்பட்ட இடைச்சொற்கள் இன்னின்ன பொருள்களில் வரும் என வரையறுத்துக் கூறப்பட்டன. அவை முன்னும் பின்னும் நிற்கும் பெயரோடும் வினையோடும் நோக்கி ஆராய்ந்தால் வேறு பொருள்களையும் தரும். அசைநிலையாக வருவதும், திரிந்து வருவதும் உண்டு. அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**(எ.கா)** சென்றி பெருமநிற் தகைக்குநர் யாரோ - (ஓகாரம் ஈற்றசையானது)
அதுமன் கொண்கன் தேரே - (மன் என்பது அசை நிலையாய் வந்தது)

***நூற்பா 295***

***அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென***
***மெய்பெறக் கிளந்த இயல வாயினும்***
***வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்***
***திரிந்துவேறு வரினுந் தெரிந்தனர் கொளலே.***

## புறனடை

இவ்வியலில் கூறப்பட்டவை அன்றி அவை போன்ற பிறவும் இடைச்சொற்களாக வரலாம். அவற்றையும் முற்கூறப்பட்ட இலக்கணத்தால் ஆராய்ந்து பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**(எ.கா)** பணியு**மாம்** என்றும் பெருமை - ஆம்

சொல்லென் **தெய்ய** இன்னொரு பெயர்ந்தே - தெய்ய.

# இயல் - 8

# உரியியல்

செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வருவன உரிச்சொற்கள். இவை இசை, குறிப்பு, பண்பு, எனும் பொருள் உணர்த்துவதற்குத் தாமே உரிமை உடையவை ஆனதால் உரிச்சொல் என்று பெயர்பெற்றது எனலாம். இவை எளிதில் பொருள் விளங்காதன, ஆகையால் உரிச்சொற்களுக்குப் பொருள் கூறுவதால் இவ்வியல் உரியியல் எனப்பெயர் பெற்றது. உரிச்சொற்களை **ஒரு சொல் ஒருபொருள் உணர்த்துவன, ஒரு சொல் பல பொருள் உணர்த்துவன, பலசொல் ஒரு பொருள் உணர்த்துவன** என மூன்றாகப் பகுக்கலாம்.

## உரிச்சொல்லின் பொது இலக்கணம்

உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர் போலவும் வினை போலவும் அமைந்து இரண்டும் ஆவதற்கு உரிமை உடையதாய்த் தம் பகுதிகள் திரிந்து தோன்றும். ஒரு சொல் பல பொருட்களை உணர்த்துவதாயும், பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்துவதாயும் வரும். உரிச்சொற்களின் பொருள் கொள்ளும் போது அறியாத சொல்லை அறிந்த சொல்லுடன் தொடர்புபடுத்தி பொருளை உணர்தல் வேண்டும். உரிச்சொற்கள் தமக்குரிய இயல்பில் நின்று, தாம் சார்ந்து நிற்கும் பெயரையும், வினையையும் அடிப்படையாகக் கொண்டு வேறுவேறு பொருட்களை உணர்த்தும்.

***நூற்பா 297***

**உரிச்சொற் கிளவி விரிக்கும் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**
**ஒரு சொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொற் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொல் ஆயினும் பொருள்வேறு கிளத்தல்.**

## உரிச் சொற்களின் இயல்பு

வெளிப்படையாகப் பொருள் விளங்கும் உரிச்சொற்களைக் கூற வேண்டியத் தேவையில்லை. எனவே, வெளிப்படையாய்ப் பொருள் உணர முடியாத உரிச்சொற்களுக்கே இங்குப் பொருள் கூறப்படுகின்றது.

***நூற்பா 298***

**வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா**
**வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.**

## *(299 முதல் 388 வரையுள்ள நூற்பாக்களுக்கு அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.)*

| உரிச்சொல் | பொருள் | எடுத்துக்காட்டு | நூற்பா |
|---|---|---|---|
| உறு,<br>தவ,<br>நனி | மிகுதி | உறுபுனல் தந்துலகூட்டி<br>ஈயாது வீயும் உயிர்தவப் பலவே<br>நனிவருத்தினை வாழிஎன் நெஞ்சே | ***299.*** **அவைதாம்<br>உறுதவ நனியென வரூஉம் மூன்றும்<br>மிகுதி செய்யும் பொருள என்ப.** |
| உரு,<br>புரை | உட்கு(அச்சம்)<br>உயர்வு | உருகெழு கடவுள்<br>புரையோர் கேண்மை | ***300.*** **உருவுட் காகும் புரையுயர்வு ஆகும்** |
| குரு,<br>கெழு | நிறம் | குருமணித் தாலி<br>செங்கேழ் மென்கொடி | ***301.*** **குருவும் கெழுவும் நிறனா கும்மே.** |
| செல்லல்,<br>இன்னல் | இன்னாமை<br>(துன்பம்) | மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லம்<br>வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கம் | ***302.*** **செல்லல் இன்னல் இன்னா மையே.** |
| மல்லல் | வளம் | மல்லல் மால்வரை | ***303.*** **மல்லல் வளனே** |
| ஏ | பெற்று<br>(பெருக்கம்) | ஏகல் அடுக்கம் | ***304.*** **ஏ பெற்றாகும்** |
| உகப்பு<br>உவப்பு | உயர்தல்<br>உவகை<br>(மகிழ்ச்சி) | விசும்புகந்து ஆடாது<br>உவக்குநனாயினும் ஊடினளாயினும் | ***305.*** **உகப்பே உயர்தல் உவப்பே உவகை** |
| பயப்பு | பயன் | ஆன்பயமுந் தூக்கினென் | ***306.*** **பயப்பே பயனாம்** |
| பசப்பு | நிறம் (பசலை) | பசப்பித்துச்சென்றார் | ***307.*** **பசப்பு நிற னாகும்.** |
| இயைபு | புணர்ச்சி | இயைந்தொழுகும் | ***308.*** **இயைபே புணர்ச்சி** |
| இசைப்பு | இசை | இசைந்தொழுகும் | ***309.*** **இசைப்பு இசையாகும்** |
| அலமரல்,<br>தெருமரல் | சுழற்சி | அலமரல் ஆயம்<br>தெருமரலுள்ளம் | ***310.*** **அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி** |
| மழ,<br>குழ | இளமை | மழக்களிறு,<br>குழக்கன்று | ***311.*** **மழவும் குழவும் இளமைப் பொருள** |
| சீர்த்தி | மிகுபுகழ்<br>(பெரும்புகழ்) | வயக்கஞ்சால் சீர்த்தி | ***312.*** **சீர்த்தி மிகுபுகழ்** |
| மாலை | இயல்பு | இரவரன் மாலை | ***313.*** **மாலை இயல்பே.** |

| | | | |
|---|---|---|---|
| கூர்ப்பு,<br>கழிவு | உள்ளது<br>சிறத்தல் | உப்புக் கூர்நத்து,<br>உப்புக் கழிந்தது | ***314.* கூர்ப்பும் கழியும் உள்ளது சிறக்கும்** |
| கதழ்வு,<br>துனைவு | விரைவு | கதழ்பரி நெடுந்தேர்,<br>துனைபறை நிவக்கும் புள்ளிமான் | ***315.* கதழ்வும் துனைவும் விரைவின் பொருள** |
| அதிர்வு,<br>விதிர்ப்பு | நடுக்கம் | அதிர்கண் முரசம்,<br>விதிர்ப்புற்றுக் கண்ணிமையார் | ***316.* அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்** |
| வார்தல்,<br>போகல்,<br>ஒழுகல் | நேர்பு<br>(வரிசை முறை)<br>நெடுமை (நீட்சி) | **வார்தல்** : வார்ந்திலங்கும் வைஎயிற்று (நேர்பு)<br>வார்க்கயிற் றொழுகை(நெடுமை)<br>**போகல்** : போகுகொடி மருங்குல் (நேர்பு)<br>விடத்தேரொடு காருடை போகி (நெடுமை)<br>**ஒழுகல்** : ஒழுகுகொடி மருங்குல் (நேர்பு)<br>மால்வரை ஒழுகிய வாழை (நெடுமை) | ***317.* வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்வும் நெடுமையும் செய்யும் பொருள.** |
| தீர்தல்,<br>தீர்த்தல் | விடுதல் | ஊரின் தீர்ந்தான்,<br>தீங்கு தீர்ந்தான் | ***318.* தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும்.** |
| கெடவரல்,<br>பண்ணை | விளையாட்டு | கெடவரல் ஆயமொடு,<br>பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் | ***319.* கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு** |
| தட,<br>கய,<br>நளி | பெருமை | தடந்தோள்,<br>கயவெள்ளருவி,<br>நளிமலை நாடன் | ***320.* தடவும் கயவும் நளியும் பெருமை.** |
| தட | கோட்டம்<br>(வளைவு) | தடமருப்பு எருமை | ***321.* அவற்றுள்<br>தடவென் கிளவி கோட்டமும் செய்யும்.** |
| கய | மென்மை | கயந்தலை மடப்பிடி | ***322.* கயவென் கிளவி மென்மையும் ஆகும்** |

| | | | |
|---|---|---|---|
| நளி | செறிவு (நெருக்கம்) | நளியிருள் | ***323.* நளியென் கிளவி செறிவும் ஆகும்.** |
| பழுது | பயம் இல்லாமை | பழுதே வந்தார் | ***324.* பழுது பயன் இன்றே** |
| சாயல் | மென்மை | சாயல் மார்பு | ***325.* சாயல் மென்மை** |
| முழுது | எஞ்சாமை (முழுமை) | மண்முழுது ஆண்ட | ***326.* முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே** |
| வம்பு | நிலையின்மை | வம்ப நாரை | ***327.* வம்பு நிலை இன்மை** |
| மாதர் | காதல் | மாதர் நோக்கு | ***328.* மாதர் காதல்** |
| நம்பு,<br>மே | நசை (விருப்பம்) | நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி,<br>பேரிசை நவிர மேஎ உறையும் | ***329.* நம்பும் மேவும் நசையா கும்மே.** |
| ஓய்தல்,<br>ஆய்தல்<br>நிழத்தல்,<br>சாஅய் | உள்ளதன் நுணுக்கம் | ஓய்கலை ஒருத்தல்<br>கையு மெய்யுமாய்ந்திருந்தார்<br>நிழத்த யானை மேய்புலம் படர<br>கயலறலெதிரக் கடும்புனற் சாஅய் | ***330.* ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்<br>ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்** |
| புலம்பு | தனிமை | புலம்பு விட்டிருந்தார் | ***331.* புலம்பே தனிமை.** |
| துவன்று | நிறைவு | ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் | ***332.* துவன்று நிறைவாகும்** |
| முரஞ்சல் | முதிர்வு (முதிர்ச்சி) | சூல் முரஞ் செழிலி | ***333.* முரஞ்சல் முதிர்வே.** |
| வெம்மை | வேண்டல் (விரும்புதல்) | நீ வெம்மையள் | ***334.* வெம்மை வேண்டல்** |
| பொற்பு | பொலிவு | அணிகலம் பொற்ப | ***335.* பொற்பே பொலிவு** |
| வறிது | சிறிது | வறிது வடக்கிறைஞ்சிய | ***336.* வறிது சிறிதாகும்.** |
| ஏற்றம் | நினைவு, துணிவு | ஏற்றத்திருந்தார் (நினைவு),<br>யான் ஏற்றம் இல்லாதேன் (துணிவு) | ***337.* ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்.** |

| | | | |
|---|---|---|---|
| பிணை, பேண் | பெட்பு (பாதுகாத்தல்) | அரும்பிணை அகற்றி வேட்ட ஞாட்பினும், பேணினே னல்லனோ மகிழ்ந | **338. பிணையும் பேணும் பெட்பின் பொருள** |
| பணை | பிழைத்தல் (தவறுதல்) பெருப்பு (பருத்தல்) | பணைத்துப் போய் வீழ்ந்தது, பணைத்தோள் | **339. பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்.** |
| படர் | உள்ளல் (நினைத்தல்) செலவு (செல்லுதல்) | படர்மலி வெற்பர் ஆறு படர்ந்தார் | **340. படரே உள்ளல் செலவும் ஆகும்.** |
| பையுள், சிறுமை | நோய் | பையுள் மாலை சிறுமை உறுபவோ செய்பறி | **341. பையுளும் சிறுமையும் நோயின் பொருள** |
| எய்யாமை | அறியாமை | எய்யா மையலை | **342. எய்யா மையே அறியா மையே** |
| நன்று | பெரிது | நன்றும் அரிதுற்றனை யார் பெரும | **343. நன்று பெரிதாகும்.** |
| தா | வலிமை, வருத்தம் | தாவில் நன் பொன் (வலிமை) கருங்கண் தாக்கலை (வருத்தம்) | **344. தாவே வலியும் வருத்தமும் ஆகும்.** |
| தெவு | கொள்ளுதல் | நீர்த்தெவு நிரைத் தொழுவர் | **345. தெவுக் கொளல் பொருட்டே.** |
| தெவ்வு | பகை | தெவ்வு புலம் | **346. தெவ்வுப் பகையாகும்.** |
| விறப்பு, உறப்பு, வெறுப்பு | செறிவு | விறந்த காப்போடு, உறந்த இஞ்சி உயர்நிலைமாடம், வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன் | **347. விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே** |
| விறப்பு | வெருவுதல் (அஞ்சுதல்) | அவலெறி உலக்கைப் பாடுவிறந்து அயல | **348. அவற்றுள் விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.** |
| கம்பலை, சும்மை கலி, அழுங்கல் | அரவம் (ஓசை) | கம்பலை மூதூர், ஊர் சும்மையுடைத்து, கலிகெழு மூதூர், அழுங்கல் மூதூர் | **349. கம்பலை சும்மை கலியே அழுங்கல் என்றிவை நான்கும் அரவப் பொருள்** |

| | | | |
|---|---|---|---|
| அழுங்கல் | இரக்கம், கேடு | மகனை இழந்து அழுங்கினார் (இரக்கம்) | ***350. அவற்றுள் அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்*** |
| கழும் | மயக்கம் (கலந்திருத்தல்) | கழுமிய ஞாட்பு | ***351. கழுமென் கிளவி மயக்கம் செய்யும்*** |
| செழுமை | வளன் (வளமை), கொழுப்பு (கொழுமை) | செழுஞ்செந்நெல், கொழுந்தடி தின்ற செந்நாய் | ***352. செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்.*** |
| விழுமம் | சீர்மை, சிறப்பு இடும்பை – (துன்பம்) | விழுமியர் சீர்மை விழுமமுற்றிருந்தார் (சிறப்பு) நின்னுறு விழுமம் களைந்தோள் (இடும்பை) | ***353.விழுமஞ் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்*** |
| கருவி | தொகுதி (கூட்டம்) | கருவி வானம் | ***354. கருவி தொகுதி*** |
| கமம் | நிறைவு | கமம்சூழ் மாமழை | ***355. கமம் நிறைந் தியலும்.*** |
| அரி | ஐம்மை (மென்மை – அழகுடைமை) | அரிமயிர்த் திரள்முன்கை | ***356. அரியே ஐம்மை.*** |
| கவவு | அகத்திடுதல் (சேர்தல்) | கொடும்பூண் கவைஇய கோல மார்பு | ***357. கவவு அகத் திடுமே.*** |
| துவைத்தல், சிலைத்தல் இயம்பல், இரங்கல் | இசைத்தல் | வரிவளை துவைப்ப, கலையின் இரலை சிலைப்ப, இயமரம் இயம்பும், முரசு இரங்கு முற்றம். | ***358. துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்.*** |
| இரங்கல் | கழிந்ததற்கு வருந்துதல் | செய்து இரங்கா வினை | ***359. அவற்றுள் இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்.*** |
| இலம்பாடு, ஒற்கம் | வறுமை | இலம்படு புலவர், ஊரை ஒற்கம் தீர்க்கும் | ***360. இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை.*** |

| | | | |
|---|---|---|---|
| ஞெமிர்தல்,<br>பாய்தல் | பரத்தல்<br>(பரந்துபடுதல்) | பாய்புனல் | **361. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள்** |
| கவர்வு | விருப்பம் | கவர்நடைப்புரவி | **362. கவர்வு விருப்பாகும்.** |
| சேர் | திரட்சி<br>(திரண்டிருத்தல்) | சேர்ந்து செறி குறங்கு | **363. சேரே திரட்சி.** |
| வியல் | அகலம்<br>(அகன்றிருத்தல்) | வியல் உலகம் | **364. வியலென் கிளவி அகலப் பொருட்டே.** |
| பே,<br>நாம்,<br>உரும் | அச்சம் | பேஎ முதிர்கடவுள்,<br>நாம நல்லார்,<br>உருமில் சுற்றம் | **365. பேம்நாம் உருமென வரூஉம் கிளவி ஆமுறை மூன்றும் அச்சப் பொருள** |
| வய | வலிமை | வாள்வரி வேங்கை வயப்புலி | **366. வயவலி யாகும்.** |
| வாள் | ஒளி | வாள்முகம் | **367. வாளொளி யாகும்** |
| துயவு | அறிவு<br>வேறுபாடு | அறிவு துயவுற்றார் | **368. துயவு என் கிளவி அறிவின் திரிபே.** |
| உயர் | உயர்வு | பருந்திருந்து உயாவிளிபயிற்றும் | **369. உயாவே உயங்கல்** |
| உசா | சூழ்ச்சி<br>(ஆராய்தல்) | உசாத்துணை | **370. உசாவே சூழ்ச்சி** |
| வயா | வேட்கைப்<br>பெருக்கம்<br>(மிகுந்த<br>விருப்பம்) | கூழ்கண்டு வயாவினார் | **371. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்** |
| கறுப்பு,<br>சிவப்பு | வெகுளி<br>(சினம்) | கறுத்து வந்தார்,<br>சிவந்து நோக்கினார் | **372. கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள.** |
| கறுப்பு,<br>சிவப்பு | நிற வேறுபாடு | உடம்பு கறுத்தது,<br>கண் சிவந்தன | **373. நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப.** |
| நொசிவு,<br>நுழைவு<br>நுணங்கு | நுண்மை | நொசி மருங்குல்,<br>நுழை மருங்குல்<br>நுணங்கு மருங்குல் | **374. நொசியும் நுழையும் நுணங்கும் நுண்மை** |

| | | | |
|---|---|---|---|
| புனிறு | ஈன்றணிமை (அண்மையில் ஈன்றது) | புனிற்று ஆபாய்ந் தெனக் கலங்கி | **375. புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே** |
| நனவு | களன் (ஆடுகளம்), அகலம் | நனவுப் புகு விறலியிற் தோன்றும் நாடன், நனந்தலை உலகு | **376. நனவே களனும் அகலமும் செய்யும்** |
| மத | மடன்(இளமை), வலி(வலிமை) மிகுதி (ஊக்கம்), வனப்பு(அழகு) | மதவுநடை நல்லாள், மதகளிறு, மதவிடை, மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே | **377. மதவே மடனும் வலியும் ஆகும்.** **378. மிகுதியும் வனப்பு மாகலு முரித்தே.** |
| யாணர் | புதிது (புதுவருவாய்) | மீனொடு பெயரும் யாணர் ஊர | **379. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி** |
| அமர்தல் | மேவல் (விரும்புதல்) | கூழமர்ந்துண்டான் | **380. அமர்தல் மேவல்** |
| யாண் | கவின் (அழகு) | யாணது பசலை | **381. யாணுக் கவினாம்** |
| பரவு, பழிச்சு | வழுத்துதல் (வணங்குதல்) | கடவுள் பரவினார், கைதொழூஉப்பழிச்சி | **382. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள** |
| கடி | வரைவு (நீக்குதல்) கூர்மை, காப்பு(காவல்), புதுமை, விரைவு, விளக்கம்(ஒளி), மிகுதி, சிறப்பு, அச்சம், | ஊர் கடிந்தார்(வரைவு), கடிநுனைப்பகழி(கூர்மை), கடிகா (காவல்), கடிமலர் (புதுமை), கடிது வந்தார்(விரைவு), கடும்பகல்(விளக்கம்), கடுங்கால் ஒற்றலின் (மிகுதி), கடுநட்பு(சிறப்பு), கடுங்கண் யானை (அச்சம்) கடுஞ்சூள் தருகுவன் (முன்தேற்றம்) | **383.கடியென் கிளவி வரைவே கூர்மை காப்பே புதுமை விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே அச்ச முன்தேற் றாயீ ரைந்தும் மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.** |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் (முன்நின்று தெரிவித்தல்), ஐயம், கரிப்பு(காரம்) | கடுத்தனளல்லளோஅன்னை(ஐயம்), கடிமிளகு தின்ற கல்லாமந்தி(காரம்) | ***384. ஐயமுங் கரிப்பும் ஆகலும் உரித்தே.*** |
| ஐ | வியப்பு | ஐதே காமம் யானே | ***385. ஐ வியப் பாகும்.*** |
| முனைவு | முனிவு (வெறுப்பு) | சேற்று நிலை முனைஇய | ***386. முனைவு முனி வாகும்.*** |
| வை | கூர்மை | வைஇலை நெடுவேல் | ***387. வையே கூர்மை*** |
| எறுழ் | வலிமை | வாருடை எறுழ்த்தோள் | ***388. எறுழ்வலி யாகும்.*** |

## உரிச்சொல் பொருள் உணர்த்தும் முறை

'இச்சொல்லுக்கு இப்பொருள்' என மேற்கூறப்பட்ட உரிச்சொற்கள் எல்லாவற்றையும், அவற்றின் முன்னும் பின்னும் வருகின்ற சொற்களை ஆராய்ந்து இடத்திற்கேற்ப பொருத்தமான பொருள் கொள்ள வேண்டும். அப்போதுதான் அச்சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வந்த முறைப்படி தத்தமக்குரிய பொருள் விளங்கத் தோன்றும்.

***நூற்பா 389***

**மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்**
**முன்னும் பின்னும் வருபவை நாடி**
**ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்**
**தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே.**

## உரிச் சொற்கள் பிற பொருள்களையும் உணர்த்தல்

உரிச்சொற்கள் மேற்கூறப்பட்ட பொருள்களே அன்றி வேறு பொருள் தருவதும் உண்டு. அவற்றையும் மேற்கூறப்பட்டவற்றுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

***நூற்பா 390***

**கூறிய கிளவிப் பொருள் நிலை அல்ல**
**வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே.**

ஓர் உரிச்சொல்லுக்கு இன்ன பொருள் என்று கூறப்பட்டது. பொருளாகக் கூறப்பட்ட சொல்லுக்கு மேலும் பொருள் அறிய முயன்றால் அது எல்லையற்று நீளும் (பொருளுக்குப் பொருள் காண்பது கடினம் மட்டுமல்ல: அவசியமற்றதுமாகும்)

***நூற்பா 391***

**பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே.**

உரிச்சொல்லுக்குப் பொருள் கூற முயல்வோர், கேட்பவனுக்குப் பொருள் புரியும் படி கூற வேண்டும். அவ்வாறாயின் பொருள் மாறுபடாமல் விளங்கும்.

***நூற்பா 392***

**பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்**

உரிச்சொல்லுக்குப் பொருள் உணர்வது உணர்பவரின் ஆற்றலைப் (அறிவு) பொறுத்தது ஆகும்.

***நூற்பா 393***

**உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே**

உரிச்சொற்களுக்குக் கூறப்பட்ட பொருள்கள் மரபுவழிப்பட்டதாகும். அல்லாமல் இச்சொல்லுக்கு இதுதான் பொருள் என்பதற்கு வேறு காரணம் ஏதுவுமில்லை.

***நூற்பா 394***

**மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா**

எழுத்துக்கள் பிரிந்து நின்று வேறுபட்ட பொருள் உணர்த்தும் நிலை உரிச்சொற்களுக்குப் பொருந்தாது.

***நூற்பா 395***

***எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல்பு இன்றே.***

## புறனடை

மேலே பொருள் கூறப்பட்ட உரிச்சொற்களும் அவை போன்ற பிற சொற்களுமாக இவ்வுலகில் ஏராளமான உரிச்சொற்கள் பரந்து காணப்படுகின்றன. அவற்றை இசை, குறிப்பு, பண்பு என்பவற்றை அடிப்படையாக வைத்துப் பகுத்துப் பார்த்து இத்தனை என்று கூற இயலாது. முன்னர்க் கூறப்பட்ட இலக்கணங்களை மனதில் கொண்டு ஆராய்ந்து பார்த்துப் பொருள் உணர்தல் வேண்டும் என்பர் புலவர்.

***நூற்பா 396***

***அன்ன பிறவுங் கிளந்த வல்ல***
***பன்முறை யானும் பரந்தன வரூஉம் உரிச்சொல்***
***உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட***
***இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்***
***வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து***
***ஓம்படை யாணையிற் கிளந்தவற் றியலான்***
***பாங்குற உணர்தல் என்மனார் புலவர்.***

# இயல் - 9

# எச்சவியல்

## பெயர்க்காரணம்

கிளவியாக்கம் முதல் உரியியல் ஈறாக உள்ள இயல்களில் கூறாமல் எஞ்சி நின்ற, சொல்லின் இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவதால் எச்சவியல் எனப்பெயர் பெற்றது. பத்து வகை எச்சம் பற்றிக் கூறுவதால் எச்சவியல் எனப்பட்டது என்பர் சிலர். ஒரு தொகுதிக்குத் தலைமைப் பற்றியோ, பெரும்பான்மைப் பற்றியோ பெயரிடுதல் மரபு. இவ்வியலில் எச்சம் தலைமையாகவும் இல்லை. மிகுந்த எண்ணிக்கையிலும் இல்லை. எனவே எச்சங்களைக் கூறுவதால் எச்சவியல் என்பது பொருந்தாது என்பார் சேனாவரையர். செய்யுளுக்குரிய சொல், அவற்றின் இலக்கணம், செய்யுளில் ஏற்படும் விகாரம், பொருள்கோள் போன்றவை இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

## செய்யுளுக்குரிய சொற்கள் (4)

*1. இயற்சொல், 2. திரிசொல், 3. திசைச்சொல், 4. வடசொல் எனச் சொற்கள் நான்கு வகைப்படும். இவை செய்யுள் இயற்றுவதற்கு உரியவையாகும்.*

***நூற்பா 397***

**இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று**
**அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.**

## இயற்சொல்

இயற்சொல் செந்தமிழ் பேசும் மக்களின் (செந்தமிழ் நிலத்து) இயல்பான வழக்காகும். இவை எவ்வித தடுமாற்றமும் இன்றித் தெளிவாகப் பொருள் விளங்கும் இயல்பினை உடையன ஆகும்.

**(எ.கா)** நிலம், நீர், தீ, சோறு.
(செந்தமிழ் நிலம் என்பது, வையையாற்றின் வடக்கு மருதயாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு)

***நூற்பா 398***

**அவற்றுள்**
**இயற்சொற்றாமே**
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
**தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே**

## திரிசொல்

ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள், பல பொருளைக் குறித்து வரும் ஒரு சொல் எனத் திரிசொல் இரண்டு வகைப்படும்.

**(எ.கா)** 1. ஒரு பொருள் குறித்த பலசொல்
வெற்பு, விலங்கல், விண்டு, ஓங்கல் - மலை.
2. பலபொருள் குறித்த ஒரு சொல்
எகினம் - அன்னப்பறவை, கவிரிமான், புளியமரம், நாய்

**நூற்பா 399**

**ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்**
**இருபாற் றென்ப திரிசொற் கிளவி**

## திசைச்சொல்

செந்தமிழ் வழங்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த நாடுகள் (பகுதிகள்) பன்னிரண்டு. அங்கு வாழும் மக்களுக்கு மட்டுமே பொருள் விளங்குமாறு (இயற்சொல் போல எல்லோருக்கும் பொதுவாக அமையாமல்) வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள் ஆகும். அந்தந்தப் பகுதிகளில் வழங்கப்படும் சொற்கள் அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு மட்டுமே பொருள் விளங்கும்.

**(எ.கா)** தென்பாண்டி நாட்டார் பசு, எருமை என்பவற்றைப் பெற்றம் என்பது.

**நூற்பா 400**

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி**

(பன்னிரு நிலம்: 1. பொங்கர் நாடு. 2. ஒளி நாடு, 3. தென்பாண்டி நாடு, 4. குட்ட நாடு, 5. குட நாடு, 6. பன்றி நாடு, 7. கற்கா நாடு, 8. சீத நாடு, 9. பூழி நாடு, 10. மலை நாடு. 11, அருவா நாடு, 12. அருவா வடதலை நாடு என்பன).

## வடசொல்

வடசொல் என்பது வடமொழிக்குரிய சிறப்பெழுத்துக்களால் அமையாமல், வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாக வரும் எழுத்துக்களால் ஆகி தமிழில் வழங்கப்படும் சொல் ஆகும்.

**(எ.கா)** மேரு, குங்குமம், வாரி.

**நூற்பா 401**

**வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.**

வடமொழிக்குரிய சிறப்பெழுத்துகளால் அமைந்த வடசொற்கள் சிதைந்து வந்து தமிழில் வழங்கப்படுவதும் உண்டு. அவற்றுள் பொருத்தமானவற்றை ஏற்றுக் கொள்வர்.

**நூற்பா 402**

**சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்**

## செய்யுள் விகாரம்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் நான்கு வகை சொற்களாலும் செய்யுள் இயற்றப்படும். அப்போது செய்யுளின் இன்பத்திற்காக, 1. வலித்தல் (மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கல்) 2. மெலித்தல் (வல்லெழுத்தை மெல்லெழுத்தாக்கல்) 3. விரித்தல் (தொகையாக வரவேண்டியவற்றை விரித்துக் கூறுதல்) 4. தொகுத்தல் (விரித்துக் கூற வேண்டியவற்றைத் தொகையாகக் கூறுதல்) 5. நீட்டல் (குறில் எழுத்தை நெடிலெழுத்தாக்கல்) 6. குறுக்கல் (நெடில் எழுத்தைக் குறிலெழுத்தாக்கல்) எனும் ஆறு மாற்றங்கள் செய்யப்படும். இது விகாரம் (இயல்பாக வரவேண்டிய நிலையிலிருந்து மாறி வருதல்) எனப்படும்.

**(எ.கா)** *1.* **வலித்தல்** - குறுக்கை இரும்புலி.
(குறுங்கை என்பது குறுக்கை என வல்லினம் ஆனது)

2. **மெலித்தல்** - சுடுமண்பாவை
(சுடுமட்பாவை என்பது சுடுமண்பாவை என மெல்லினம் ஆனது).

3. **விரித்தல்** - தண்ணந்துறைவன்
(தண்துறைவன் என்பது தண்ணந்துறைவன் என விரிந்து வந்தது).

4. **தொகுத்தல்** - மழவரோட்டிய
(மழவரை ஓட்டிய என்பது மழவரோட்டிய எனத் தொக்கு வந்தது).

5. **நீட்டல்** - பாசிலை
(பச்சிலை என்பது பாசிலை என நீண்டது.)

6. **குறுக்கல்** - உண்டருந்து

(உண்டார்ந்து என்பது உண்டருந்து எனக் குறுகியது.)

***நூற்பா 403***

***அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை***
***வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்***
***விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்***
***நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்***
***நாட்டல் வலிய என்மனார் புலவர்.***

## பொருள்கோள்

செய்யுளில் அமைந்த சொற்களைப் பொருளுக்கு ஏற்ப மாற்றியமைத்துப் பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர்.

இது 1. நிரல்நிறை 2. சுண்ணம் 3. அடிமறி 4. மொழிமாற்று என நான்கு வகைப்படும்.

***நூற்பா 404***

***நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று***
***அவைநான் கென்ப மொழிபுண ரியல்பே.***

## *1. நிரல்நிறைப் பொருள்கோள்*

சொற்களை (பெயர், வினை) ஒரு வரிசையாகவும் அவை கொள்ளும் பொருள்களை மற்றொரு வரிசையாகவும் நிறுத்திப் பொருள் கொள்ளும் முறை நிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும். வரிசையாக நிறுத்திப் (நிரல்பட நிறுத்தி) பொருள் கொள்வதால் நிரல்நிறை.

***(எ.கா)*** கொடி குவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி.

கொடிபோன்ற இடை(நுசுப்பு), குவளை போன்ற கண், கொட்டை போன்ற மேனி. இதில் சொற்கள் முன் வரிசையிலும் அவை கொள்ளும் பொருள்கள் பின் வரிசையிலும் கூறப்பட்டுள்ளன.

***நூற்பா 405***

***அவற்றுள்***
***நிரனிறை தானே***
***வினையிலும் பெயரினும் நினையத் தோன்றிச்***
***சொல்லேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.***

## 2. சுண்ணப் பொருள்கோள்

இரண்டு அடிகளில் இயல்பாக அமைந்த எட்டுச் சீர்களையும், தனித்தனியே பொருளுக்கு ஏற்ப (முன்னும் பின்னும்) மாற்றியமைத்துப் பொருள் கொள்வது சுண்ணப் பொருள்கோள் எனப்படும்.

**(எ.கா)** "சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை"

இதில் சிதறிக் கிடக்கும் சொற்களை, சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு(முயலுக்கு) நீத்து என மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

***நூற்பா 406***

***சுண்ணந் தானே***
***பட்டாங் கமைந்த ஈரடி யெண்சீர்***
***ஒட்டுவழி யறிந்து துணித்தன ரியற்றல்.***

## 3. அடிமறி பொருள்கோள்

செய்யுளில் சீர்கள் நின்ற நிலையில் நிற்க, அடிகளை முன்னும் பின்னும் மாற்றி அமைத்துப் பொருள் கொள்வது அடிமறி பொருள்கோள் எனப்படும்.

**(எ.கா)** மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பணி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே.

இப்பாடலில் எந்த வரிசையில் மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருள் மாறுவதில்லை.

***நூற்பா 407***

***அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து***
***சீர்நிலை திரியாது தடுமாறும்மே***

அடிமறி பொருள்கோளின் போது, செய்யுளின் இறுதி அடியின் இறுதிச் சீர் எருத்தடியில் (இரண்டாமடியில்) சென்று திரிந்து பொருள் தருவதும் உண்டு. அதுவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

***நூற்பா 408***

***பொருள்தெரி மருங்கின்***

***ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்***

***தோற்றமும் வரையார் அடிமறி யான***

## *4. மொழிமாற்றுப் பொருள்கோள்*

(சுண்ணம் போல அடிகளுக்குள்ளே மட்டும் பொருள் மாறாமல்) செய்யுளில் முன்னும் பின்னுமாக மாறி நிற்கும் சொற்களைப் பொருளுக்குப் பொருந்தும்படி தேவையான இடத்தில் மாற்றி அமைத்துப் பொருள் கொள்வது மொழி மாற்றுப் பொருள்கோள் எனப்படும்.

**(எ.கா)** ஆரியமன்னர் பறையின் எழுந் தியம்பும்
பாரி பறம்பின்மேல் தண்ணுமை – காரி
விறன் முள்ளூர் வேங்கைவீ தான்நாணும் தோளான்
நிறனுள்ளூர் உள்ளது அலர்.

இதனைப் பொருளுக்கு ஏற்ப மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

***நூற்பா 409***

***மொழிமாற் றியற்கை***

***சொன்னிலை மாற்றிப் பொருளெதிர் இயைய***

***முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்.***

# தொகைச் சொற்கள்

## *1. பிரிக்கப்படாதவை.*

*த, ந, நு, எ எனும் எழுத்துக்களை முதலாக உடைய உறவுப் பெயர்களைப் பகுதி, விகுதி, எனப் பிரித்துப் பொருள்கொள்ள இயலாது.*

*த – தமன், தமள், தமர், தம்மான், தம்மாள், தம்மார்.*

*ந – நமன், நமள், நமர், நம்மான், நம்மாள், நம்மார்.*

*நு – நுமன், நுமள், நுமர், நும்மான், நும்மாள், நும்மார்.*

*எ – எமன், எமள், எமர், எம்மான், எம்மாள், எம்மார்.*

***நூற்பா 410***

***த ந நு எ எனும் அவைமு தலாகிய***
***கிளை நுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.***

## *2. ஒரு சொல் அடுக்கி வருதல்.*

*1.இசைநிறை, 2.அசைநிலை, 3.பொருளொடு பொருந்தி வருதல் எனும் மூன்று வகைகளிலும் ஒரு சொல் ஒன்றுக்கு மேல் அடுக்கி வரும். (இது அடுக்குத்தொடர் எனவும் படும்).*

**(எ.கா)** *இசைநிறை – ஏ ஏ ஏ ஏ அம்பல் மொழிந்தனர்.*
*அசைநிலை – ஒக்கும் ஒக்கும், மற்றோ மற்றோ.*
*பொருளொடு புணர்தல் - பாம்பு பாம்பு, தீத்தீ.*

***நூற்பா 411***

***இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று***
***அவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.***

# தொகை மொழிகள்

*1. வேற்றுமைத் தொகை, 2. உவமைத் தொகை, 3. வினைத்தொகை, 4. பண்புத் தொகை, 5. உம்மைத் தொகை, 6. அன்மொழித் தொகை எனத் தொகை மொழி ஆறு வகைப்படும்.*

***நூற்பா 412***

***வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே***
***வினையின் தொகையே பண்பின் தொகையே***
***உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று***
***அவ்வா றென்ப தொகைமொழி நிலையே.***

## *1.* வேற்றுமைத் தொகை

சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகள் மறைந்து நின்று, வேற்றுமைத் தொடரைப் போல வேற்றுமைப் பொருளை உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும். (வேற்றுமைத் தொடர் - வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்பது. வேற்றுமைத் தொகை – வேற்றுமை உருபு மறைந்து நிற்பது)

**(எ.கா)** ஐ - நிலங்கடந்தான் (வேற்றுமைத் தொகை)
நிலத்தைக் கடந்தான் (வேற்றுமைத்தொடர்)
கு - கரும்பு வேலி (தொகை)
கரும்புக்கு வேலி (தொடர்)
அது - சாத்தன் புத்தகம் (தொகை)
சாத்தனது புத்தகம் (தொடர்)

***நூற்பா 413***

***அவற்றுள்***
**வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல.**

## *2.* உவமைத் தொகை

உவம உருபுகள் மறைந்து வருவது உவமைத் தொகை.

**(எ.கா)** புலிப்பாய்ச்சல் (தொகை)
புலிபோன்ற பாய்ச்சல் (தொடர்)
பொன்மேனி (தொகை)
பொன்போன்ற மேனி (தொடர்)

***நூற்பா 414***

**உவமத் தொகையே உவம இயல.**

## *3.* வினைத் தொகை

காலத்தைக் காட்டும் சொற்கள் மறைந்து வருவது வினைத்தொகை. வினைத்தொகை மூன்று காலத்திற்கும் (நிகழ்வு, எதிர்வு, இறப்பு) பொதுவாய் நிற்கும்.

**(எ.கா)**

கொல்யானை → கொன்ற யானை - இறந்த காலம்
கொல்யானை → கொல்கின்ற யானை - நிகழ் காலம்
கொல்யானை → கொல்லும் யானை – எதிர் காலம்.

சுடு சோறு → சுட்ட சோறு
→ சுடுகின்ற சோறு
→ சுடும் சோறு.

***நூற்பா 415***

***வினையின் தொகுதி காலத் தியலும்***

## *4. பண்புத் தொகை*

*நிறம், வடிவம், அளவு, சுவை எனும் பண்புகளையும் இவை போன்ற பிற பண்புகளையும் உணர்த்தும் சொற்கள் மறைந்து வருவது பண்புத் தொகை ஆகும்.*

**(எ.கா)** கருங்குதிரை - கரிய குதிரை (நிறம்)

வட்டப் பலகை - வட்டமாகிய பலகை (வடிவம்)

நெடுங்கோல் - நெடிய கோல் (அளவு)

தீங்கரும்பு - தீவிய (இனிய) கரும்பு (சுவை)

***நூற்பா 416***

***வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று***
***அன்ன பிறவும் அதன் குணம் நுதலி***
***இன்ன திதுவென வரூஉ மியற்கை***
***என்ன கிளவியும் பண்பின் தொகையே.***

## *5. உம்மைத் தொகை*

*1. இருபெயர் (இருபெயர் சேர்ந்து வருவது) 2. பலபெயர் (பல பெயர்ச் சொற்கள் சேர்ந்து வருவது) 3. அளவுப் பெயர். 4. எண்ணியற் பெயர் (உயர்திணையில் வரும்) 5. நிறைப் பெயர். 6. எண்ணின் பெயர் (அஃறிணையில் வருவது) எனும் அறுவகைப் பெயர்களிலும் உம்மைத் தொகை பொருந்தி வரும். (எண்ணிடைச் சொல்லாகிய 'உம்' சொற்களின் இடையிலும் ஈற்றிலும் மறைந்து நிற்பது உம்மைத் தொகை)*

**(எ.கா)**

*1. இருபெயர் உம்மைத் தொகை -* **உவாப் பதினான்கு -** உவாவும் பதினான்கும்.

*2. பலபெயர் உம்மைத் தொகை-* ***சேர சோழ பாண்டியர்*** *-* சேரரும் சோழரும் பாண்டியரும்

*3. அளவுப்பெயர் உம்மைத்தொகை -* **தூணிப்பதக்கு -** தூணியும் பதக்கும்.

*4. எண்ணியற்பெயர் உம்மைத்தொகை -* **பதினைவர்** - பதின்மரும் ஐவரும்

*5. நிறைப்பெயர் உம்மைத்தொகை -* **தொடியரை -** தொடியும் அரையும்

6. எண்ணுப்பெயர் உம்மைத்தொகை- **பதினொன்று** - பத்தும் ஒன்றும்.

***நூற்பா 417***

**இருபெயர் பலபெயர் அளவின் பெயரே**
**எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**
**எண்ணின் பெயரொடு அவ்வறு கிளவியும்**
**கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே.**

## 6. அன்மொழித் தொகை

பண்புத் தொகை, உம்மைத் தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய மூன்றினையும் நிலைக்களமாகக் கொண்டு அவற்றின் ஈற்றில் அமைந்து தன் பொருளை உணர்த்துவது அன்மொழித்தொகை ஆகும்.

**(எ.கா)** **வெள்ளாடை** –வெண்மையான ஆடையை உடுத்தியவள்
(பண்புத் தொகையை நிலைக்களமாகக் கொண்டு பிறந்தது வெண்மையான ஆடை அணிந்தவளைக் குறித்தது)
**தகர ஞாழல்** - தகரமும் ஞாழலும் ஆகிய சாந்து பூசியவள்
(உம்மைத் தொகை நிலைக்களமாகப் பிறந்தது)
**பொற்றாலி** – பொன்னாலாகியத்தாலி அணிந்தவள்
(வேற்றுமைத் தொகை நிலைக்களனாய்ப் பிறந்தது)
(வெள்ளாடை – வெண்மையான ஆடை என்பது பண்புத் தொகை. ஆனால் இது ஆடையைக் குறிக்காமல் ஆடையை அணிந்தவளைக் குறிப்பதால் இது அன்மொழித்தொகை ஆயிற்று.
வெள்ளாடை வந்தாள்
தகர ஞாழல் வந்தாள்
பொற்றாலி வந்தாள் என வரும்)

***நூற்பா 418***

**பண்புதொக வரூஉம் கிளவி யானும்**
**உம்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்**
**ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.**

## தொகைச் சொற்களில் பொருள் நிற்கும் இடம்

ஆறுவகையாகக் கூறப்பட்ட தொகைச் சொற்களில் 1. முன்னும், 2. பின்னும், 3. இரு சொற்களிலும், 4. பிற மொழி மேல் (அன்மொழித்தொகை) என நான்கு இடங்களில் பொருள் நிற்கும்.

**(எ.கா)** வேங்கைப்**பூ** - பூ எனும் முன்மொழியில் பொருள் நின்றது. (பூவைச் சிறப்பிக்க வேண்டி)

**அடை**கடல் - அடை எனும் பின்மொழியில் பொருள் நின்றது.

**இரவு பகல்** - இருமொழி மேலும் பொருள் நின்றது.

வெள்ளாடை **- உடுத்தவள்** எனும் பிறமொழிமேல் பொருள் நின்றது.

***நூற்பா 419***

***அவைதாம்***
***முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையிலும்***
***இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்***
***அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்***
***அந்நான் கென்ப பொருள்நிலை என்ப.***

## தொகை மொழிகளின் இயல்பு

தொகைச் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் ஆனவை. ஆனாலும் அவை பிரிந்து நிற்காமல் ஒரே சொல்லாய் நின்று பொருள் தரும் தன்மையுடையன ஆகும்.

**(எ.கா)** மதிமுகம்

**மதி, முகம்** எனும் இரு சொற்கள் மதி போன்ற முகம் எனும் பொருள் தரும் உவமைத் தொகையான போது **மதிமுகம்** எனும் ஒரு சொல்லாய் நின்றது.

***நூற்பா 420***

***எல்லாத் தொகையும் ஒருசொன் னடைய***

## உயர்திணை உம்மைத் தொகை முடிவு

உயர்திணையில் வரும் உம்மைத்தொகைச் சொல் பலர்பாலுக்குரிய இறுதியைக் கொண்டு முடிந்து விடும்.

**(எ.கா)** கபிலபரணர்

பரணன் என்னும் பெயரின் ஈற்று 'ன' கர ஒற்று 'ர'கர ஒற்றாய் மாறி பலர்பாலை உணர்த்தியது.

***நூற்பா 421***

***உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே.***
***பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்.***

வராத இயல்புடையவற்றை வருவனவாகவும் பேசாத இயல்புடையவற்றைப் பேசுவனவாகவும் கூறுவர். இவ்வாறு கூறப்படுவனவும், அவை போன்ற பிறவும் அந்தந்தப் பொருட்களின் இயல்பினைக் குறிப்பாக உணர்த்துவன (குறிப்பு மொழிகள்) ஆகும்.

**(எ.கா)** இவ்வழியே சென்றால் மதுரை வரும்.

(மதுரை வராது எனினும் வரும் எனக் குறிப்பு மொழியால் கூறப்பட்டது)

மழைமழை என்கின்ற பயிர்

(பயிர் பேசாது எனினும் பேசியதாகக் கூறப்பட்டது)

இவை வழக்கில் வருவன ஆகும்.

***நூற்பா 422***

***வாரா மரபின வரக்கூ றுதலும்***
***என்னா மரபின எனக்கூ றுதலும்***
***அன்னவை யெல்லாம் அவற்றவற் றியல்பான்***
***இன்ன என்னுங் குறிப்புரை யாகும்.***

## இசைநிறை அடுக்கு

ஒன்றுக்கு மேல் அடுக்கி வரும் என முன் கூறப்பட்ட (நூற்பா 411) இசை நிறைச் சொற்கள் நான்கு முறை வரை அடுக்கி வரும் (அதாவது இரண்டு முதல் நான்கு முறை வரை அடுக்கி வரும். அதற்கு மேல் அடுக்கி வராது.)

**(எ.கா)** பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ

***நூற்பா 423***

***இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்.***

## விரைச்சொல் அடுக்கு

விரவுப் பொருள்பட அடுக்கி வரும் விரைசொல் மூன்று முறை அடுக்கி வரும்.

**(எ.கா)** தீத்தீத்தீ, பாம்பு, பாம்பு, பாம்பு

***நூற்பா 424***

***விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும்.***

## அசைநிலை அடுக்கு

கண்டீர், கொண்டீர், சென்றீர், போயிற்று எனும் வினைச்சொற்கள், இறுதியில் வினா எழுத்துக்களைப் பெற்று வந்தால் அசைநிலையாக வரும்.

கண்டீரோ, கண்டீரோ; கொண்டீரோ, கொண்டீரோ;

சென்றதோ, சென்றதோ; போயிற்றோ, போயிற்றோ.

ஒருவன் ஒரு கருத்தைக் கூறும்போது அதனை ஏற்றுக் கொள்ளாதவன் கண்டீரோ கண்டீரோ என்பான். இது வினைச்சொல்லாகவும், வினாச்சொல்லாகவும் இல்லாமல் அசைநிலையாக வந்தது.

***நூற்பா 425***

***கண்டீர் என்றா கொண்டீர் என்றா***
***சென்றது என்றா போயிற் றென்றா***
***அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி***
***நின்றவழி அசைக்கும் கிளவி என்ப.***

கேட்டை, நின்றை, காத்தை, கண்டை எனும் நான்கு முன்னிலைச் சொற்களும் முன்னிலைப் பொருள் உணர்த்தாமல் வரும் போது மேற்கூறிய (நூற்பா 425) சொற்களைப் போல அசைநிலைகளாக வரும்.

***நூற்பா 426***

***கேட்டை என்றா நின்றை என்றா***
***காத்தை என்றா கண்டை என்றா***
***அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி***
***முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே.***

## முற்றுச் சொற்கள்

முற்றுச்சொல் 1. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனும் மூன்று காலத்தையும் காட்டும். 2. தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூன்று இடங்களிலும் வரும். 3. உயர்திணை, அ.்றிணை, விரவுத்திணை ஆகிய பொருள்களில் தெரிநிலைவினை, குறிப்புவினை எனும் இரண்டாகவும் வரும். தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடங்களிலும் குறிப்பு வினை எனும் இரண்டு நிலைகளிலும் வரும். அறுவகைச் சொற்களும் முற்றுச்சொல் எனப்படும்.

| **தெரிநிலை** | **குறிப்பு** | **இடம்** |
|---|---|---|
| உண்டேன் | கரியன் | தன்மை |
| உண்டாய் | கரியை | முன்னிலை |
| உண்டனன் | கரியன் | படர்க்கை. |

***நூற்பா 427***

***இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்***
***சிறப்புடை மரபின் அம்முக் காலமும்***

**தன்மை முன்னிலை படர்க்கை என்னும்**
**அம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினும்**
**மெய்ம்மை யானும் இவ்விரண் டாகும்**
**அவ்வா றென்ப முற்றியன் மொழியே.**

தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடங்களிலும், தெரிநிலையாகவும் (வெளிப்படையாகவும்), குறிப்பாகவும் காலம் காட்டுவது முற்றுச்சொல்லாகும். மேற்கூறிய இவ்விதியினுள் (நூற்.427) அடங்காமல் பிற இடங்களில் வரும் முற்றுச் சொற்களும் உண்டு.

**(எ.கா.)** யார், எவன், இல்லை, வேறு எனும் சொற்கள் இடம் உணர்த்தாமல் மூன்று இடத்திற்கும் பொதுவாக நின்றன. எனவே இவை முற்றின் இயல்பைப் பெற்றன.

***நூற்பா.428***

**எவ்வயின் வினையும் அவ்வியல் நியையும்**

வினைமுற்றுச் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை அடுக்கி வந்தாலும் இறுதியில் ஒரு பெயரைக் கொண்டே முடியும்.

**(எ.கா.)** உண்டான், தின்றான், ஓடினான், பாடினான் சாத்தான்

***நூற்பா. 429***

**அவைதாம்**
**தத்தம் கிளவி அடுக்குந வரினும்**
**எத்திறத் தானும் பெயர்முடி பினவே.**

## எச்சங்களின் வகைகள்

ஒரு சொல்லைக் கொண்டு முடிவதற்காக எஞ்சி நிற்கும் சொல் அல்லது தொடர்மொழி எச்சம் எனப்படும்.

*1. பிரிநிலை. 2. வினை, 3. பெயர், 4. ஒழியிசை, 5. எதிர்மறை, 6. உம்மை, 7. என, 8. சொல், 9. குறிப்பு, 10. இசை என எச்சம் 10 வகைப்படும்.*

***நூற்பா.430***

**பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை**
**எதிர்மறை உம்மை எனவே சொல்லே**
**குறிப்பே இசையே யாயீ ரைந்தும்**
**நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி**

## *1. பிரிநிலை எச்சம்*

பிரிக்கப்பட்ட பொருளைக் கொண்டு முடியும் எச்சம் பிரிநிலை எச்சம் எனப்படும். இது ஏகாரப் பிரிநிலை. ஓகாரப் பிரிநிலை என இரு வகைப்படும்.

**(எ.கா.)** அவனே கொண்டான் (ஏகாரம்)

அவனோ கொண்டான் (ஓகாரம்)

இச்சொற்கள் பிறர் கொள்ளவில்லை எனப் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லால் முடிந்தன.

***நூற்பா.431***

***அவற்றுள்***
***பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின.***

## *2. வினையெச்சம்*

தெரிநிலை வினையையும், குறிப்பு வினையையும் முடிக்கும் சொல்லாகப் பெற்று வருவது வினையெச்சமாகும். வினையெச்சம் குறிப்பு வினையைக் கொண்டு முடிந்து வரும் போது ஆக்கச் சொல் பெற்று வரும்.

**(எ.கா.)** உழுது வந்தான் - தெரிநிலை வினை

மருந்து உண்டு நல்லனாயினான் - குறிப்பு வினை

நல்லன் - குறிப்பு வினை

ஆயினான் - ஆக்கச்சொல்

***நூற்பா.432***

***வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்***
***நினையத் தோன்றிய முடிபா கும்மே***
***யாவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே.***

## *3. பெயரெச்சம்*

பெயரைக் கொண்டு முடிந்து வருவது பெயரெச்சம் ஆகும்.

**(எ.கா.)** உண்ட சாத்தான்

உண்ணும் சாத்தான்

***நூற்பா.433***

***பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.***

## *4. ஒழியிசை எச்சம்*

ஒழிந்தது (கழிந்தது) என்ற பொருளில் வரும் மன், தில், ஓ எனும் சொற்களைத் தழுவி வருவது ஒழியிசை எச்சமாகும்.

**(எ.கா)** கூட கூரியதோர் வாள்**மன்** - வலிமையற்ற வாள்

வருவ**தில்** அம்ம எம் சேரி வர - வந்தால் இன்னது செய்வேன்

கொளலோ கொண்டான் - கொண்டு உய்யும்வழி அறியாதவன்

***நூற்பா.434***

***ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின***

## *5. எதிர்மறை எச்சம்*

எதிர்மறைப் பொருளை உணர்த்தும் சொல்லைக் கொண்டு முடிவது எதிர்மறை எச்சம். ஏகாரம், ஓகாரம், உம் எனும் எதிர்மறைப் பொருளைத் தரும்.

(எ.கா.) யானே கொள்வேன் - (யான் கொள்ள மாட்டேன்)

யானோ கள்வன் (யான் கள்வன் அல்லன்)

வரலும் உரியன் (வராமையும் உரியன்)

***நூற்பா. 435***

***எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.***

### *6. உம்மை எச்சம்*

ஒன்றையொன்று தொடர்புடைய இரு தொடர்களால் அமைவது உம்மை எச்சமாகும். அவ்விரு தொடர்களையும் முடிக்கும் சொல் ஒன்றாகவே வரும்.

**(எ.கா.)** சாத்தானும் வந்தான்; கொற்றனும் வந்தான்.

(வந்தான் எனும் ஒரு முடிவு பெற்றன.)

***நூற்பா.436***

***உம்மை எச்சம் இருவீற் றானும்***
***தன்வினை யொன்றிய முடிபா கும்மே.***

உம்மை எச்சத்தின் முன்னர் முடிக்கும் சொல் உம்மை இல்லாத சொல்லாய் (செஞ்சொல்) வரும் போது, நிகழ்காலத்தோடு எதிர்காலமும், இறந்த காலத்தோடு எதிர்காலமும் மயங்கி (கலந்து) வரும். அதனை நீக்காமல் ஏற்றுக் கொள்வர்

**(எ.கா.)** கூழ் உண்கின்றான்; சோறும் உண்பன்

(நிகழ்காலமும் எதிர்காலமும் மயங்கியது)

கூழ் உண்டான்; சோறும் உண்பன்

(இறந்தகாலம் எதிர்காலத்துடன் மயங்கியது.)

***நூற்பா.437***

***தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை***
***நிகழுங் காலமொடு வாராக் காலமும்***
***இறந்த காலமொடு வாராக் காலமும்***
***மயங்குதல் வரையார் முறைநிலை யான.***

## 7. 'என' வென் எச்சம்

*'என' வெனும் எச்சம் வினையைக் கொண்டு முடியும்.*

**(எ.கா)** *கொள்ளெனக் கொடுத்தான்*
*காரெனக் கறுத்தது.*

***நூற்பா.438***

***எனவென் எச்சம் வினையொடு முடிமே.***

## ஏனைய எச்சங்கள்

*கூறப்பட்ட ஏழும் தவிர எஞ்சிய மூன்று எச்சங்களும் இறுதியில் நின்று முடிக்கும் சொற்களை உடையவை அல்ல.*

***நூற்பா.439***

***எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்***
***எஞ்சு பொருட்கிளவி இலவென மொழிப***

## குறிப்பால் பொருள் உணர்த்துவன

*முடிக்கும் சொல்லை ஏற்காத எச்சங்களாகிய 8. சொல்லெச்சம், 9. குறிப்பெச்சம். 10. இசையெச்சம் எனும் மூன்றும் சொல்லுபவனுடைய குறிப்பால் எச்சப் பொருளை உணர்த்துவன ஆகும்.*

## 8. சொல்லெச்சம்

*ஒரு தொடருக்கு முன்போ பின்போ ஒரு சொல் மட்டும் எஞ்சி நிற்பது சொல்லெச்சம். ஆனால் அது தொடராய் நின்று எச்சப் பொருள் தருவதில்லை.*

**(எ.கா.)** *உயர்திணை என்மனார்*

*இதில் ஆசிரியர் எனும் சொல் எஞ்சி நின்றது. (உயர்திணை என்மனார் ஆசிரியர் எனும் பொருள் தந்தது)*

## *9.* குறிப்பெச்சம்

குறிப்பால் எச்சப் பொருள் தருவது.

**(எ.கா.)** இளையதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விட்டது.

முள் மரத்தைச் சிறியதாக இருக்கும் போதே அழித்து விட வேண்டும். இல்லையெனில் வளர்ந்தபின் வெட்டுபவரை வீழ்த்திவிடும் என்பது இப்பாடலின் கருத்து. ஆனால் தீயவரை உடனே அழித்துவிட வேண்டும் எனும் குறிப்புப் பொருளைத் தந்ததால் இது குறிப்பெச்சம் ஆகும்.

## *10.* இசையெச்சம்

இசைப்பொருள் எஞ்சிநிற்பது இசையெச்சம்

**(எ.கா.)** அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாகும். அதுபோல இவ் உலகிற்கு இறைவன் முதலாவான் என்பது இக்குறளின் கருத்து. இதில் ‘அதுபோல’ எனும் சொல் எஞ்சி நின்று இசைப் பொருள் உணர்த்தியது.

***நூற்பா 440***.

***அவைதாம்***
***தத்தங் குறிப்பின் எச்சஞ் செப்பும்.***

***441.***

***சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்***
***சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே.***

## இடக்கர்ச் சொல்

நல்லோர் அவையில் கூறத்தகாத இடக்கர்ச் சொற்களை மறைத்துத் தகுதியுடைய வேறு சொற்களால் கூற வேண்டும்.

**(எ.கா)** கால் மேல் நீர் பெய்து வருதும்.

***நூற்பா 442***

***அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்***

மறைத்துச் சொல்ல வேண்டிய இடக்கர்ச் சொற்கள் நீண்டகாலமாக மருவி வழங்கி வருவதும் உண்டு. அச்சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**(எ.கா)** ஆட்டுப் பிழுக்கை, ஆப்பி

***நூற்பா 443***

***மறைக்குங் காலை மரீஇய தொராஅல்***

## ஈ, தா, கொடு எனும் சொற்கள்

ஈ, தா, கொடு எனும் சொற்கள் ஒருவர் ஒருபொருளை இரக்குமிடத்து (கேட்குமிடத்து) சொல்லுவதற்கு உரியனவாகும்.

***நூற்பா 444***

**ஈ தா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்**
**இரவின் கிளவி யாகிட னுடைய.**

அவற்றுள் 'ஈ' எனும் சொல் இழிந்தோன் (தாழ்ந்தவன்) கூறுவதற்குரியது.

**(எ.கா)** அரசே சோறு ஈ,
உடுக்கை ஈ

***நூற்பா 445***

***அவற்றுள்***
**ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே.**

தா எனும் சொல் ஒத்த நிலையில் உள்ளவனிடம் கேட்பதற்குரியது.

**(எ.கா)** நண்பனே ஆடை தா.

***நூற்பா 446***

**தாவென் கிளவி ஒப்போன் கூற்றே**

கொடு எனும் சொல் உயர்ந்தவன் தன்னைவிடத் தாழ்ந்தவனிடம் கேட்பதற்குரியது.

**(எ.கா)** புத்தகம் கொடு (ஆசிரியர் மாணவரிடம்)

***நூற்பா 447***

**கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே.**

கொடு எனும் சொல் படர்க்கை இடத்திற்கு உரியது. எனினும் கூறுபவன் தன்னைப் வேறொருவன் போலக் கூறுகின்ற போது தன்மை இடத்திற்கும் வரும்.

**(எ.கா)** எனக்கு உணவு கொடு

***நூற்பா 448***

**கொடுவென் கிளவி படர்க்கை யாயினுந்**
**தன்னைப் பிறன்போற் கூறும் குறிப்பில்**
**தன்னிடத் தியலும் என்மனார் புலவர்.**

## இலக்கண வரையறுக்கு உட்படாதவை

1. ஒரு திணைப்பெயர் வேறொரு திணையைக் குறித்து வருவது.

**(எ.கா)** கிளியை நங்கை என்பது

2. திசைச்சொல்லில் வாய்பாடு திரிந்து வருவது.

**(எ.கா)** புலியான், பூசையான்

குறிப்பிட்ட பகுதியில் மட்டும் வழங்குவன)

3. பழமொழிகளில் பொருத்தமில்லாதவற்றைப் பொருத்திக் கூறுவது

**(எ.கா)** ஆற்றுள் செத்த எருமையைப் புதைத்தல்

ஊர்க்குயவர்க்குக் கடன்

4. பொருள் மயக்கம் தரும் விடுகதைகளில் திணை முதலானவை திரித்துக் கூறப்படுவது.

**(எ.கா)** அப்பன் சொறியன், ஆத்தாள் சடைச்சி,

அவர்கள் பிள்ளையே சர்க்கரைக்கட்டி.

பலாப்பழத்தைக் குறித்து வரும் இது உயர்திணை போல கூறப்பட்டுள்ளது.

5. மந்திரங்களைக் கூறும்போது அப்பொருள்களுக்கு உரிமையல்லாத சொற்களைக் கூறுவதும்

**(எ.கா)** நமசிவாய

ந – மண்ணைச் சுமந்தவன்

ம – வரதராசன்

சி – வரகாலிமூன்று

வா - இரண்டுமரம்

ய - ஓர் ஆறு

ஆகியவை அனைத்தும் வழக்கமாக வழங்கி வரும் முறைப்படியே வரும். இவற்றிற்கு இலக்கண வரையறை எதுவும் இல்லை.

**நூற்பா 449**

**பெயர்நிலைக் கிளவியி னாஅ குநவுந்**
**திசைநிலைக் கிளவியி னாஅ குநவுந்**
**தொன்னெறி மொழிவயி னாஅ குநவும்**
**மெய்ந்நிலை மயக்கி னாஅ குநவும்**
**மந்திரப் பொருள்வயினாஅ குநவும்**
**அன்றி யனைத்துங் கடப்பா டிலவே.**

## செய்யாய் எனும் சொல்

செய்யாய் எனும் வாய்ப்பாட்டால் வரும் முன்னிலை வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் உள்ள 'ஆய்' என்னும் விகுதி கெட்டுச் செய் என நிற்பதும் உண்டு.

**(எ.கா)** உண்ணாய் - உண்
போவாய் - போ

***நூற்பா 450***

**செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொல்**
**செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.**

## ஈ, ஏ எனும் முன்னிலை ஈறுகள்

நிலைமொழியில் முன்னிலை வினைச்சொல் நிற்க வருமொழியில் வரும் ஈகார, ஏகார இடைச்சொற்கள் முன்னிலைமொழிக்கு ஏற்ற மெய்யெழுத்தின் மேல் ஊர்ந்து (சேர்ந்து) வரும்.

**(எ.கா)** சென்றீ பெரும நின் தகைக்குநர் யாரோ (ஈகாரம்)
செல் + ஈ – செல் + ற் + ஈ – சென்றீ
அட்டி லோலை தொட்டனை நின்மே
நில் + ஏ – நில் + ம் + ஏ – நின்மே

***நூற்பா 451***

**முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.**

## புதிய சொற்கள்

காலத்திற்கு ஏற்பப் புதிதாகத் தோன்றி வழக்கிற்கு வரும் பொருத்தமான சொற்களை, (பழமையான சொற்கள் அல்ல எனும் காரணத்தால்) நீக்குதல் கூடாது. ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**(எ.கா)** சண்டை, சட்டி, சமர்.
இலக்கணப்படி 'ச' கரம் மொழி முதலில் வராது)

***நூற்பா 452***

**கடிசொல் இல்லைக் காலத்துப் படினே**

## குறைச் சொற்கள்

குறைத்துச் சொல்ல வேண்டிய இடமறிந்து சொற்களைக் குறைத்துச் சொல்ல வேண்டும். (செய்யுள் விகாரத்தில் ஏற்கனவே குன்றக் கூறல் கூறப்பட்டது)

**(எ.கா)** மரையிதழ் - தா மரையிதழ் - என்பது மரையிதழ் எனவந்தது.

- முதற்குறை

ஓதி முதுபோத்து – ஓந்தி என்பது ஓதி என வந்தது.

- இடைக்குறை

நீல் உண் துகிலினை – நீலம் என்பது நீல் என வந்தது.

- கடைக்குறை.

***நூற்பா 453***

**குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்**

மேற்கூறியது போல குறைந்து வரும் சொற்கள் முழுச் சொற்கள் உணர்த்தும் பொருளையே உணர்த்தும்.

***நூற்பா 454***

**குறைந்தன ஆயினும் நிறைப்பெய ரியல**

## இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் எல்லாம் வேற்றுமைச் சொற்களாகும். (பெயர் வினைகளைச் சார்ந்து நின்று பொருள் வேறுபடுத்தும்)

***நூற்பா 455***

**இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.**

## உரிச்சொற்கள்

(இடைச்சொற்களைப் போலவே) உரிச்சொற்களிலும் பொருள் வேறுபடுத்துவதற்கு உரியன உண்டு.

உறு, தவ, நனி – வேறுபடுத்தும் சொற்கள்

***நூற்பா 456***

**உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய**

## வினை எச்சங்கள்

வினையெச்சம் முன்பு கூறப்பட்ட இலக்கணமே அன்றி வேறுபல இலக்கணங்களையும் பெற்று வரும்.

**(எ.கா)** ஞாயிறு பட்டு வந்தான்.
(தன்வினையில் முடிய வேண்டியது பிறவினை கொண்டு முடிந்தது)

***நூற்பா 457***

**வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.**

## தொடர்மொழிகள்

வழக்கில் சேர்ந்து நிற்கக் கூடாத சொற்கள் இணைந்து வருவதும் உண்டு. அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**(எ.கா)** இப்பானைக்கு இப்பானை சிறிது பெரிது.
(சிறிது பெரிது எனும் சொற்கள் இணைந்து நின்றன).

***நூற்பா 458***

**உரையிடத் தியலும் உடனிலை அறிதல்.**

## குறிப்பால் உணர்வன

சொல்லால் பொருளின் தன்மையை அறிய முடியும். அவ்வாறு இல்லாமல், சொல்பவனுடைய குறிப்பினால் பொருள் அறியப்படும் சொற்களும் உண்டு.

செஞ்செவி – பொன்னும், மணியும் அணிந்த செவி.
(செல்வமகள்)

***நூற்பா 459***

**முன்னத்தின் உணருங் கிளவியும் உளவே**
**இன்ன வென்னும் சொன்முறை யான.**

## ஒருபொருள் உணர்த்தும் இருசொற்கள்

பொருள் வேறுபாடின்றி ஒருபொருள்மேல் வரும் பொருள் இரு சொற்கள் பிரிந்து நில்லாமல் தொடர்ந்து வருவது உண்டு. அவற்றையும் எற்றுக்கொள்ள வேண்டும்.

**(எ.கா)** *மீமிசை ஞாயிறு, மீ – மேல், மிசை – மேல்*

***நூற்பா 460***

**ஒருபொருள் இருபொருள் பிரிவில வரையார்.**

## ஒருமை பன்மைக்கு ஆதல்

ஒருமை உணர்த்தும் பெயர்ச்சொல், பன்மையை உணர்த்தி வருவதும் உண்டு.

***(எ.கா)*** ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப.

தாய் எனும் ஒருமைச் சொல் (இளையர் என்பதற்கேற்ப) தாயர் எனும் பன்மைப் பொருள் தந்தது.

***நூற்பா 461***

***ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி***
***பன்மைக் காகும் இடனுமா ருண்டே.***

## முன்னிலை ஒருமை பன்மையொடு முடிதல்

ஆற்றுப்படைச் செய்யுளில் முன்னிலையில் ஒருமையை உணர்த்தும் சொல் பன்மைச் சொல் கொண்டு முடிந்து வருவதும் உண்டு.

***(எ.கா)*** கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ.

………..பதமிகப் பெறுகுவீர்

தலைவ எனும் ஒருமை, பெறுகுவீர் எனும் பன்மை கொண்டு முடிந்தது.

***நூற்பா 462***

***முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி***
***பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே***
***ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்***

# சொல்லதிகாரத்திற்குப் புறனடை

செய்யுள் வழக்கிற்கும், உலக வழக்கிற்கும் பொருள் விளங்க கூறப்பட்ட சொற்கள் எல்லாம் கூறப்பட்ட விதிகளுக்குள் அடங்குவதில்லை.

கூறப்பட்ட விதிகளை முன்னோர் நூல்களின் துணைகொண்டு சொல்லின் தன்மையை வரையறை செய்து, வேறுபடுத்தி உணரும் ஆற்றலால் பிரித்துக் காட்ட வேண்டும். (சொல்லின் தன்மை, வருகின்ற இடத்திற்கேற்ப உணர்ந்து பொருள் கொள்ள வேண்டும்)

***நூற்பா 463***

***செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்***

**மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்**
**பல்வேறு செய்தியின் நூனெறி பிழையாது**
**சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.**

----------
----

**குறிப்பு :**

தொல்காப்பிய நூற்பா எண்கள் நூற்பாக்களின் அருகில் போடப்பட்டுள்ளன. வினாக்களுக்குப் பொருத்தமான நூற்பாக்கள் அந்தந்த இடங்களில் தரப்பட்டுள்ளதால் நூற்பாக்கள் வரிசைப்படி இல்லாமல் சில இடங்களில் மாறிவந்துள்ளன.

**பாடநூல் :**

**தொல்காப்பியம் - சொல்லதிகாரம் சேனாவரையர் உரை, கழக வெளியீடு, சென்னை.**

**முனைவர் இரா.ச.சுகிர்தா பஸ்மத்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி,
திருநெல்வேலி – 8.
செல் : 9488080540
மின்அஞ்சல் :basmathv.raj@gmail.com

# வினாக்கள்

1. தொல்காப்பியரின் திணை, பால் பகுப்பு முறையைச் சுட்டுக. (நூ.1 -3)
2. பலர்பாலை உணர்த்தும் ஈறுகள் யாவை? (நூ. 7)
3. அஃறிணைக்குரிய ஈறுகளைக் குறிப்பிடுக. (நூ. 8 - 9)
4. பேடியைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்? (நூ. 12)
5. வழுக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (நூ. 11)
6. வழக்கின் வகைகள் யாவை? (நூ. 17)
7. இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயரை எவ்வாறு கூற வேண்டும்? (நூ. 18)
8. வண்ணச் சினைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக? (நூ. 26)
9. வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவிக்குச் சான்று தருக? (நூ. 27)
10. படர்க்கை இடத்திற்குரிய சொற்கள் யாவை? (நூ. 30)
11. மன்னாப் பொருளும் அன்ன இயற்றே - விளக்குக. (நூ. 33 - 34)
12. இயற்பெயரையும் சுட்டுப் பெயரையும் எவ்வாறு கூற வேண்டும்? (நூ. 38)
13. வேறுவினைப் பொதுச்சொல்லைக் கூறும் முறை யாது? (நூ. 46)
14. இரட்டைக் கிளவியின் இயல்பு யாது? (நூ. 48)
15. பலபொருள் ஒருசொல்லின் வகைகள் யாவை? (நூ. 52)
16. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை? (நூ. 64)
17. எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகள் யாவை? (நூ. 66)
18. தொழில்நிலை ஒட்டு என்றால் என்ன? (நூ. 70)
19. மூன்றாம் வேற்றமைக்குரிய பொருள்கள் யாவை? (நூ. 73)
20. தற்கிழமை, பிறிதின் கிழமைக்குரிய வேற்றுமைகள் யாவை? (நூ. 79)
21. கருமமல்லாச் சார்பு என்றால் என்ன? விளக்குக. (நூ. 84)
22. முதல், சினைப் பொருள்களில் மயங்கும் வேற்றுமைகள் யாவை? (நூ. 85 - 89)
23. பிண்டப்பெயர் என்றால் என்ன? விளக்குக. (நூ. 90)
24. ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே - விளக்கம் தருக. (நூ. 91)
25. நோக்கல் பொருளில் மயங்கும் உருபுகள் யாவை? (நூ. 93)
26. ஆறாம் வேற்றமை உயர்திணைத் தொகையை விரிக்கும் முறை யாது? (நூ. 94)
27. தடுமாறு தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக. (நூ. 95)

28. ஓம்படைக் கிளவியில் மயங்கும் உருபுகள் யாவை? (நூ. 97)
29. வாழ்ச்சிக் கிழமையில் மயங்கும் உருபுகள் யாவை? (நூ. 98)
30. குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி என்றால் என்ன? (நூ. 99)
31. அச்சக் கிளவிக்குரிய உருபுகளைக் குறிப்பிடுக. (நூ. 100)
32. ஈற்றில் மறைந்து நிற்கும் உருபுகளைச் சுட்டுக. (நூ. 105)
33. செய்யுளில் அகரம் பெற்றுத் திரியும் உருபுகள் யாவை? (நூ. 108)
34. விளியேற்கும் உயிரீறுகள், மெய்யீறுகள் யாவை? (நூ. 120, 128)
35. இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும் - சான்று தருக? (நூ. 121)
36. அண்மைச் சொல் எவ்வாறு விளி கொள்ளும்? (நூ. 127,131)
37. ஆன் என் இறுதி இயற்கையாவதற்குச் சான்று தருக? (நூ. 132)
38. மெய்யீற்று முறைப்பெயர்க் கிளவி எவ்வாறு விளியேற்கும்? (நூ.136, 147)
39. னகர ஈற்றில் விளியேலாப் பெயர்கள் யாவை? (நூ. 137)
40. விளியேற்கும் அசைச்சொல் யாது? (நூ. 133)
41. சொற்கள் பொருள் உணர்த்துதலின் வகைகள் யாவை? (நூ. 157)
42. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (நூ. 158,159)
43. நம்மூர்ந்து வரூஉம் இகர, ஐகார ஈற்றுப் பெயர்கள் யாவை? (நூ. 163)
44. கூடி வரும் வழக்கின் ஆடியற் பெயர் என்றால் என்ன,(நூ. 165)
45. பலவின்பாலை உணர்த்தும் பெயரீறு யாது? (நூ. 169)
46. சினைமுதற்பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (நூ. 178)
47.ஒருவர் என்னும் பெயர் உணர்த்தும் பால்கள் யாவை? (நூ. 191)
48. மகடூஉ மருங்கின பால்திரி கிளவி - விளக்குக(நூ. 194)
49. செய்யுளில் ஆ ஓ ஆகும் பெயர்கள் யாவை? (நூ. 195)
50. காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (நூ. 199 - 200)
51. தன்மைப் பன்மை வினைமுற்றுக்களைச் சுட்டுக. (நூ. 202)
52. உயர்திணைப் படர்க்கை ஒருமை வினமுற்றுக்கள் யாவை? (நூ. 205)
53. உயர்திணை முப்பாலுக்கும் உரிய வினைமுற்று விகுதி யாது? (நூ. 210)
54. பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை? (நூ. 216)
55. எவன் என்னும் குறிப்பு வினைமுற்று உணர்த்தும் பால்கள் யாவை? (நூ. 219)
56. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை? (நூ. 224)
57. வினைமுதல் வினைகொண்டு முடியும் எச்சங்கள் யாவை? (நூ. 230)

58. செய்யுளில் செய்யும் என்னும் வாய்பாட்டுச்சொல் எவ்வாறு திரியும்? (நூ. 238)
59. காலம் மயங்குவதற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக? (நூ. 239 - 241)
60. ஏனைக் காலமும் மயங்குதல் வரையார் - விளக்குக. (நூ. 248)
61. மன் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை? (நூ. 252)
62. உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை? (நூ. 255)
63. ஓகார இடைச்சொல் எவ்வப் பொருள்களைத் தரும்? (நூ. 256)
64. ஏகார இடைச்சொல்லுக்குரிய பொருள்கள் யாவை? (நூ. 257)
65. தஞ்சம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள் யாது? (நூ. 266)
66. இசைநிறை, அசைநிலையாய் வரும் இடைச்சொற்கள் யாவை? (நூ. 272)
67. எண்ணுதற் பொருளில் வரும் இடைச்சொற்கள் யாவை? (நூ. 289)
68. உரிச்சொல் உணர்த்தும் மூவகைப் பொருள்கள் யாவை? (நூ. 297)
69. மிகுதிப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை? (நூ. 299)
70. நிறப்பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை? (நூ. 301)
71. பெருமைப் பொருள் தரும் உரிச்சொற்கள் யாவை? (நூ.320)
72. மழ, குழ உணர்த்தும் பொருள் யாது? (நூ. 311)
73. உகப்பு, உவப்பு என்னும் உரிச்சொற்களுக்குப் பொருள் தருக? (305)
74. பயப்பு, பசப்பு – தரும் பொருள்கள் யாவை? (நூ. 306,307)
75. தெவு, தெவ்வு உணர்த்தும் பொருள்கள் யாவை? (நூ. 345,346)
76. ஓசைப் (அரவப்) பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை? (நூ. 349)
77. உயா, உசா – உணர்த்தும் பொருள்கள் யாவை? (நூ. 369,370)
78. வெகுளிப் பொருளில் வரும் உரிச்சொற்கள் யாவை? (நூ. 372)
79. மத என்னும் உரிச்சொல் எத்தனை பொருளில் வரும்? (நூ. 377,378)
80. செய்யுள் ஈட்டச் சொற்கள் யாவை? (நூ. 397)
81. பொருள்கோளின் வகைகளைச் சுட்டுக? (நூ. 404)
82. ஒருசொல் அடுக்குகள் எவ்வப் பொருள்களில் வரும்? (நூ. 411)
83. தொகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? (நூ. 412)
84. உம்மைத் தொகை பொருந்தி வரும் பெயர்கள் யாவை? (நூ. 417)
85. தொகைகளில் பொருள் சிறக்கும் இடங்கள் யாவை? (நூ. 419)
86. இடக்கர்ச் சொல்லைக் கூறும் முறை யாது? (நூ. 442,443)
87. இரத்தல் பொருளில் வரும் சொற்கள் யாவை? (நூ. 444)

88. பிரிப்பப் பிரியாப் பெயர்கள் யாவை? (நூ. 450)

89. கடிசொல் இல்லைக் காலத்துப் படினே - விளக்குக? (நூ. 452)

90. சொற்களில் குறைத்துக் கூறும் இடங்கள் யாவை? சான்றுடன் விளக்குக? (நூ.456)

**பத்தி வினாக்கள்**

1. ஈற்றில் நின்று பாலுணர்த்தும் ஈறுகளுக்குச் சான்று தருக?
2. வழுக்களின் வகைகளைச் சான்று தந்து நிறுவுக.
3. வினா, விடைகளின் வகைகள் பற்றி விளக்குக.
4. இயற்கை, செயற்கைப் பொருள்களைக் சுறும் முறையினை விளக்குக.
5. இடவழுவமைதி குறித்துத் தொல்காப்பியர் கூறும் முறையினை விளக்குக.
6. பெயர்கள் அமையும் முறை குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள் யாவை?
7. பலபொருள் ஒருசொல் பற்றி விளக்குக.
8. தகுதி வழக்கு, இயல்பு வழக்கு பற்றி நீவிர் அறிவன யாவை?
9. எழுவாய் வேற்றுமை பற்றித் தொல்காப்பியர் கூறுவன யாவை?
10. இரண்டாம் வேற்றுமையின் பாகுபாட்டை விளக்குக.
11. ஆறாம் வேற்றுமையின் பாகுபாட்டை விளக்குக.
12. வேற்றுமை மயக்கத்தின் வகைகளை எடுத்துக்காட்டுத் தந்து நிறுவுக.
13. நான்கன் உருபால் தோன்றும் பிற உருபுகளை விளக்குக.
14. தொழில் முதல்நிலைகளைச் சான்று தந்து விளக்குக.
15. விளியேற்கும் பெயர்களைச் சான்று தந்து நிறுவுக.
16. விளியேலாப் பெயர்கள் பற்றி நீவிர் அறிவன யாவை?
17. நால்வகைச் சொற்களின் பொதுவிலக்கணமாகப் பெயரியல் கூறும் செய்திகள் யாவை?
18. தொல்காப்பியர் கூறும் உயர்திணைப் பெயர்களுக்குச் சான்று தருக.
19. அ∴றிணைப் பெயர்களாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
20. தம்மை உணர்த்தும் பெயர்கள் பால் காட்டுதலை விளக்குக.
21. உயர்திணைக்குரிய தெரிநிலை வினைமுற்றுக்கள் யாவை?
22. அ∴றிணைக் குறிப்புவினை பற்றி விளக்குக.
23. காலமயக்கம் பற்றி வினையியல் கூறும் கருத்துக்கள் யாவை?
24. தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்களை விளக்கி வரைக.

25. இடையியல் கூறும் அசைநிலைகள் குறித்து விளக்குக.
26. ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களுக்குச் சான்று தருக.
27. உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்குக.
28. பலசொற்கள் ஒருபொருள் குறிப்பதைச் சான்று தந்து விளக்குக?
29. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?
30. உரிச்சொல்லின் பொருள் அறியும் முறையை விளக்குக.
31. செய்யுளுக்குரிய நால்வகைச் சொற்கள் பற்றி விளக்குக.
32. அறுவகைச் செய்யுள் விகாரங்களைச் சான்று காட்டி நிறுவுக.
33. நால்வகைப் பொருள்கோள்களை எடுத்துக்காட்டின் வழி விளக்குக.
34. சொல்லடுக்குகள் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள் யாவை?
35. எச்சவியல் கூறும் வினைமுற்றின் இலக்கணத்தை விளக்குக.
36. இலக்கண வரையறைக்கு உட்படாத வழக்குகள் யாவை?

**கட்டுரை வினாக்கள்**

1. திணை, பால் வழுவமைதி பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.
2. மரபு வழுவமைதி குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. செப்பு, வினா பற்றிக் கிளவியாக்கம் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
4. ஐந்தாம் வேற்றுமையின் இலக்கணத்தையும் அதன் பாகுபாடுகளையும் விவரிக்க.
5. வேற்றுமையியல் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
6. பொருள் மயக்கம் குறித்து கட்டுரை வரைக.
7. ஆகுபெயரின் பாகுபாடுகளைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக
8. விளியேற்கும் பெயர்களையும் அவை விளியேற்கும் முறையினையும் பற்றி ஒரு கட்டுரை வரைக
9. உயர்திணைப் பெயர்கள் விளியேற்றலைச் சான்று தந்து நிறுவுக
10. விளியேலாப் பெயர்களைத் தொகுத்தெழுதுக
11. பெயரியல் கூறும் உயர்திணைப் பெயர்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
12. தொல்காப்பியரின் விரவுப்பெயர்ப் பாகுபாட்டைச் சான்று தந்து நிறுவுக.
13. வினையியல் கூறும் எச்சங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
14. வினையியல் கூறும் கால வழுவமைதியைத் தொகுத்தெழுதுக.

15. விரவுவினை குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
16. இடைச்சொல்லின் பொதுவிலக்கணத்தையும் அதன் வகைகளையும் விளக்குக.
17. இடையியல் கூறும் எண்ணிடைச் சொற்கள் குறித்து ஓர் கட்டுரை வரைக.
18. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தையும் அதன் வகைகளையும் அவை பொருளுணர்த்தும் முறையினையும் சான்று காட்டி நிறுவுக.
19. உரிச்சொற்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
20. எச்சவியல் கூறும் தொகைச் சொற்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
21. பத்துவகை எச்சங்களைத் தக்க சான்று காட்டி நிறுவுக.
22. மரபிலக்கணத்தின் ஒழிபாக எச்சவியல் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
23. எச்சவியல் கூறும் செய்யுள் ஒழிபுகளைத் தொகுத்தெழுதுக.

## B.Litt. DEGREE EXAMINATION- NOVEMBER 2011.

## First /second Year – Non – semester

## Tamil – Main

### தாள் VII - இலக்கணம் IV – தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

**Time : Three hours** **Maximum : 100 marks**

**பகுதி அ – (5×5 = 25 மதிப்பெண்கள்)**

**கீழ்க்கண்ட எட்டு வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. இருதிணை ஐம்பால் குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?
2. தகுதி வழக்கு, இயல்பு வழக்கு பற்றி எழுதுக.
3. வேற்றுமை மயங்கியல் பெயர்க்காரணம் தருக.
4. உயர்திணைப்பெயர்களில் வரும் உயிரீறுகள் எவ்வாறு திரியும் விளக்குக.
5. பெயர்ச்சொல்லின் இலக்கணம் பற்றி எழுதுக.
6. உயர்திணைப் பெயர்கள் கூறும் கருத்தினை விளக்குக.
7. இடையியலின் பெயர்க்காரணம் தருக.
8. உரிச்சொற்களின் பொருள்பற்றி எழுதுக.

**பகுதி – ஆ (5 ×15 = 75)**

**பின்வரும் எட்டு வினாக்களில் ஏதேனும் ஐந்தினுக்கு மட்டும் விடையளி.**

9. கிளவியாக்கம் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
10. தொல்காப்பியர் வேற்றுமையியலில் கூறும் கருத்துக்களைக் கட்டுரைக்க.
11. உருபுமயக்கம் பற்றி கட்டுரை வரைக.
13. வினையெச்ச வாய்பாடுகளை விவரிக்க.
14. இடையியலில் காணலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
15. எச்சங்களின் வகைகளைக் கூறி சான்றுடன் விளக்குக.
16. சேனாவரையர் கையாண்டுள்ள மொழிநடைகள் பற்றி கட்டுரை வரைக.